# உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

முனைவர் இரா. சிவகுமார்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

# உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

முனைவர் இரா. சிவகுமார்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

பெருந்தலைவர் காமராசர் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : நாடார் மகாசனசங்கம், மதுரை)
வரிசை எண் : 10 நாள் 19.2.2013

## நூல்விவரக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் |
| ஆசிரியர் | : | முனைவர் இரா. சிவகுமார்<br>உதவிப்பேராசிரியர்<br>தமிழாய்வுத் துறை<br>திருகொளஞ்சியப்பர் அரசுக் கலைக் கல்லூரி<br>விருத்தாசலம் 606 001 |
| பொதுப் பதிப்பாசிரியர் | : | முனைவர் ஆ. மணவழகன்<br>உதவிப் பேராசிரியர்<br>சமூகவியல், கலை மற்றும் பண்பாட்டுப் புலம்<br>உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>தரமணி, சென்னை 600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்<br>இரண்டாம் முதன்மைச் சாலை<br>மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்<br>தரமணி, சென்னை 600 113<br>தொலைபேசி எண் 044/22542992 |
| வெளியீட்டு எண் | : | 745 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2012 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டெம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 புள்ளி |
| பக்க எண்ணிக்கை | : | 8+104 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ. 50/– (ரூபாய் ஐம்பது மட்டும்) |
| அச்சகம் | : | இலட்சுமி ஏஜென்சிஸ்<br>23/11, பெருமாள் முதலி தெரு<br>இராயப்பேட்டை, சென்னை 600 014 |
| பாடம் | : | தமிழ் இலக்கியம் |


அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

**முனைவர் கோ. விசயராகவன்** எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

## அணிந்துரை

தமிழன்னைக்கு அணிகலன்களாய் விளங்கிச் சிறப்புச் சேர்க்கும் செந்தமிழ் இலக்கியங்கள் பல. அவற்றுள் காப்பியங்களும் அடங்கும். காப்பியங்கள் ஐம்பெரும்காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்ற நான்கு உறுதிப்பொருள்களில் ஏதேனும் குறைந்து வந்தால் அது சிறுகாப்பியம் என்ற வரையறைக்குள் வைக்கப்படுகிறது. அவ்வகையில் ஐஞ்சிறுகாப்பியங்கள் என்ற பிரிவில், முதலாவதாகச் சுட்டப்படுவதும் முழுமையாகக் கிடைக்கப் பெறுவதும் உதயணகுமார காவியம் ஆகும். பெருங்கதையின் சுருங்கிய வடிவமே உதயணகுமார காவியம் என்பர். பெருங்கதையின் விடுபட்ட சில பகுதிகளை நிறைவு செய்வதாக இக்காவியம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் ஆறு காண்டங்களையும், 367 விருத்தங்களையும் கொண்டுள்ளது. வத்தவ நாட்டரசன் சதானிகனுக்கும் அவன் மனைவி மிருகாபதிக்கும் பிறந்தவன் உதயணன். அவன் வாழ்க்கையில் நடைபெறும் அகப்–புற நிகழ்வுகளை அழகுறக் காப்பியச் சுவையோடு மொழிகிறது உதயணகுமார காவியம்.

தொன்மை வாய்ந்த ஒரு சமூகத்தின் பின்புலத்தைக் காட்டும் காரணிகளுள் முக்கியமானவையாக அச்சமூகத்தில் தோன்றிய இலக்கியங்கள் அமைகின்றன. அவ்வகையில், ஏறக்குறைய 15ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் உதயணகுமார காவியம் பல்வேறு வாழ்வியல் உண்மைகளை உணர்த்துவதாக உள்ளது. இக்காப்பியம் காதல், வீரம், அவலம், நகை எனப் பல்வேறு சுவைகளைப் பெற்று, காப்பிய மணம் பரப்பி நிற்கிறது. அதிகப்படியான காமவேட்கை கொண்டவனாக, பலபெண்களை மணப்பவனாக, அரசியல் தந்திரம் செய்வதில் தன் நண்பனைவிடத் தாழ்ந்தவனாக, போர்க்களத்தில் அடுத்தவர் உதவியால் காப்பாற்றப்படுபவனாகக் காப்பியத் தலைவன் உதயணன் காட்டப்படுகிறான். உதயணன் அரசனாக இருந்தாலும் சாதாரண மனிதனுக்கான கூறுகளோடு படைக்கப்பட்டிருப்பது எண்ணத்தக்கது. இக்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வியல் நெறிகளைப் பேசியிருக்கிறது இந்நூல்.

இந்நூலையும் இதன் முதல்நூல் எனும் தன்மையில் உள்ள பெருங்கதையையும் களங்களாகக் கொண்டு இந்நூலாசிரியர் வாழ்வியல் நெறிகள் என்கிற கோணத்தில் அணுகியிருக்கிறார். பன்முகத் திறமுடைமை, அகம்–புறம், திருமுகநெறி, நிமித்தம் நிகழ்வு, மீவியற்பு, துறவு எனப் பகுத்துக்கொண்டு நெறிகளைச் சுட்டியிருக்கிறார். பன்முகப் பார்வையோடு இக்காப்பியத்தையும் பிற காப்பியங்களையும் வாசிக்க இந்நூல் பெரிதும் உதவும். நூலாசிரியர் முனைவர் இரா. சிவகுமார் அவர்களுக்கு வாழ்த்துகள். பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பெயரால் அமைந்த அறக்கட்டளையின் பத்தாவது பொழிவாக இந்நூல் வெளிவருகிறது. அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ஆ.மணவழகன் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழ் மீதும், தமிழர் மீதும், தமிழ்நாட்டின் மீதும், தமிழ்ப் பண்பாட்டின் மீதும் கொண்டுள்ள அன்பும் கருணையும் அளப்பரியன. ஆதலால், இவற்றின் மேம்பாட்டுக்கெனப் பல திட்டங்களை மேற்கொண்டு வருகின்றார்கள். ஒல்லும் வகையெல்லாம் தமிழ் வளர்த்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு வைகைச்செல்வன் அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் என் இனிய நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இந்நூலை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப்பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் செல்வி. தீபிகா லட்சுமணன் ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்சிஸ் அச்சகத்தாருக்கும் என் பாராட்டுகள்.

இயக்குநர்

# ஆசிரியர் குறிப்பு

முனைவர் இரா. சிவகுமார் அவர்கள், கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், அகர ஆலம்பாடி எனும் கிராமத்தில் வாழ்ந்து வரும் திரு. க. இராமகிருஷ்ணன் – மீனாட்சி ஆகியோருக்கு (21–03–1971) மகனாகப் பிறந்தவர்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கி வந்த விருத்தாசலம், திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் தமிழ் இலக்கியம் இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர் ஆகியவற்றைப் பயின்று பட்டங்களைப் பெற்றவர்.

கல்லூரி மாணவராக விளங்கிய காலக்கட்டத்தில் மாநில, மாவட்ட அளவிலான எழுத்துப் போட்டிகளில் (கட்டுரை, கதை, கவிதை) வென்றவர்.

விருத்தாசலம், திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரியில் விருந்து விரிவுரையாளர் பணி; விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியில் உள்ள பாரதி மகளிர் கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் பணி; காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்குளத்தூர், எஸ்.ஆர்.எம். பல்கலைக் கழகத்தின் அறிவியல் மற்றும் கலையியற்புலம், தமிழ்த்துறையில் உதவிப் பேராசிரியர் பணி; விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம், திரு. ஆ. கோவிந்தசாமி அரசு கலைக் கல்லூரித் தமிழ்த் துறையில் உதவிப் பேராசிரியர் பணி என்று பணிகளையாற்றியவர்.

தற்போது விருத்தாசலம், திரு கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரித் தமிழாய்வுத்துறையில் உதவிப் பேராசிரியராய்ப் பணிபுரிந்து வருகிறார். ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவர்களுக்கு (Ph.D.) ஆய்வு நெறியாளராகவும் விளங்கி வருகிறார்.

மேலும், நம் தமிழ்மொழிக்குப் புகழ் சேர்க்கும் வகையில் ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். 'சு. சமுத்திரத்தின் சிறுகதைப் படைப்பாற்றல்', 'மயிலை சீனி வேங்கடசாமியின் இலக்கியம் மற்றும் சொல்லாராய்ச்சி', 'மயிலை சீனி. வேங்கடசாமியின் சமயம் மற்றும் நுண்கலையாராய்ச்சி' ஆகியவை இவரின் நூல்களாகும்.

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| என்னுரை | 1 |
| உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 4 |
| முன்னுரை | 4 |
| கதைமாந்தர் | 8 |
| முடிவுகள் | 88 |
| குறிப்புகள் | 91 |
| துணைநூல்கள் | 96 |
| பின்னிணைப்பு | 101 |

# என்னுரை

இளமையும், இனிமையும், வளமையும் உடையது தமிழ்மொழி. இது காப்பியப் புகழ்பெற்றது. காப்பிய இலக்கிய வரலாற்றில் 'உதயண குமார காவியம்' தனியிடத்தைப் பெற்றுள்ளது. இது பெருங்கதையின் நிறைகாப்பியம்.

உதயணன் என்னும் அரசனின் வாழ்வியல் நெறிகளைக் கொண்டது இந்நூல். இதில் பெருமைமிகு அரச வாழ்வு வாழ்ந்து, பிறகு பிறவிப் பிணியை நீக்கவேண்டி, சமணக் கடவுளை எண்ணி, தவநெறி பூண்டு, துறவை மேற்கொள்வதாக உதயணனின் கதை உள்ளது. இக்கதையில் உதயணனின் வாழ்வியல் நெறிகள் காணக்கிடக்கின்றன. அவ்வாழ்வியல் நெறிகள் மானுடத்தின் இயல்பைக் காட்டுகின்றன. ஆதலால் அந்நெறிகளை ஆராய்ந்துரைக்கும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது.

இது, உதயணனிடம் காணப்பட்ட அவனின் தகைமை, அகமும் புறமும், திருமுகவுத்தி, நிமித்தங்களும் நிகழ்வுகளும், மீவியற்கை, துறவு ஆகியவற்றை ஆராய்ந்துரைக்கின்றது.

தகைமையுடைமையாக உதயணனின் கல்வியறிவு, வீரம், இசை, ஓவியம், கட்டடக்கலை வல்லமை, புதையலாய்வுத் திறன், நீரூற்று அறியுந்திறன் ஆகியவை உள்ளன.

அகமும் புறமும் என்னும் பகுதி, உதயணனின் வாழ்வு நெறியாகக் களவு, கற்பு, ஊடல், கூடல், வீரர்நிலை, ஒற்றாராய்தல், மாயயானையுடன் போர், கொள்ளையர்களோடு போர், ஊரைக் கொளுத்துதல் ஆகியவை அமைந்துள்ளன.

களவுப் பகுதியாகக் காட்சியெய்துதல், ஐயம் தோன்றுதல், ஐயம் நீங்கல், ஒப்பனை, புணர்ச்சி, பரத்தமை, ஒழுக்கம் ஆகியவை விளங்குகின்றன. அவற்றில் உதயணன்,

தன் தேவியர் நால்வரோடும் காட்சியெய்தியமையும், பிறகு ஐயம் தோன்றி நீங்கியமையும், ஒப்பனை அலங்காரமாக முகத்தில் திருமுகம் வரைதல், பூச்சூடல், கண்ணிபெறல் ஆகியவற்றைச் செய்தும் புணர்ச்சியாகக் கண்ணிதரு புணர்ச்சி, குரங்குதரு புணர்ச்சி, கோட்டான்தரு புணர்ச்சி ஆகியவற்றை எய்தியும், பரத்தமை ஒழுக்கம் புரிந்தும் உள்ளான் என்பவை விளக்கப் பட்டுள்ளன.

கற்பு என்பதில் உதயணனின் வரைவும் மகிழ்வும், ஊடல் கூடல்களும், அறம், ஈகை முதலிய செயல்களும் அடங்குகின்றன.

வீரர்நிலையாக, வீரர்கள் போர்க்குணம் நிறைந்து விளங்குபவர்களாகவும், ஒற்றாராய்ந்து செயல்படக் கூடியவர் களாகவும், மாயயானை என்று உணராது கண்டதும் போர் செய்பவர்களாகவும், கொள்ளையர்களோடு போர் செய்பவர் களாகவும், ஊரைக் கொளுத்துபவர்களாகவும் விளங்குகின்றனர் என இடம்பெற்றுள்ளன.

திருமுகவுத்தி, உதயணன், தன் நண்பர்களோடும், அயல் அரசர்களோடும், காதலிகளோடும் திருமுகம் வரைந்து கருத்துப் பரிமாற்றம் செய்து மகிழ்ந்துள்ளமையை விளக்கியுள்ளது.

நிமித்தங்களும் நிகழ்வுகளும் எனும் பகுதியில் காற்றும் மேகமும் கலத்தல், வரைபடம் காணல், வெள்ளைப்பூ கையினின்றும் கீழ் விழுதல், வயவன்ஒலி, இடக்கண் ஆடலும், இடத்தோள் அசைதலும், கனவு ஆகிய நிமித்தங்களும் அவற்றின் நிகழ்வுகளும் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

மீவியற்கையாக, வாசவதத்தை செல்லும் வான்வழிப் பயணம் அமைந்துள்ளது.

துறவு, உதயணன் துறவெய்தியதையும், தேவியர் நால்வர், நண்பர்கள், உறவினர்கள் ஆகியோரும் மனம் ஒருவழிப் பட்டவராய்த் துறவெய்தியமையையும் தெளிவு படுத்துகிறது.

ஆய்வின் முடிவுகள், முடிவுகளாக என்னும் பகுதியில் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

இப்படியாக உதயணன் வாழ்வியல் நெறிகளை ஆய்ந்துரைத்து, நூலாக வெளியிடுவதற்கு, அரிய வாய்ப்பினை நல்கி, அவ்வப்போது என்னை நெறிப்படுத்திப் பேருதவி புரிந்த அருமை நண்பரும், அறக்கட்டளைப் பொறுப்பாளருமான முனைவர் ஆ. மணவழகன் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நூல் எழுதுவதற்குக் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள உற்றத் தோழராய் விளங்கிய முனைவர் க. சிவக்குமார் (உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திரு.கொளஞ்சியப்பர் அரசு கலைக் கல்லூரி, விருத்தாசலம்) அவர்களுக்கு என் அகம் மகிழ் நன்றி.

நிறுவனத்தின் வழி நூல் வெளிவருவதற்கும் பொழிவிற்கும் ஆவன செய்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்நூலைப் பிழையின்றியும் தெளிவுடனும் கணினி அச்சிட்டுத் தந்துதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனக் கணினித் தட்டச்சர் செல்வி தீபிகா அவர்களுக்கும் எனது மனம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

முனைவர் இரா. சிவகுமார்

# உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

முன்னுரை

தமிழ்மொழி வளமுடையது. அது அழகுமிகு அணிகலன் களைக் கொண்டது. தமிழை, தமிழர்கள் அன்னையாகப் போற்றுவர். அதனாலே தமிழன்னைக்கு அணிசெய்து மகிழ்வர். தமிழ் அன்னையின் அணிகலன்களுள் மிக இன்றியமை யாததும், அழகு வாய்ந்ததும் ஆன சில பொருள்களைக் குறிப்பிடுவர். அப்பொருள்களாவன: குண்டலம், வளையல், சிந்தாமணி, மேகலை, சிலம்பு முதலியன. இத்தகு பொருள்களாகத் தமிழ்க் காப்பியங்கள் உருவகிக்கப்படுகின்றன.

அதை,

*'காதொளிரும் குண்டலமும் கைக்குவளை*
*யாபதியும் கருணை மார்பின்*
*மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில்*
*மேகலையும் சிலம்பார் இன்பப்*
*போதொளிருந் திருவடியும்"*

என்று சுத்தானந்த பாரதியார் உருவகித்துப் போற்றியுள்ளமை இங்கு நினைவுக்கூரத்தக்கது.

காப்பிய இலக்கியம், பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள மனித வாழ்க்கையை எடுத்துரைப்பதாகும். அது அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை உறுதிப் பொருட்களைக் கொண்டது. அத்தகைய இலக்கியம் இருவகையுடையது. அவை ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் ஆகும். ஐஞ்சிறுகாப்பியங்கள் நால்வகை உறுதிப்பொருட்களுள் சில குறைந்து விளங்குவன. அவை சூளாமணி, யசோதர காவியம், உதயணகுமார காவியம், நீலகேசி, நாககுமார காவியம் ஆகியன. இவற்றுள் உதயணகுமாரகாவியம் இந்நூலாய்விற்கு களமாக அமைகிறது.

நூன்முகம்

உதயணகுமார காவியம், ஒரு சமணசமயக் காப்பியம் ஆகும். இந்நூலின் காலம் தெரியவில்லை. இருப்பினும் கி.பி. 15 –ஆம் நூற்றாண்டை ஒட்டியோ அதற்குப் பின்னரோ தோன்றி இருக்கலாம்[2] எனப்படுகிறது. இந்நூல் பெருங்கதையின் சுருக்கப் பதிப்புப்போல் அதே உதயணன் கதையை மிகச் சுருக்கி மொழிகிறது. பெருங்கதையின் முதல், இடை, கடைப் பகுதியில் உள்ள கதை நிகழ்ச்சிப் பாடல்கள் சில கிடைக்கவில்லை. விடுபட்ட கதை நிகழ்ச்சியை நிறைவு செய்கிறது இந்நூல்.

இந்நூல், உதயணன் சிறந்த அரசனாகச் செங்கோல் செலுத்திவிட்டுப் பிறகு, அரச வாழ்வைத் துறந்து, பிறவிப் பிணியை நீக்க வேண்டி, சமணக் கடவுளை எண்ணி, தவம் செய்து துறவை மேற்கொள்கிறான் என்று அவனின் வாழ்க்கையைக் கூறுகிறது.

அமைப்பு

இந்த நூல் மொத்தம் 367 விருத்தங்களைக் கொண்டுள்ளது. ஆறுகாண்டங்களையுடையது. அவை, 1. உஞ்ஞைக் காண்டம், 2. இலாவாண காண்டம், 3. மகத காண்டம், 4. வத்தவ காண்டம், 5. நரவாண காண்டம், 6. துறவுக் காண்டம் ஆகியன. தவிர, கடவுள் வாழ்த்துப் பாடல்கள் இரண்டும், அவையடக்கப் பாடல் ஒன்றும், நூற்பயன் பாடல் ஒன்றும் உள்ளன.

22ஆம் தீர்த்தங்கரரான நேமிநாதர், கலைமகள், சாதுக்கள் ஆகியோருக்கு ஒரு பாடலும், அருகனுக்கு ஒரு பாடலும் கடவுள் வாழ்த்துப் பகுதி. நூலின் உள்ளடக்கப் பொருளைக் கூறுவது அவையடக்கப் பகுதி. தீவினைப் பயனிலிருந்து விடுபடல் குறித்து அமைவது நூற்பயன். இப்படியாக நூலின் முகப்பில் நான்கு பாடல்கள். பிறகு, முதல் காண்டம் 116 பாடல்கள், இரண்டாவது காண்டம் 30 பாடல்கள்,

மூன்றாவது காண்டம் 35 பாடல்கள், நான்காவது காண்டம் 56 பாடல்கள், ஐந்தாவது காண்டம் 61 பாடல்கள், ஆறாவது காண்டம் 65 பாடல்கள் என நூல் அமையப்பெற்றுள்ளது.

**கதைச்சுருக்கம்**

சம்புத்தீவில் சுதர்சனம் என்னும் மலையின் தெற்கே உள்ள பாரதகண்டம் – வத்தவநாடு– கௌசாம்பி நகரம்– குருகுலத்தில் பிறந்த சதானிகன் என்னும் அரசனுக்கும், சேதிநாடு– சேடகன் என்னும் அரசனுடைய புதல்வி மிருகாபதிக்கும் மூன்று ஆண்மக்கள் பிறந்தனர். அவர்களில் முதலாமவன் உதயணன். இரண்டாமவன் பிங்கலன். மூன்றாமவன் கடகன் ஆவர்.

சேதிநாடு– விபுலகிரி மலைப்பகுதியில் தவநெறி பூண்ட பரமவிருடிகள் பல்லோருக்குத் தலைவருமான பிரமசுந்தர முனிவருக்கும் பரமசுந்தரிக்கும் பிறந்த மகன் யூகி ஆவான். இவன் உதயணனோடு நட்பில் சிறந்து விளங்கினான். இருவரும் கலைகளில் சிறந்த புகழெய்தினர். அறிவிலும் உயர்ந்து விளங்கினர்.

உதயணன் யாழிசைப் பயிற்சியிலும் வல்லவன். ஆதலால் யாழிசையால் தெய்வயானை ஒன்று பரிசாகப் பெற்றான். மேலும் குபேரனின் இயக்கர்களில் ஒருவனான நஞ்சுகன் என்பவனின் நட்பையும் பெற்றான். ஈரத்திலும் வீரத்திலும் மேன்மையுற்றான். ஆகையினாலே தாய்மாமன் விக்கிரன் என்பவன் வைசாலிநகர அரசை விரும்பித் தந்தமையால் ஆள வாய்க்கப் பெற்றான். தன் நண்பனான யூகியை முதல் அமைச்சனாக்கிக் கொண்டான்.

அரசைச் சிறப்பாக நடத்திய உதயணனுக்குத் தன் தந்தையின் அரசான கௌசாம்பி நகர அரசையும் ஏற்று நடத்தும்படியாயிற்று. தந்தை தவநெறி பூண்டொழுகச் சென்றார். இரு அரசுகளையும் சிறப்புடன் ஆண்டு வந்த உதயணன், தன் நண்பனான யூகியிடம் வைசாலி நகர அரசை ஒப்படைக்க, அவனும் அதை ஏற்றுச் சிறந்த அரசோச்சலானான்.

இந்நிலையில் அவந்திநாடு—உஞ்ஞைநகர் அரசன் பிரச்சோதனன், தனக்குக் கப்பம் செலுத்தாத அரசர்களைச் சிறைப்பிடிக்க எண்ணினான். அவ்வமயம் உதயணன் கப்பம் செலுத்தவில்லை என்றறிந்து சிறைப்படுத்தினான். இச்செய்தியை அறிந்த யூகி, 'என் தலைவனைக் கபடமாகப் பிடித்துச் சிறைப்படுத்தியவன் மகளை, அவன் அறியா வண்ணம் என் தலைவனால் கொண்டு வரச் செய்வேன்' எனச் சபதம் செய்துவிட்டுத் தான் இறந்து போனதாக யூகி ஒரு செய்தியைப் பரவச் செய்து, பிறர் அறியாமல் உஞ்ஞை நகரம் சென்று, தான் கருதியதை நிறைவேற்றினான். அதனாலே 'இடனறிசூழ்ச்சி யூகி' என்று உதயணனால் பாராட்டப் பெற்றவன்.

யூகியின் உதவியால் பிரச்சோதனன் மகள் வாசவதத்தையை மணந்து வாழ்ந்து வந்த நிலையில், 'இராசகிரியம்' என்னும் நகரில் காமனுக்கு விழா நடைபெற்றது. அவ்விழாவைக் காண உதயணன் சென்றான். காமன் கோவிலுக்கு வழிபட அழகு வாய்ந்த மகளிர் வருவதைக் கண்ட உதயணன், தன் உருவைப் பிராமண உருவாக மாற்றி, தன் பெயரையும் மாணகன் என்று மாற்றிக் கொண்டு கோயில் வாயிலில் நின்றான். அப்பொழுது காமனை வழிபடவந்த மகதநாட்டு இராசகிரியம் என்னும் தலைநகரை அரசாண்ட தருசகன் என்னும் அரசனுடைய தங்கை பதுமாபதி என்பவள், மாணகனைக் கண்டு காமுற்றாள். மாணகனும் அவள் மீது காமுற்றான். பிறகு அவளையும் மணந்து வாழ்ந்து வந்தான்.

இந்நிலையில் உதயணன், மகளிர்ப் பந்தாட்டம் காண விரும்பினான். பந்தாட்டக் களத்திற்குச் சென்று பந்தாட்டத்தினைக் கண்டு களித்தான். பந்தாட்டம் ஆடிய மகளிர்களுள் வாசவதத்தையின் பணிப் பெண்ணாக விளங்கிய 'மானனீகை' என்பவளைக் கண்டு காதல் கொண்டான். மானனீகையும் காதல் கொண்டாள். ஆதலால் உதயணன் மானனீகையையும் மணந்து வாழ்ந்து வந்தான்.

பிறகு 'விரிசிகை' என்பவளைக் கண்டு காமவேட்கை கொள்கிறான் உதயணன். விரிசிகை என்பவள் தவ வனத்திலிருக்கும் ஒரு இராசரிஷியின் மகளாவாள். ஒருமுறை உதயணன், தவவனத்திற்குச் சென்ற பொழுது, அவனின் அழகைக் கண்ட இளம்பருவத்தினளாகிய விரிசிகை, அவனிடத்தில் விரும்பி மாலை சூட்டிக் கொண்டாள். அத்தகையவளைப் பருவமெய்திய நிலையில் இப்பொழுது உதயணன் கண்டு, காதல் மிக்குண்டு மணந்து கொண்டான். இனிதே வாழ்ந்து வந்த வேளையில் வாசவதத்தைக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அதற்கு நரவாகணன் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர். சீர்வளர் செல்வனாக அவன் வளர்ந்து வந்தான். உரிய பருவத்தில் நரவாகணனிடம் அரசை, உதயணன் ஒப்படைத்துத் துறவு மேற்கொண்டான். பிறகு தேவியர் நால்வரும் உதயணனோடு துறவுப் போந்தனர் எனக் கதை நிறைவுறுகிறது.

**கதைமாந்தர்**

உதயணன், வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை, நரவாணதத்தன், யூகி ஆகிய முதனிலை மாந்தர்களுக்குத் துணைநிலை மாந்தர்களாக, நண்பர்கள், மந்திரிகள், பந்தாட்ட மகளிர்கள், பணிப்பெண்கள், முனிவர்கள், போர்வீரர்கள், தோழி, செவிலி முதலியோர் விளங்குகின்றனர்.

உதயணகுமார காவியம் கதைமாந்தர் வழி வாழ்வியல் உண்மைகளை எடுத்துரைக்கிறது. கதைமாந்தர்களுள் உதயணன், சதானிகன், விக்கிரன், வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை, யூகி, பிரச்சோதனன், சாங்கியத் தாய் ஆகியோர் இன்றியமையாதோராவர். இவர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட நிகழ்வுகளின் அடிப்படையில் இவர்கள், சிரமமெய்திய சதானிகன், மலையில் பிறந்த உதயணன், வாரிசில்லா விக்கிரன், பழிநாணும் வாசவதத்தை, பதுமையென்னும் பதுமாபதி, பந்தாடிய மானனீகை, முனிவர் மகள் விரிசிகை, இடனறி சூழ்ச்சி யூகி, சினந்து தணியும் பிரச்சோதனன்,

சாங்கியத்தாய் என்னும் அடைமொழிகளுக்குரியவர் களாகின்றனர்.

உதயணன்

இவன் காப்பிய நாயகன்; சதானிகன்—மிருகாபதி ஆகியோரின் மகன். சூரிய உதயத்தின் பொழுது பிறந்தமையால் உதயணன் என்னும் பெயர்பெற்றவன். அழகிலும் அறிவிலும் சிறந்தவன். 'கல்வி, போர்ப்பயிற்சி, இசை முதலிய சிறப்பியல்புகள் பலவற்றாலும் ஒப்பற்று விளங்கியவன். அரசர்க்கு அரசன். ஏகச்செங்கோலினன். இளமைப் பருவத்திலேயே பலவகைக் கலைகளையும் பழம்பிறப்பில் செய்த தவத்தால் முற்றக் கற்றுத் தேர்ந்தோன். யாழ்விச்சையில் வல்லுநன். வில்வித்தையில் சிறந்தவன். அதைக் கற்பித்தலிலும் உயர்ந்தவன். அதனால் ஆசான் தேசிகன் என்னும் சிறப்புப்பெயர் பெற்றவன். விஞ்சை வீரன் என்று புகழப்பட்டவன். கேள்விச் செல்வம் அமையப்பெற்றவன். யானையை அடக்கும் ஆற்றலிலும், யானை இலக்கணத்தை நன்கு அறிதலிலும், யானைப் பேச்சிலும் வல்லவன். யாழிற்குரிய மரங்களின் இயல்பையும் நரம்புகளின் இலக்கணங்களையும் இவன் நன்கு அறிந்தவன். வியக்கவைக்கும்படி கண்ணி கட்டுதலிலும், வாழைக்குருத்தில் நகத்தினால் பொய்கை முதலிய பலவகையான சித்திரங்கள் பொறித்தல் முதலியவற்றிலும் வல்லவன். மந்திர வித்தையிலும் வல்லவன். அறப்போரிலும் மறப் போரிலும் பேராற்றல் உடையவன். வல்வில்லியென்று பாராட்டப்படுபவன். நன்றியறிவில் சிறந்தவன்'[3] எனப்படுகிறது.

மேலும், உதயணன் 'அகமுக ஆளுமை பெற்றவன். தெய்வ அம்சம் பெற்றவன். எளிய உணர்வுகள் கொண்ட விலங்குகளையும் நேசிக்கும் சாதாரண மனிதனாக கலையாற்றல், வீரம், பயணம், முடிவெடுத்தல் போன்றவற்றில் சிறந்தவனாகப் பல சாதியினரையும் தொடர்பு கொண்டவனாகக் கவிஞரால் படைக்கப்பட்டுள்ளான்' எனக் கூறப்படுகிறது.

அதோடன்றி, உதயணன் ஓர் ஒப்புயர்வற்ற உன்னதத் தலைவன்; சகலகலா வல்லவன்; பந்தாட்டத்தை இரசிப்பதில்

பரம கலைஞன்; பெண்களைக் கவர்வதிலும், கவரப்படுவதிலும் சீவகனின் சகோதரன் என்று சொல்லும் வகையில் நான்கு பெண்களிடம் தன்னைப் பிணைத்துக்கொள்கிறான். அவர்களோடு கூடி முயங்குவதிலும், ஊடல் தீர்ப்பதிலும் தன்னிகரற்றுச் சீவகனைப் போலவே விளங்குகிறான்[5] என்று கூறுவர்.

ஆகவே, காப்பிய நாயகனுக்கு உரிய இயல்புகள் எல்லாவற்றையும் ஒருங்கே அமையப் பெற்று விளங்கியுள்ளான் உதயணன் என்று தெளிவாகிறது.

சதானிகன்

சம்புத்தீவின் சுதர்சன மலைக்கருகில் உள்ள பாரத தேசத்தில் தருமகண்டம் உள்ளது. அதில் வத்தவநாடு, கோசம்பி என்னும் நகரைச் சார்ந்த குருகுலத்தில் பிறந்த அரசன் இவன். மிருகாபதியின் கணவன். உதயணனின் தந்தை. இவன், தன் மனைவி கருவுற்றிருந்த காலத்தில் இரவில் அரண்மனை மேல் மாடத்தில், சிவந்த நிற ஆடையுடன் உறங்குகையில் சரபப்புள், இரத்தம் தோய்ந்த தசைத் தொகுதி என்று கருதித் தூக்கிச் சென்று விட்டமையால், காலையில் தன் அரசியைக் காணாது தேடியலைந்து சிரமம் எய்தியவன் என்பது குறிப்பிடத்தக்கது.

விக்கிரன்

உதயணனின் அம்மான், ஏயர் குலத்தில் பிறந்தவன். தனக்குப் பிள்ளைப்பேறு இல்லை என்பதால் தன் அரசாட்சியை உதயணனிடம் ஒப்படைத்துவிட்டுத் தவம் செய்யச் சென்றவன் என்பதை அறியமுடிகிறது.

வாசவதத்தை

இவள் உதயணனின் முதல் பட்டத்துத்தேவி அழகிலும் குணத்திலும் சிறந்தவள். பெண்பாலர்க்குரிய கலைகளில் மிகப் பயிற்சியுள்ளவள். யாழிசை, மாலைதொடுத்தல், சிற்பவேலை ஆகியவற்றில் இவளுக்கு மிகுந்த பயிற்சியுண்டு.[6]

இவை தவிர, 'கலை ஈடுபாடு, காதல் வாழ்வு, அதிகார உணர்வு ஆகியவற்றின் அடையாளமாக விளங்கியவள்.

உதயணனிடம் யாழ் கற்றுக் கொண்டிருக்கும்போது, அவனிடம் காதல் மிக்குண்டவள். அவ்வமயம் வேற்றரசர் அவளை மணம் பேசி வருகின்றனர். மன்னன் அவர்களை ஏற்றுக்கொள்ளாமலும் எடுத்தெறியாமலும் இருந்து வந்தான். வந்தவர்கள் எல்லோரும் தத்தையைத் தமக்கே தருவான் என்று எதிர்பார்த்து, ஏங்கிக் கொண்டிருந்தனர். இதனைச் சாங்கியத்தாய் அறிந்ததும், வாசவதத்தையின் உள்ளத்தைத் தெரிந்துகொள்ள விரும்பி, நடப்பதைக் கூறினாள். அவளோ பொறியற்ற பாவை போலக் கலங்கி, உடல் நடுங்கி விம்மி அழுதாள். 'அம்மா நீ கூறுவது உண்மையானால், அச்செயலை என் தந்தை, உயிர் வாழ்கின்ற ஏனைய மகளிரிடையே செய்யவேண்டும். யானோ மெல்லிய ஆடையால் தூக்கிட்டுக் கொண்டு இறந்துபோவேன்' என்று அரற்றி, அறுபட்ட மாலையில் முத்துகள் சிதறுவதுபோன்று அவள் கண்ணீர்த்துளிகளைச் சிதறினாள்[7] என்றும் கூறப்படுகிறது.

ஆகவே வாசவதத்தை உதயணனிடம் காதல் கொண்ட நிலையில் வேறொருவருக்கு மணம் என்று பேச்சுப்படின் உயிர் வாழமாட்டேன் என்று அன்பு மிகுந்தவளாக, பழிக்கு நாணுபவளாக விளங்கியவள் என்பது குறிப்பிடத்தக்கது.

### பதுமாபதி

இவள் "தருசக அரசனின் தாயின் சகோதரி உதயையோடையின் மகள். தந்தை காசிராசன். இவளைத் தருசகனின் தாய் வளர்த்துவந்தாள். தருசகன் தங்கை என்று கூறப்பட்டவள். இவளின் தோற்றம் வாசவதத்தையைப் போன்றது. கல்வி கேள்விகளில் சிறந்தவள். தனக்கு அனுகூலத்தையே தேடுபவள். இவளின் பெயர் பதுமை, பதுமாபதி எனவும் வழங்கப்பெறும்"[8] என்பர்.

மேலும், அவள் காதல் ஓவியமாக விளங்கினாள். அழகில் பதுமை, அறிவில் புதுமை என்றிருப்பவள். தத்துமகளாக வந்து உதயணனின் காதல் மனைவியானவள். பணியும்

உள்ளம் கொண்டவள். இராஜமாதாவாகும் சிறப்பினைப் பெற்றவள்.[9]

ஆதலால் இவள் உதயணனின் இரண்டாவது பட்டத்துத் தேவியாகிறாள். அன்பிலும் பண்பிலும் உயர்ந்தோங்கியவள் என்பது அறியக்கிடக்கின்றது.

**மானனீகை**

கோசலத்து அரசன் மகள் 'இவளின் இயற்பெயர் வாசவதத்தை. தாய் வசுந்தரி. பாஞ்சாலராசன், கோசலத்தரசனை வென்று அவனது அந்தப்புரத்திலிருந்து கவர்ந்து சென்ற மங்கையர்களுள் இவளும் ஒருத்தி. பிறகு அவன் பட்டத்துத்தேவியின் பணிப்பெண்ணாக இருந்தபோது, அவனைக் கொன்ற உதயணன் கொண்டுவந்த மகளிரோடு இவளும் கொண்டுவரப்பட்டு வாசவதத்தையின் பணிப் பெண்ணாக இருந்தவள். இவளின் பந்தாட்டத்தைக் கண்டு மோகித்த உதயணனுக்கு மனைவியானவள். யவன பாஷையிலும் சிற்ப வேலை முதலியவற்றிலும் மிகத் தேர்ச்சியுற்றவள்'[10] என்பர்.

தவிர, மன்னன் மகளாகத் தோன்றி, மாற்றான் அரண்மனையில் பணிப்பெண்ணாகி, மன்னனின் காதலால் மீண்டும் அரண்மனை வாழ்வைப் பெற்றவள். பந்தாட்டவல்லவள். உதயணனின் உள்ளத்தைப் பந்தாடியவள். அழகு, கலை, பொறுமை போன்றவற்றின் உருவமாக விளங்கியவள்11 என்றும் கூறுவர்.

ஆகவே இவளும் அரசிக்குரிய பண்புகளைப் பெற்று உதயணனுக்கு மூன்றாவது அரசியாகிறாள் எனக் கருத முடிகிறது.

**விரிசிகை**

இவள், 'இராசரிஷியின் மகள். இளமைப்பருவத்திலேயே உதயணனால் மாலை சூட்டப்பெற்றுப் பின்பு அவனால் மணம் செய்து கொள்ளப்பட்டவள். கற்பில் சிறந்தவள்[12] என்றும் 'கானகத்தில் மான்களுக்கு இடையில் மானாகவும்

மயில்களுக்கிடையில் மயிலாகவும், அன்னங்களுக்கு இடையில் அழகிய அன்னமாகவும் விளங்கிய சகுந்தலை போன்று விரிசிகை விளங்கியவள். மன்னர் மகளாக வாழ்ந்திருக்க வேண்டிய இவள், முனிவர் மகளாக வளர்ந்தாள். மன்னன் மனைவியாக வாழும் சிறப்பினைப் பெற்று, அன்பு, அமைதி, ஆகியவற்றின் மறு உருவமாக விளங்கியவள்'[13] என்றும் கூறப் பட்டுள்ளமையால் துறவி மகள் அரசியானாள் என அறியலாகிறது.

## யூகி

இவன் உதயணனின் பால்ய நண்பன். பிறகு உதயணனுக்கு மந்திரியாகி மந்திரிகளுள் முதன்மையானவன். வில் வித்தைகளில் வல்லவன். கல்வியில் சிறந்தவன். பெருவிறற்றோழன், இடனறிசூழ்ச்சி யூகி என உதயணனால் பாராட்டப்பட்டவன். மேலும், யூகந்தராயணன், யூகந்தராயன் எனவும் பெயர்கள் இவனுக்கு உண்டு[14] என்பதும், உதயணன் முதலில் பெற்ற சேதி நாட்டரசை விருப்பத்தோடு யூகிக்குச் சீவிதமாகக் கொடுக்க, பெற்றுக் கொண்டவன் என்பதும் குறிப்பிடத்தக்கன.

மற்றும், இவன் அந்தண குலத்தில் தோன்றியவன். பால்ய கால முதல் பரகதி காலம் வரை உதயணனைப் பிரியாது, உற்ற நிழலாய், உயிர் காக்கும் தோழனாய் இருந்தவன். உதயணனுக்காக, தான் இறந்து போனதாகத் தானே செய்தியைப் பரப்பியவன். காப்பிய உலகில் நட்புக்கு இவனுக்கு இணையாக எவரையும் ஒப்பிட இயலாது[15] என்பதும் எண்ணி மகிழத்தக்கது.

## பிரச்சோதனன்

இவன் அவந்தி நாட்டுச் சக்கரவர்த்தி. வாசவதத்தையின் தந்தை. உதயணனைச் சிறையிலிட்டவன். இவனின் தேவியர் பதினாறாயிரவர். இவனுக்குள்ள முரசம் பதினாறாயிரம். பெருவன்மையன். ஆற்றலிலும், வெற்றியிலும், அறிவிலும் நிகரற்றவன். கடுங்கோபத்தினன். ஆணையில்

சிறந்தவன், வீரியவேந்தன், அவந்திவேந்தன், ஏகத்திகிரி இறைவன், வெற்றி வேந்தன், மறமாச்சேனன், உஞ்சையர் பெருமகன், பெருவேந்தன், ஆற்றல்வேந்தன் எனவும் இவனுக்குப் பெயர்கள் வழங்குவர்'[16] என்பது பெறப் படுகிறது.

சாங்கியத்தாய்

இவளின் இயற்பெயர் தெரிந்தில பார்ப்பன குலம். கோசம்பி நகரம். இவளின் கணவன் இளமையிலேயே இவளைவிட்டு நீங்கியது பற்றி இவளுக்கு ஒழுக்கத்தவறு ஒருபொழுது உண்டாகியது. அதனால், அதிகாரிகளுடைய கட்டளையால் யமுனையாற்றில் இவளை வீழ்த்திவிடுவதற்குச் சிலர் கொண்டு செல்வதைக் கண்ட உதயணன், இரங்கி விடுவித்துத் தீர்த்த யாத்திரை செய்யும்படி அனுப்பினான். அதன்படி இவள் கங்கையாடி இமயமலையில் சென்று இரண்டு ஆண்டுகள் அங்கே தங்கி, அங்குள்ள பெரியோரால் சமய விகற்பங்களை அறிந்து கன்னியாகுமரியில் நீராடுவதற்கு யாத்திரையாளரோடு அங்கிருந்து புறப்பட்டு உஞ்சை நகருக்கு வந்தாள். இவளுடைய கல்வி, அறிவு முதலியவற்றை அறிந்த பிரச்சோதனன் தன் பட்டத்துத்தேவி ஸ்ரீமதிக்கு நீதிகள் முதலியவற்றைச் சொல்லும்படி இவளை நியமித்தான். அப்போது இவள் வாசவதத்தையிடம் அன்பு காட்டுகையில் செவிலித் தாயானாள். சாங்கிய சமயத்தவள். உதயணனைக் காப்பாற்று வதற்குப் பெரும்பங்காற்றியவள். அதனால் உதயணனுக்குத் தாயாகி வந்தவள்[17] என்று குறிப்பிடுவதால், சாங்கியத்தாய், தாய் எனவும், செவிலியெனவும், சாங்கிய முதுமகள் எனவும் இவள் வழங்கப்பட்டாள்.

ஆகவே மேற்குறித்த கதைமாந்தர்கள் உதயணகுமார காவியத்தில் உதயணனுக்குப் பெரும்பங்காற்றியுள்ளவர்கள் என்பதும், இவர்கள் வாழ்வியல் உண்மைகளை வெளிப்படுத்த உதவும் பாத்திரங்கள் என்பதும் வெளிப்படையாகின்றன.

## வாழ்வியல்

காப்பியத்தில் வாழ்வியல் உண்மைகளாகத் தகைமை யுடைமை, அகமும் புறமும், திருமுகவுத்தி, நிமித்தங்களும் நிகழ்வுகளும், மீவியற்கை, துறவு ஆகியவை காணக் கிடக்கின்றன. இந்நூல் அவற்றை விளக்குவதாக அமைகிறது.

## தகைமை

அரச குலத்தில் பிறந்த ஒருவனுக்கு அரசு ஏற்க இயல்பாக உள்ள தகுதிப்பாடுகள் தகைமையுடைமை என்பதாகின்றன. காப்பியத் தலைவன் உதயணன், இயல்பாகவே அறிவுத்திறனும் கலைத்திறனும் அமையப்பெற்றுள்ளான். 'குலவிச்சை கல்லாமற் பாகம்படும்'[18] என்பதற்கேற்பத் திறம் வாய்ந்தவனாகின்றான். அதாவது, கல்வி, வீரம், இசை, ஓவியம், கட்டடக்கலை வல்லான், புதையலாய்வு, நீர் ஊற்று அறியுந்திறன் ஆகியவற்றைப் பெற்ற வல்லவனாகின்றான்.

## கல்வி

உதயணன் கல்வியறிவில் சிறந்துள்ளான். அதை,

*'வாரி மருங்கற வற்றினு மகவயின்*
*நீர்வளஞ் சுருங்கா நெற்றித் தாரைக்*
*கூவலும் பொய்கையும் கோயில் வட்டத்*
*தெவ்வழி வேண்டினு மவ்வழிக் காட்டும்*
*ஞான வல்லியத் தரும்பொரு ளுனித்தனென்'*[11]

என்னும் பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன. இதனால், 'ஞான வல்லியம்' என்ற நூலைக் கற்றுக் கரைகண்டவனாகத் தன்னை மகதநாட்டு அரசனாகிய தருசகனிடம் அறிமுகம் செய்து கொள்கிறான் உதயணன் என விளங்குகிறது.

பிரச்சோதனன் பார்வையில், உதயணன் இளமையிலேயே,

*'பொருள்புரி நூலும்,*
*அலகை சான்ற உலக புராணமும்'*[20]

கற்றவனாகக் காணப்படுகின்றான். இவை தவிர, பெருங்கதையின் முற்பகுதி இல்லாதபடியால், உதயணன் கல்வி

பற்றிச் சரிவர அறிய இயலவில்லை[21] எனக் கருதப்படுகிறது. ஆகவே, காப்பியத் தலைவனான உதயணன், கல்வியிற் சிறந்தவனாகக் காட்டப்படவேண்டும் என்னும் நற்சிந்தையுடையவராகப் புலவர் விளங்கியுள்ளார். காரணம் இவ்வுலகம் கல்வியறிவில் சிறந்தவனையே விரும்பும் என்பதாலும், 'அறிவுடையோனால் அரசுஞ் செல்லும்'[22] என்பதாலும் புலவர் அவ்வாறு காப்பியத்தலைவனைப் படைத்துள்ளார் எனப் புலப்படுகின்றது.

**வீரம்**

உதயணன் வீரம் செறிந்தவன். அதனைப் போர் நிகழ்ச்சிகளில் காணமுடிகின்றது. பிரச்சோதனன், மாய யானை என்னும் எந்திரப் பொறிமூலம், உதயணனைச் சிறைப் பிடிக்க வரும் போது, உதயணனின் போர்த்திறன், சவரர் புளிஞர் என்னும் வேட்டுவருடன் செய்த போர்த்திறம், மகத மன்னன் தருசகனுக்காக இரண்டு முறை சங்க மன்னரோடு போரிட்டதிறம், ஆருணி அரசனிடமிருந்து கௌசாம்பியைக் கைப்பற்றப் போரிட்டதிறம் என அவனின் வீரநிலைகள் அமைந்துள்ளன. அவைப் புறப்பகுதியில் விரிவாக ஆராய்ந்துரைக்கப்பட்டுள்ளன.

உதயணன் வில்வித்தை கற்ற வல்லான். பிரச்சோதனனால் சிறைப்படுத்தப்பட்டிருந்தபோது, பிரச்சோதனன் தம் மக்களை உதயணனிடம் படைத்தொழில் பயின்றுவர அனுப்பினான் என்பதை,

> *'எம்முடை யளவையில் பண்புறப் பேணி*
> *நுன்பதிப் பெயர்க்கு மளவையி னும்பியர்*
> *நின்வழிப் படுகென மன்னவ னுரையாக்*
> *குலங்கெழு குமரரைக் குற்றேல் அருளி'*[23]

என்னும் பாடல் சுட்டியுள்ளது. ஆகவே, ஒருவன் போரில் வெல்லும் போர்ப்பயிற்சி வல்லானாகிய சான்றோனாய் விளங்குதல் பண்டைய நடைமுறை. அதன்படியே உதயணன் சிறந்த வீரனாகச் சிறந்திருந்தான் என அறிய முடிகிறது.

## இசை

உதயணன் யாழிசைக்கலை வல்லான். பரிசாகக் கோடபதி என்னும் யாழைப் பெற்றவன். கோடபதியை இசைத்த போது அவ்விசைக்குப் பரிசாகத் தெய்வயானை கிடைத்தது. பிரச்சோதனன் பட்டத்து யானை 'நளகிரி'யின் மதத்தைக் கோடபதியை வாசித்துத் தணித்தான். வாசவதத்தைக்கு யாழிசைப் பயிற்சியினைக் கற்றுத் தருகிறான். ஆகையினாலே தான்,

*'யானை வணக்கு மைங்கதி யருவினை*
*வீணை வித்தகத் தவனினு மிக்கதன்*
*மாணல முணரேம்'*[24]
*'யாழும் பாட்டும் யாவரு மறிவர்*
*வீழா நண்பினிவன் போல் விரித்து*
*நுனித்திரை மாந்தரில்லென'*[25]

என்று உதயணன் பாராட்டப்படுகின்றான். அதோடு 'வீணை வித்தகன்'[26] என்றும் 'வீணைவேந்தன்'[27] என்றும் அவன் அழைக்கப்படுகின்றான்.

உதயணன் போன்றே காப்பியத் தலைவர்கள் அமைவர். சீவகனும் யாழிசையில் சிறந்தவனாகவே படைக்கப்பட்டுள்ளான். அவன் யாழில் இசை மீட்டிய போது,

*'விண்ணவர் வியப்ப விஞ்சை வீரர்கள்*
*விரும்பியேத்த*
*மண்ணவர் மகிழ்வான்கட் பறவைமெய்ம்*
*மறந்துசோர*
*அண்ணறா னனங்க னாணப் பாடினா*
*னரசரெல்லாம்*
*பண்ணமைத் தெழுதப் பட்ட பாவைபோ*
*லாயினாரே'*[28]

என்று தேவர்களும், மன்னர்களும், வீரர்களும் வியந்து மகிழ்ந்து பாராட்டுவர். பறவைகளும் மெய்மறந்து கேட்கும் எனச்

சீவகனின் யாழிசையின் சிறப்பைக் கூறுவர். ஆகவே, காப்பியத் தலைவர்கள் யாழிசைக் கல்வியில் சிறந்து விளங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**ஓவியம்**

அரசர்களுக்குப் பொதுவாகக் கற்பனைத் திறனும், கற்பனையை ஓவியமாக வரைந்து பார்க்கும் ஓவிய ஆற்றலும் வாய்க்கப் பெறுதல் இயல்பு. இது அரசர்கள் தங்கள் நாட்டை வலம் வருகின்ற பொழுது காணும் காட்சிகள் குறித்தே அமையும். அவ்வண்ணமே உதயணன் ஓவியக் கலைஞனாக விளங்குகின்றான்.

அவன் பதுமாபதியின் பால் காதல் மிக்குண்ட நிலையில் அவளுடைய உருவத்தை வாழையின் குருத்தில் நெஞ்சைக் கவரும் வகையில் ஓவியமாக வரைகிறான். அதை,

*'வையக் கஞ்சிகை வளிமுகந் தெடுக்கவத்*
*தெய்வப் பாவையைத் தேனிமிர் புன்னைத்*
*தாண்முதல் பொருந்தித் தானவட் கண்டதும்*
*காமர் நெடுங்கண் கலந்த காமமும்*
*இன்னவை பிறவும் தன்முத லாக*
*உள்ளம் பிணிப்ப வுகிரிற் பொறித்து'*[29]

என்ற பாடல் அடிகள் தெளிவுபடுத்துகின்றன.

இதேபோன்று சீவகனும் காணப்படுகின்றான். குணமாலையின்பால் காதல் கொண்டபொழுது, அவளின் பார்வையை ஓவியமாகத் தீட்டுகின்றான் என்பதை,

*'கூட்டினான் மணிபல தெளித்துக் கொண்டவன்*
*தீட்டினான் கிழிமிசைத் திலக வாணுதல்*
*வேட்டமால் களிற்றிடை வெருவி நின்றதோர்*
*நாட்டமும் நடுக்கமும் நங்கை வண்ணமே'*[30]

என்ற பாடல் புலப்படுத்துவதை இங்கு நினைவு கூறலாம்.

பலதிறமுடைமை

காப்பியக் காலத்து மக்களிடையே பல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவனே பலதிறமுடையவன் என மதிக்கப்பட்டான். ஆகையால், காப்பிய ஆசிரியர்கள் தங்கள் கதைத்தலைவனைப் பல்திறமுடையவனாகப் படைத்துக் காட்டினர். அவ்வாறே உதயணன் கட்டடக் கலைவல்லான், புதையலறியுந்திற முடையவன், நீரூற்றறியுந் திறமுடையவன், நீரின் தன்மை கூறுந்திறமுடையவன்[31] எனப் பெருமைப்படுத்தப்பட்டிருப்பது கருதத்தக்கது.

மேலும், உதயணன் தன் தாய்மாமன் விக்கிரனுக்குத் தான் அரசாளுகையில் இயற்கை இடர்களினின்றும் மக்களைக் காக்க இயலவில்லை என்ற நிலையில், அரசு செலுத்துவதில் நிறைவின்மையாலும், தனக்குப் பிறகு அரசாளுவதற்குச் சந்ததியினர் இன்மையாலும் அரசை வெறுத்து, துறவை விரும்பித் தவவனம் சென்று முனிவரைச் சந்திக்கிறபொழுது, அங்கே முன்னமே முனிவரிடம் அறமொழிகளைக் கேட்க விரும்பி, வந்த உதயணனைக் கண்டு வினவிக்கேட்டுத் தெரிந்து மனம் உவகையனாகித் தன் அரசை உதயணனிடம் கொடுக்க, அவனும் ஏற்றுக் கொண்டான்.

பிறகு, உதயணனின் தந்தை சதானிகன், தன் மனைவி மிருகாபதியைத் தேடிக் கொண்டிருக்கையில், தவவனத்தில் முனிவரைச் சந்தித்துப் பேசும் பொழுது, அங்கிருந்த உதயணன் பற்றி வினவி அறிந்து கொண்டு மகிழ்ந்தான். அதோடு தன் அரசையும் தன் மகனாகிய உதயணனிடம் கொடுத்துவிட்டு, துறவை விரும்பி ஏற்றுக் கொண்டான். ஆகவே உதயணன் இருநாடுகளுக்கு அரசனாகி அரசாளுகின்றான்.

உதயணன் பல திறன்களைக் கொண்டவனாகக் காணப்பட்டாலும் அவற்றிற்கெல்லாம் சோதிப்புக்கு ஆளாகி அரசேற்கவில்லை. போரின்றி இயல்பாகவே அரசாட்சி கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அகம்

அரசன் உதயணன் வாழ்வில் காதல் நிகழ்வு நிறைந்திருந்தது. வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை ஆகிய நால்வரைக் காதலித்து மணந்து வாழ்ந்து வந்தபோது அவன் வாழ்வில் காணப்படும் அகப்பொருள் சுவை மிகவும் இனிமை யுடையது. அது களவு, கற்பு, ஊடல் ஆகிய நிலைகளையுடையது.

### களவு

களவு எனப்படுவது ஒத்த தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் பார்த்து, காமுறுவதாகும். அதில் காட்சி, பூச்சூடல், கண்ணிபெறல், புணர்ச்சி ஆகியவை நடைபெறும்.

### காட்சி

காட்சி எனப்படுவது பருவத்து ஒத்த தலைவனும், தலைவியும் ஒருவரையொருவர் பார்த்து இன்புறுவதாகும். இதைத் தொல்காப்பியர்,

*'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'*[32]

என்பார். மற்றும்,

*'....பொருவு இறந்(து) ஒத்த*
*..... காளையும் கன்னியும் காண்ப'*[33]

என்பார் நாற்கவிராச நம்பி. ஆதலாலே, தம்மொடு ஒத்தாரும் மிக்காரும் இன்றித் தமக்குத் தாமே ஒப்பாக அமைந்த தலைமகன், தலைமகள் ஆகியோர் நல்வினை காரணமாகத் தனியிடத்தில் ஒருவரையொருவர் காண்பராவர். இதுவே காட்சியாகும். இது களவின் முதனிலையாகும்.

இத்தகு, காட்சி உதயணன் வாழ்வில், தேவியர் நால்வரோடும் உதயணனுக்கு அமைந்துள்ளது.

உதயணன்–வாசவதத்தை காட்சியெய்துதல்

உதயணன் வாசவதத்தை என்னும் பேரழகியைக் கண்டான். அவளும் அவனைக் கண்டாள். இருவரும் நோக்கினர்.

*'நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு*
*தானைக்கொண் டன்ன துடைத்து'*[34]

என்று பார்வையால் தாக்குண்டு மயங்கி, 'மதங்கொண்ட களிறும் பிடியும் பாகர்களுக்கு அடங்காமல் ஒன்றையொன்று உற்றுநோக்கி இன்புற்றாற்போல் விளங்கினர்.[35] அதோடு,

*'செம்புலப் பெயல்நீர்போல அன்புடை நெஞ்சந்*
*தாம்கலந் தன...'*[36]

என்று இன்புற்றனர்.

இப்படியாகக் களவு கொண்ட உதயணன், வாசவதத்தைக்கு யாழ் கற்பிக்கும் ஆசிரியனாகிறான். தன் எதிரில் யாழ் கற்கவிருக்கும் வாசவதத்தையைக் காண்கிற பொழுது,

*'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?'*[37]

என்பது போலவும்,

*'கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்*
*என்ன பயனும் இல'*[38]

என்பது போலவும் பேச்சற்று இன்புற்று விளங்கினர். அதை,

*'ஆயத் திடையோள் பாசிழைப் பாவை*
*யானை மிசையோன் மாமுடிக் குருசில்*
*இருஉரு மவ்வழிப் பருகுவனர் நிகழ'*[39]

என்பதிலிருந்து, அவ்விருவரும் தம்முள் நோக்கித் தத்தம் கண்கள் என்னும் வாயாலே பருகுவார் போன்று திகழ்ந்தனர்

எனப்படுகிறது. ஆகவே, உதயணனும் வாசவதத்தையும் காட்சியெய்திக் காதல் மிக்குண்டு களித்தனராவர்.

உதயணன் – பதுமாபதி காட்சியெய்துதல்

பெதும்பைப் பருவம் மிக்கு விளங்குகின்ற மலர்மாலை அணிந்த பதுமாபதி என்பாள் தேரில் ஏறிவந்து காமகோட்டத்துள் ஒப்பற்ற காமவேளைக் கண்டு வணங்க, அப்பொழுது அங்கிருந்த உதயண மன்னனும் அவளைக் கண்டு விரும்பித் தான் மருவுகின்ற வாசவதத்தையே உயிருடன் மீண்டு வந்தாள் என்று தன் மனத்தினுள் தனக்குத் தானே கூறி நிற்க, திருமகளை ஒத்த அப்பதுமாபதியும் அவ்வுதயணனைக் கண்டு மனந்திகைத்துக் காமுற்று வருந்தி நின்றாள். அதாவது,

*'பருவமிக் கிலங்குங் கோதைப்*
*பதுமைதே ரேறி வந்து*
*பொருவில்கா மனையே காணப்*
*புரவலன் கண்டு கந்து*
*மருவும்வா சவதத் தைதான்*
*வந்தன ளென்று ரைப்பத்*
*திருநகர் மாதுங் கண்டு*
*திகைத்துளங் கவன்று நின்றாள்'* (பா.157)

என்பதாகும். எனவே, உதயணனும், பதுமாபதியும் காட்சி எய்தி இருவரும் காதலுற்றனர் என்பது கருதத்தக்கது.

உதயணன் – மானனீகை காட்சியெய்துதல்

பந்தாட்டப் புகழ்மிகு பேரழகி மானனீகை, ஆடுகளத்தில் இறங்கி, 21 பந்துகளை எடுத்துப் பிறர் வியக்குமாறு ஆடினாள். மானனீகையின் சிறந்த தோற்றத்தைக் கண்டு மயங்குகிறான் உதயணன். அதை,

*'ஆடகம ணித்தொனி யரசுளங் கவர்ந்துடன்*
*கூடகம னத்தினற்கு மரனினிய னாயினன்'*
(பா.236,அடி.3,4)

என்னும் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

ஆதலால், அவன் மனம் பெரிதும் கவரப்பட்டு அவளோடு கூடும் உள்ளம் உடையனானான் என விளங்குகின்றது.

உதயணன் – விரிசிகை காட்சியெய்துதல்

தவவனத்தில் வசிக்கும் துறவி மகளான 'விரிசிகை' என்பவள், அவ்வனத்திற்கு வந்த உதயணனைக் கண்டாள். துறவோரையன்றிப் பிற ஆடவரை அவள் கண்டதில்லை யாதலால் அவன் மீது நோக்கினாள். 'இவன்தான் கதை வாயிலாய்க் கேட்டிருந்த காமனே போலும்! இவன் தன்பாற் காதலுடையவனாய் அநங்கனாயினும் இவ்வுருவத்தோடே தன்பால் எய்தினான் போலும்' என்னும் கருத்துடையவளாய் நெஞ்சம் மயங்கினாள் என்பதை,

*'அருந்தவர் அல்லதை ஆடவர் அறியாள்*
*தவிர்வில் காதலொடு தன்வழிப் படூஉம்*
*கவர்கணை நோன்சிலைக் காமன் இவனெனும்*
*மையல் உள்ளமொடு.....'*[40]

என்னும் பாடல் சுட்டியுள்ளது. அத்தகையவளை உதயணனும் நோக்குகிறான். அவளது அழகினைக் கண்டு மயங்கினான் என்பதை,

*'இயற்கைத் திருமகள் இவளென எண்ணி*
*இணைமலர் நெடுங்கண் இமைத்தலும் வாடிய*
*துணைமலர்க் கோதைத் தோற்றமுங் கண்டே*
*முனிவர் மகளெனத் தெளிவுமுந் துறீஇ'*[41]

என்ற பாடல் எடுத்துரைக்கின்றது. ஆகவே, உதயணனும், விரிசிகையும் காட்சியெய்திக் காதலுற்றனர் என்பது தெளிவு.

ஐயம் தோன்றல்

ஒத்த தலைவனும் தலைவியும் காட்சிப்படுதலின் போது ஐயம் தோன்றல் இயல்பாகிறது. அதாவது, எதிர்ப்பட்ட தலைவன் தலைவி ஆகிய இருவருள்ளும் உயர்வுடைய தலைவனுக்கு, 'மக்களுள்ளாள் அல்லள். தெய்வமோ?' எனத் தலைவிமாட்டு ஐயம் தோன்றுதல் சிறந்ததென்று சொல்லுவர் புலவர். அதை,

*'சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப'*[42]

என்றும்,

*'மடமான் நோக்கி வடிவும் கண்ட*
*இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்'*[43]

என்றும், கூறுவர். தலைவனுக்கு ஏற்படும் ஐயம்,

*'அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலும்என் நெஞ்சு'*[44]

என்பதாகிறது.

அவ்வாறே உதயணன் விரிசிகையைக் கண்டு, மெய்ந்நெறி நூலொடு பொருந்திய தூய முறைமையோடே தவம் இயற்றும் இத்தவப்பள்ளியின் கண் உறைதலை விரும்பி வந்து உறைந்து நின்ற திருமகளோ? என ஐயம் உற்றான். அது,

*'நூலொடு புணர்ந்த வாலியன் மார்பின்*
*தவத்தியற் பள்ளி சார்ந்தனள் உறையும்*
*இயற்கைத் திருமகள் இவளென எண்ணி'*[45]

என்பதாகும். இதனால், விரிசிகை தெய்வப்பெண்ணோ என்று ஐயம் உற்று மயங்கினான் உதயணன் எனத் தெளிய முடிகிறது.

**ஐயம் நீங்கல்**

தலைவனுக்கு ஏற்பட்ட ஐயம் நீங்க உதவும் கருவிகளாக,

*'வண்டே இழையே வள்ளி பூவே*
*கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று*
*அன்னவை பிறவும் ஆங்கண் திகழ*
*நின்றவை களையும் கருவி என்ப'*[46]

என்று அமைந்துள்ளன. அதாவது, வண்டு மொய்த்தல், அணிகள் அணிந்திருத்தல், உடலில் பச்சை குத்தியிருத்தல், மாலை வாடியிருத்தல், கண்பிறழுதல், அசைவுடைமை, கண்இமைத்தல், ஆண்மக்களைக் கண்டு அஞ்சுதல், கால் நிலம்தோய்தல், வியர்த்தல், நிழலாடுதல் முதலிய நிகழ்வுகள்

ஐயத்தைப் போக்க உதவும் கருவிகளாகும். இத்தகு கருவிகளைக் கொண்டே தலைவன் அவள் மானிடமகள் என்ற துணிவினைப் பெறுகிறான்.

அத்தகு நிலை உதயணனுக்கு ஏற்படுகிறது. விரிசிகையின் தோற்ற அழகைக் கண்டு, அவள் தெய்வ மகளோ என்று உதயணன் ஐயுற்ற பொழுது, அவளுடைய தாமரைமலர் போன்ற அழகிய நெடியகண்கள் இமைத்தலையும், மாலை வாடியிருத்தலையும் கண்டான். ஆதலால், இவள் திருமகள் அல்லள்; இப்பள்ளியில் உறையும் முனிவர் மகளே ஆதல் வேண்டும் எனத்துணிந்து, பின்னரும் அவள் பால் அமைந்து கிடந்த அரசமகளிர்க்குரிய இலக்கணங்களை ஆராய்ந்தறியலானான். அறிந்த பிறகு ஐயம் நீங்கி விருப்பம் கொள்கிறான் என்பதை,

> *'இணைமலர் நெடுங்கண் இமைத்தலும் வாடிய*
> *துணைமலர்க் கோதைத் தோற்றமுங் கண்டே*
> *முனிவர் மகளெனத் தெளிவுமுந் துறீஇ*
> *ஐயமின்றி...'*[47]

என்னும் பாடலடிகள் தெரிவிக்கின்றன. ஆகவே, வடிவுகண்டு காமுறும் தலைவனுக்கு ஐயம் தோன்றிப் பின்னர் ஐயம் நீங்குவது இயல்பாதல் போன்றே, உதயணனும் விரிசிகையின் வடிவு கண்டும், அவள் இருக்குமிடம் குறித்தும் ஐயம் தோன்றி, பிறகு அந்த ஐயம் நீங்கப்பெற்றான் எனக் கருதத்தக்கது.

### ஒப்பனை

ஒப்பனை என்பது அழகுபடுத்தல் எனப் பொருளதாகும். ஒப்பனை செய்து தன்னை மிக அழகுபடுத்திக் கொள்வது என்பது மனித இனத்துள் தோன்றிய ஒன்றாகும். அழகு ஒரு கலை. அந்தக் கலையை உதயணன் கற்றறிந்தான்.

கோசலத்தரசன் மகள் மானனீகையின் மீது, உதயணன் காதல் கொண்டான். முதல் மனைவி வாசவதத்தைக்குப் பணிப்பெண்ணாக்கிக் கொண்டான். அவள் யவனமொழி அறிந்தவள். வாசவதத்தைக்கு அலங்காரம் செய்து வருபவள்.

ஒருமுறை உதயணன் வாசவதத்தைக்கு அலங்காரம் சரியில்லை என்று அலங்காரத்தைச் சிதைத்து 'யான் அலங்கரிக் கிறேன்' என்று பூந்தாதினையும், சந்தனக்குழம்பையும் கூட்டி வாசவதத்தையின் நெற்றியில் ஒப்பனையாகத் தன் காம விருப்பினை யவன மொழியில் எழுதி விடுக்கிறான். அதைக் கொங்குவேளிர்,

*'அழித்தலங் காரமறியா ளிவளெனப்*
*பழித்தியான் புனைநெறி பாரெனப் புனைவோன்*
*பற்றிய யவன பாடையி லெழுத்தவள்*
*கற்றன ளென்றெடுத் துற்றவ ருரைப்பக்*
*கேட்டன னாதலிற் கோற்றொடி நுதன்மிசை*
*பூந்தா தோடு சாந்துறக் கூட்டி'*[48]

எனக் கூறுவார். 'மனைவி நெற்றியில் காதலிக்கு மடல் வரையும் புதுமையை உதயணனைத் தவிர வேறெந்தக் காப்பியத்தலைவனும் செய்ததில்லை'[49] எனும்படி அவனின் ஒப்பனைத் திறம் இருந்தமை பாராட்டுதற்குரியது.

கோவலன், கண்ணகியைப் பாராட்டுகிற பொழுது,

*'நாறைங் கூந்தலை உடையவள்'*[50]

என்று கூறினான். ஆதலால் கூந்தல் ஒப்பனைக் கலைத்திறம் உடையவன் என்று அவன் பாராட்டப்படுகின்றான் என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

பூச்சூடல்

பூச்சூடல் என்பது தலைவன் தலைவியரிடையே நிகழும் நிகழ்ச்சியாகும். தலைவனை விரும்பிய தலைவி, தலைவன் கையால் பூவினைச் சூட்டிக் கொள்ளல் ஆகும்.

உதயணன் காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். அக்காட்டில் அரசாட்சியைத் துறந்து மனைவியுடன் வந்து தவம் செய்து கொண்டிருக்கும் ஓர் அரச முனிவருடைய மகளும் பேரழகியுமான 'விரிசிகை' என்னும் பெயருடைய சிறு

பிராயத்தாள் ஒருத்தி இருந்தாள். அவள் உதயணனைக் கண்டு விரும்புகிறாள். தான் வைத்திருந்த பாவை, பந்துகளை ஓரிடத்தே வைத்துவிட்டு மெல்லச் சென்று, நந்தியாவர்த்தம், நாகம், சிந்துவாரம், சேபாலிகை, குருக்கத்தி, சுள்ளி, சிறுசேடம், சண்பகம் ஆகியவற்றின் பூக்களைக் கொண்டு வந்து உதயணனிடம், 'ஐயா! இம்மலர்களைப் பிணையல்களாகத் தொடுத்து ஈமின். பாவையும் யானும் அணிந்து கொள்வோம் என்று சொல்லி இரந்து அம்மலர்களை நீட்டினாள். அவனும் தன் மேலாடையை விரித்து அதில் அம்மலர்களை வாங்கினான். இரத்தின மாலைபோலத் தோற்றும்படி மாலைகள் கட்டி அவளுக்குக் கொடுக்க, அவள் அம்மாலையை வாங்கித் தக்கவாறு அணிந்து கொள்வதற்கு அறியாதவளாகி வருந்தி அமர்ந்தாள். அதனை அறிந்த அவன் 'இங்கே வா' என்று அழைத்து அவளைத் தன் மடிமேல் வைத்து அவற்றை அவள் உச்சியிலும், தலைப்பக்கத்திலும், மயிர் முடியிலும் அலங்காரமாகப் புனைந்து பாராட்டி மெல்லச் செல்' என்று விடுக்க அவள் சென்றாள். அதை,

*'சூடுதல் தேற்றாள் சுற்றுபு திரியும்*
*ஆடமைத் தோளி அலமரல் நோக்கி*
*மடவரன் மாதரை வாவென அருளித்*
*தடவரை மார்பன் தாண்முதல் உறீஇ'*
*உச்சிக் கேற்ப ஒப்பனை கொளீஇப்*
*பக்கச் சின்மலர் பத்தியிற் கட்டுபு*
*நீலநாகம் பைவிரித் தன்ன*
*கோலச் சிகழிகை தான்முதல் சேர்த்தி*
*அஞ்செங் கத்திகை அணிபெற அடைச்சிப்*
*பைங்கேழ்த் தாமம் பக்கம் வளைஇ*
*இருளறு மதியின் திருமுகஞ் சுடர*
*அமைபுரி தோளியை அன்பின் அளைஇப்*
*புனைமலர்ப் பிணையல் சூட்டினன் புகன்றென்'*[51]

என்றும்,

*'கடிகமழச் சாரலிற்*
*கண்டமாத வன்மகள்*
*துடியிடை விரிசிகையைத்*
*தோன்றன் மாலை சூட்டினான்'*

*(பா.134, அடி.3,4)*

என்றும் பாடலடிகள் குறிப்பிட்டுள்ளன. ஆகையால் உதயணன் விரிசிகையின் விருப்பப்படி பூச்சூடி மகிழ்ந்தான் என்பதை அறியமுடிகிறது.

**கண்ணி பெறல்**

மகதநாட்டு, இராசகிரியம் என்னும் நகரை அரசாளும் தருசகராசனின் தங்கை பதுமாபதியாவாள். இராசகிரியத்தில் நடைபெறும் காமன் விழாவில் காமனை வழிபட வந்த பதுமாபதியைக் கண்ட உதயணன் காதல் கொள்கிறான். பேரழகு வாய்ந்த பதுமாபதி வாசவதத்தையின் வடிவழகை ஒத்தவள் ஆதலாலே பதுமாபதியை விரும்பினான். அவளும் விரும்பினாள்.

இருப்பினும் அவன், அவளிடத்தில் தன் மீதுள்ள அன்பை அறிய வேண்டி, மலர் முதலியவற்றால் செய்த கண்ணியை, நகரில் விளங்கிய பொய்கையின் கண் உள்ள மரத்தின் கிளை ஒன்றில் அவள் காணக் கட்டிவிட்டு மறைந்திருக்கிறான். அவள் கண்ணியைக் கைக்கொள்வாளாயின் யான் விரும்பிய காதல் உண்மை என்றிருந்தான். அவளும் அவன் எண்ணியவாறே கண்ணியைக் கண்டு புன்முறுவலித்து, ஒரு கழுநீர்ப் பூவைக் கையில் பற்றி அதன் தண்டில் தன் பெயர் பொறிக்கப்பட்டுள்ள மோதிரத்தைச் செறித்து அதனையும் பிணையலையும் சந்தனத்தையும் அவன் வைத்த கண்ணியைச் சார ஒரு பால் வைத்தாள். பின்பு, அவன் வைத்த கண்ணி முதலியவற்றை எடுத்து வந்து அக்கண்ணியைத் தன் சென்னியில் அணிந்து பிறவற்றை மார்பில் அப்பிக்கொண்டு மிக அழகுபெற்று விளங்கி நின்றாள். அதாவது,

*'விரும்புவன ளாகி விண்ணவர் மருள*
*வத்தவர் கோமான் வித்தகம் புனைந்த*
*இலைவினைக் கம்மத்துப் பலவினை கண்டே*
*தன்முத லாகலிற் சின்னகை முறுவலொடு*
*பொற்பூண் முலைமிசை யாப்பு தடாஅக்*
*கண்ணி கொண்டுதென் சென்னி சேர்த்தி*
*ஒருங்குகலந் தனள்போற் றிருந்தொளி திகழ்ந்து*
*பசப்புமீ தடர்ந்து மிகப்பொலிந்து இலங்க'*[52]

என்பதாகும். இதனைக் கண்ட உதயணன் மகிழ்வுற்றுப் பதுமாபதி வைத்த சந்தனத்தை மார்பிலும் தோளிலும் பூசி அப்பிணையலைச் சூடி மோதிரத்தைப் பிறர் அறிந்து கொள்ளாதபடி தன் விரலில் சேர்த்திக் கழுநீர் மலரைக் கையிற் பிடித்துக் கொண்டு சிறிதும் கவலையின்றி முகமலர்ச்சியோடு இருந்தான். அதை,

*'.... பூந்தண் சாந்தம்*
*எழுவுறழ் தோளு மகலமு மெழுதிப்*
*புனையிருங் குஞ்சித் தோட்டுக் கிடையே*
*துணைமலர்ப் பிணைய தோன்றச் சூடிச்*
*சுடர்மணி யாழி படைபயின்று பலித்த*
*செறிவிர லங்கையின் மறைவுகொள வைத்துக்*
*கழுநீர் நறும்போ துளர்த்துபு பிடித்து*
*மறங்கெழு வேந்தனு மம்மர் தீரப்...'*[53]

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஆதலால் உதயணன் பதுமாபதியிடமிருந்து காதல் உறுதிப்பட்டமைக்காகப் பூ மாலை பெற்றுக் கொண்டாள் என அறியமுடிகிறது.

புணர்ச்சி

புணர்ச்சியாவது, தலைவனும் தலைவியும் உள்ளமொடு புணரும் மெய்யுறுப் புணர்ச்சியேயாகும். அது தலைமக்கள் இருவரும் கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தனியிடத்துக் கண்டு கூடுவதாகும். இதனைக் காந்தருவம் என்பர்.[45] அவ்வாறே, உதயணன் ஒருநாள் காமன் கோட்டத்தின் உள்ளே

இருக்கும் கடியறையில் ஒருவரும் அறியாதபடி ஒளிந்திருந்தான். அப்போது பதுமாபதி தனியே அவ்வறையின் உள்ளிடத்தை அடைந்தாள். அப்போது, உதயணன் தன் இளமைக் கோலத்தோடு எதிரே நின்றான். அவன் அவளைப் பார்த்துப் பாராட்டி, 'தீண்டிலேனாயின் உய்யேன் அருள்' என்று வேண்டினான். அவளும் ஏற்று அருள் புரிந்தாள். அதனால் இருவருக்கும் காந்தருவம் நடைபெற்றது.

அதாவது,

*'வயப்பட லுற்று வயங்கிழை மாதர்*
*தானுங் கதுமென நேர்முக நோக்க*
*நெஞ்சிறை கொளீஇய நிறையமை நெடுந்தாழ்*
*வெந்தொழிற் காம வேட்டை திறப்படத்*
*திண்பொறி கலங்கித் திறல்வே றாகி*
*வேலை யெல்லை மீதூர்ந் திரண்டு*
*கோலப் பெருங்கடல் கூடி யாங்கும்'*[55]

என்பதாகும். ஆகவே, உதயணன் வாழ்வில் களவொழுக்கம் நடைபெற்றது என அறியமுடிகிறது.

**வகைமை**

தலைவன், தலைவியரிடையே களவொழுக்கக் காலத்தில் புணர்ச்சிகள் நடைபெறுவதுண்டு. அவை ஏற்படக் காரணங்கள் மூவகைப்படும். அவை,

*'பூவை புனலே களிறே என்று'*[56]

அமைந்துள்ளன. அதாவது, பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறு தரு புணர்ச்சி என வகைப்படுகின்றன.

இத்தகு, களவொழுக்கப் புணர்ச்சி இலக்கணம் இருக்க, உதயணன் வாழ்வில் சற்று வேறுபட்ட நிலையில் களவொழுக்கப் புணர்ச்சிகள் நடைபெற்றன. அவை கண்ணிதரு புணர்ச்சி, குரங்குதரு புணர்ச்சி, கோட்டான் தரு புணர்ச்சி ஆகியன.

### கண்ணிதரு புணர்ச்சி

கண்ணிதரு புணர்ச்சி என்பது பூமாலையைத் தலைவன், தலைவிக்குச் சூடுதலின் வழி ஏற்படும் புணர்ச்சியைக் குறிக்கிறது. இந்தப் புணர்ச்சி உதயணன், பதுமாபதி ஆகியோரிடையே ஏற்பட்டது.

உதயணன் பதுமாபதியிடம் காதல் மிக்குண்டிருந்த நிலையில், ஒரு நாள் பொய்கையில் நீராட வந்த பதுமாபதியைக் கண்டு மகிழ்ந்தான். அவள் நீராடிய பிறகு வரும் வழியில் ஒரு மரத்தின் கிளையில் பல நிற மலர்களைக் கொண்டு தொடுத்த கண்ணியை வைத்து மறைவிடம் சென்றான். அவன் எதிர்ப்பார்த்த படியே அவளும் வரும் வழியில் அக்கண்ணியைக் கண்டு மகிழ்ந்து எடுத்துத் தன் தலையில் சூடி, மிக அழகு பெற்று விளங்கி நின்றாள். பிறகு, கண்ணியிருந்த இடத்தில் தான் கொண்டு வந்த சந்தனத்தை வைத்துவிட்டு வேறிடம் சென்று நின்றாள். இதனைக் கண்ட உதயணன், பதுமாபதி ஆடிய பொய்கையில் நீராடி, பிறகு அவள் வைத்து விட்டுச் சென்ற சந்தனத்தை மார்பிலும் தோளிலும் பூசிக்கொண்டு மகிழ்ந்து, 'யாம் கண்ணி முதலியவற்றானும் கலப்புடைய மாயினெம்'[57] நெஞ்சே கவலைப்படாமல் இரு என்று கூறியதோடு இருவரும் கூடி மகிழ்ந்தனர். ஆகவே இவர்களின் மகிழ்ச்சிக்குக் 'கண்ணி' காரணமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### குரங்குதரு புணர்ச்சி

குரங்குதரு புணர்ச்சி என்பது தலைவன், தலைவியரிடையே நிகழ்ந்த பிரிவிற்குப் பிறகு, மீண்டும் சந்திப்பு மலைச்சாரலிடத்து நிகழ்கிறது. அப்பொழுது தலைவி தன் அன்பை வெளிப்படுத்தத் தலைவனிடத்தில் தாமதம் காட்டுகிறாள். அவ்வமயம் மலைச் சாரலருகே இருந்த மரம் ஒன்றிலிருந்து ஒரு குரங்கு திடீரெனக் குதிக்கும். அதனால் அச்சம் கொண்ட தலைவி, தலைவனிடம் விரைந்து வந்து தன்

அன்பைச் செலுத்தி நெருங்குவாள். அதன் விளைவு புணர்ச்சி நடைபெறும். இதுவே குரங்குதரு புணர்ச்சி ஆகும்.

மேற்குறித்த புணர்ச்சி உதயணனுக்கு ஒருமுறை நடந்தது. வாசவதத்தை அவனின் சில மணி நேரப் பிரிவைக் கூடப்பொறாதவள். அத்தகையவளிடம் சில மணிநேரம் கடந்து காலதாமதமாக வருகிறான் உதயணன். அதனால் அவள் வருத்தமுற்று அவனிடத்தில், தன் அன்பில் காலம் தாழ்த்துகிறாள். அப்பொழுது அங்கிருந்த மலைச்சாரலிலுள்ள ஒரு பலாமரத்திலிருந்த ஆண்குரங்கு ஒன்று திடீரென்று குதித்து வந்தது. அதனைக் கண்ட வாசவதத்தை அஞ்சி நடுங்கி விரைந்து வந்து அவனைத் தழுவிக் கொண்டாள். அவனும் கவலை நீங்கி, அக்கணத்தில் அவளுடன் காலத்தை இனிது கழித்தான். அதை,

*'கருமுக முசுக்கலை கதுமெனத் தோன்ற*
*இன்னதென் றுணரா நன்னுதல் நடுங்கி*
*அழல்கதிர் பரப்பி உழல்சேர் வட்டமொடு*
*நிழலவிர் கதிர்மதி நிரந்துநின் றாங்குத்*
*திலகத் திருமுகஞ் செவ்வன் திருத்தி*
*ஒழுகுகொடி மருங்கில் ஒன்றா யொட்டி*
*மெழுகுசெய் பாவையின் மெல்லியல் அசைந்து*
*மன்னவன் மார்பின் மின்னென ஒடுங்கி*
*அச்ச முயக்க நச்சுவனள் விரும்பி*
*அமிழ்துபடு போகத் தற்புவலைப் படுத்த*
*மாதரை மணந்த தார்கெழு வேந்தன்'*[58]

என்னும் பகுதி விளங்குகின்றது. இதனால் குரங்குவழி அச்சமுயக்கம் ஏற்பட்டுப் புணர்ச்சி நடைபெற்றது என விளங்குகிறது.

### கோட்டான் தரு புணர்ச்சி

கோட்டான் தரு புணர்ச்சி என்பது, அன்பு மிக்க காதலரிடையே அன்பை விரைவுபடுத்தக் கோட்டான்

இடைப்படுதல் வழி ஏற்படும் புணர்ச்சியைக் குறிக்கும். இந்தப் புணர்ச்சி உதயணனிடம் காணப்படுகின்றது.

உதயணன் ஒருநாள் பதுமாபதியின் கன்னிமாடப் பள்ளியறையினுள்ளே பதுமாபதியுடன் தங்கியிருந்த போது, பதுமாபதியோடு உரையாடாமல், பள்ளியறையின் உட்புறச் சுவரில் உள்ள சிற்ப வேலைகளைப் பார்த்து வியப்புற்றான். அப்பொழுது அவள், அவன்தன்னைப் பாராமல் வேறிடத்தில் கருத்தைச் செலுத்திக் கொண்டே இருத்தலை அறிந்து புலந்து கடிய சொற்களைச் சொல்லிக் கலங்கினாள். அதனால் அவன், நங்காய்! யான் யாதொரு குற்றமும் செய்திலேன். நினைத்தும் இலேன். வருந்தல் வேண்டா. பொறுத்திடுக' என்று பலமுறை குறையிரந்து அவளுடைய புறத்தைத் தைவந்து தோட்டைக் காதில் அணிந்து மற்ற ஆபரணங்களையும் திருத்தி நலம் பாராட்டிச் சந்தனத்தைப் பூசித் தழுவுவதற்கு நெருங்குகையில் அவள் 'என்னைத் தீண்டாதீர்' என்று சினந்துரைத்து வேறிடஞ் செல்லப் புடைபெயர்ந்தாள். அப்பொழுது கோட்டான் ஒன்று வந்து அம்மாடத்தின் மேல் உள்ள சூலத்தில் ஏறியிருந்து கேட்போர் அஞ்சும்படி ஒலித்தது. அதைக்கேட்ட பதுமாபதி நடுக்கமுற்று ஓடிவந்து உதயணனைத் தழுவிக் கொண்டாள். அவனும் அவளுடைய அச்ச முயக்கத்தை மிக விரும்பி, அஞ்சற்க என்று கூறிக் கூகையின் உதவியை நெஞ்சத்துள்ளே பாராட்டி அவளைப் புல்லியும் திளைத்தும் 'அமரராக்கிய அமிழ்தே' எனப் புகழ்ந்து ஒழுகினான். அதாவது,

*'மாடத் தகத்தி லாடுவினைக் காவினுட்*
*கொம்பர் மீமிசைக் கூகைவந் துலாஅய்*
*வித்தகக் கைவினைச் சத்தி யேறி*
*உட்குத்தக வுரைத்தலுங் கட்கின் பாவை*
*நெஞ்சந் துட்கென நெடுவிடை நின்ற*
*காற்றெறி வாழையி னாற்ற நடுங்கி*
*அஞ்சி லோதி யாகத் தசைத்தர*
*அச்ச முயக்க நச்சுவணன் விரும்பி*

*மெல்லியன் மாதரொடு மேவன கிளந்து*
*புல்லியும் திளைத்தும் புணர்ந்தும் பொருந்தியும்'*[59]

என்பதாகும். ஆகவே உதயணன், பதுமாபதி ஆகியோரிடையே நிகழவிருக்கும் புணர்ச்சியைக் கூகையின் ஒலி விரைவுப்படுத்தியது எனப் புலனாகின்றது.

பரத்தைமை ஒழுக்கம்

மனிதனின் அகவாழ்வில் பரத்தையர் ஒழுக்கம் உண்டு. அது பரத்தையருடன் ஒழுகுவதாகும். அது செல்வந்தர்களுக்கு உரியது. பரத்தையர் எனப்படுவர் ஒருவருக்கென வாழாமல் ஆடவர் பலருக்கென ஒழுகுபவர் எனப்பட்டார். இவர் ஆடல், பாடல் என்னும் கலைகளில் வல்லவர். தம் அழகையும் இளமையையும் காட்டி இன்பத்தையும் பொருளையும் விரும்புபவர். ஒருவரிடத்தில் நிலையாகத் தங்கி வாழும் இயல்பற்றவர். இவரை நாடகக் கணிகை என்றும் வேசியர் என்றும் குறிப்பர்.[60] இத்தகைய ஒழுக்கமுடைய பரத்தையருடன் கூடிய ஒழுக்கம் உதயணனிடம் காணப்பட்டுள்ளது.

வாசவதத்தையின் பிரிவால் உதயணன் காமநோய் அதிகரிக்கப் பெற்று, மிக்க துன்பமுற்று மனவேறுபாட்டையும், உடல் வேறுபாட்டையும் அடைந்தான். நனவிலும் கனவிலும் அவளையே நினைந்து,

*'தீமுகத்திட்ட மெழுகிற் றேம்பியும்*
*தாய்முகத் தியாத்த கன்றிற் புலம்பியும்'*[61]

என்று வருந்தினான்.

இந்த வருத்தத்தையும், வேறுபாட்டையும் நம்மிடையே பழகியவர் காணின் ஐயுறுதல் கூடும். அதை மறைப்பதற்கும் வழியிராது. அதலால் அதனை வேறுவகையால் மறைத்தல் வேண்டும் என எண்ணி வயந்தகனோடு ஆராய்ந்து, 'அயலான் ஒருவனிடம் சென்று வரும் இயல்புள்ள பரத்தை ஒருத்தியை எப்படியேனும் அழைத்துவா என்று சொல்ல நண்பனான வயந்தகன், அவன் கட்டளையின்படி புறத்தே சென்று நகரத்தார்

அறியுமாறு ‘முன்னம் வெறிகொண்ட நளகிரியின் மீது உதயணன் உலாவியபொழுது, அவனை விரும்பி அவன் மனத்தைக் கவர்ந்து, அவனை அரற்றிக் கொண்டு இருக்கும்படி செய்த நருமதை என்பவள் எங்கே உள்ளாள்? என்று கேட்ப ஊரார், அத்தன்மையையுடையாள் பரத்தையர் சேரியில் அரங்கியல் மகளிர்க்கு ஆடலைக் கற்பிக்கும் தலைக்கோல் பெண்டிருள் முதல்வளாகிய ஒருத்தியின் மகள்; நருமதை என்பாள் என்று கூறினர். அதைக் கேட்ட வயந்தகன் அவளிருக்குமிடமான செல்வப் பரத்தையருடைய சேரியை அடைந்து விசாரித்துக் கொண்டு நருமதையின் வீட்டை அடைந்தான்.

வயந்தகனின் வரவைக் கண்ட தாய்க்கிழவி மிக்க மரியாதையோடு வரவேற்று அவனை ஓர் ஆதனத்தில் இருத்தி, அவன் வந்த செய்தியை அறிந்து மகிழ்ந்தாள். நருமதைக்கும் கூறினாள். ஆனால் நருமதை அயலான் வீட்டிற்குச் செல்லேன் என்று மறுத்துவிட்டாள். பிறகு ஒருவாறு ‘தாயும் உறவினர்களும் வலிந்து கொடுத்துப் பிடித்துச் செல்வாயாக’ என்று கூறவே வயந்தகன் அவளைத் தேரிலேற்றி வீதி வழியே அழைத்துச் செல்லுகையில், வீதியில் உள்ளோர் வந்தவன் காமவிருத்தினன் என்றும், பெண்டிர்கள் பால் தவறு செய்தலுங் கூடும் என்றும், ‘நடவில் மங்கையருடைய நலத்திற்கு அவன் விருந்தினன் போலும்’ என்று சொல்வர். அவ்வாறு வயந்தகன் உதயணனது காமவேறுபாட்டினை நகரத்தார் யாவரும் அறியும்படி செய்து, அவளை அழைத்துச் சென்று அவன்பால் அன்றிரவு முற்றும் இருத்தி மறுநாட்காலையில் அவளை அனுப்பிவிட்டான். அதை,

*‘..... வையத்து*
*வலிதிற் றந்த வால்வளைப் பணைத்தோள்*
*ஒருமனம் புரிந்த நருமதை கேட்ப*
*வேட்கைக் கிளவி வெளிப்படப் பயிற்றிச்*
*சேட்படு குருசில் சேர்தொறும் பொறாஅள்*
*நச்சுயிர்ப் பளைஇய நாகம் போல*
*அச்சுயிர்ப் பளைஇ யமரா நோக்கமொடு*

*சில்லைச் சிறுசொன் மெல்லியன் மிழற்ற*
*அவ்விரு ளீடக்கி வைகிருட் போக்கிப்*
*போற்றா மாக்க டூற்றும் பெரும்பழி*
*மேற்கொண் டனன்றான் மின்னிழை பொருட்டென்'*[62]

என்னும் பகுதி குறிப்பிடுகிறது. அதனால், உதயணன் பரத்தை ஒழுக்கம் புரிந்தவனாகின்றான் எனக் கருதப்படுகிறது.

**கற்பு**

கற்பு எனப்படுவது, பிறர் அறியாதபடி களவின்கண் பழகி வந்த தலைவனும், தலைவியும், ஊரார் அறியத் திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துவது ஆகும்.

இதை,

*'கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே'*[63]

என்கிறது தொல்காப்பியம். இத்தகு, கற்பு வாழ்க்கை,

*'பொற்பமை சிறப்பின் கற்புஎனப் படுவது*
*மகிழ்வும் ஊடலும் ஊடல் உணர்த்தலும்*
*பிரிவும் பிறவும் மருவியது ஆகும்'*[64]

என்று அமைகிறது. அதாவது, தலைவன் தலைவியர் கூடலால் தோன்றும் உள்ள மகிழ்ச்சி; அது சிறக்கத் தோன்றும் ஊடல்; அவ்வூடலை உணர்த்தல்; தலைவன், தலைவியைப் பிரிதல் ஆகியவற்றுடன் பிறவும் பொருந்தியது ஆகும்.

இத்தகைய கற்பொழுக்க நிலைகள் உதயணன் வாழ்க்கையிலும் காணக்கிடக்கின்றன. அவை வரைவும், மகிழ்வும், ஊடலும் கூடலும், அறம், ஈகை முதலிய செயல்கள் ஆகும்.

## வரைவும் மகிழ்வும்

### உதயணன் வாசவதத்தை மணம்

வரைவு எனப்படுவது, தலைவன் தலைவியை ஊரறியத் திருமணம் செய்து கொள்ளுதல் ஆகும். இதனை,

> *'வரைவுஎனப் படுவது உரவோன் கிழத்தியைக்*
> *குரவோர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்*
> *கரணமொடு புணரக் கடிஅயர்ந்து கொளலே'*[65]

என்ற நூற்பா, தலைமகன் தலைமகளை அவளுடைய பெற்றோர் முதலானோர் கொடுப்பவும் கொடாது இருக்கவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணம் செய்து கொள்ளுதல் வரைவு ஆகும் என்று விளக்குகிறது.

உதயணன் வாசவதத்தை ஆகிய இருவரும் களவொழுக்கம் புரிந்து வந்தனர். அது வாசவதத்தையின் பெற்றோர்களுக்குத் தெரிய, அவர்கள் திருமணத்திற்கு ஏற்பாடு செய்கின்றனர். வள்ளுவ முதுமகன், வெண்சாந்து பூசி, வெண்மலர் மாலைகளை அணிந்து, வெண்துகில் உடுத்திச் சென்று, பொன்வார் விசித்து முத்துமாலை, மலர்மாலைகளை அணிந்து ஏற்றுரிபோர்த்தப் பெற்றதாகிய அரசனுடைய கொற்ற முரசத்தைப் பெரும்பணைக் கொட்டிலிற் பூசித்துக் கொற்றவையைத் துதித்து, அதனை யானையினது பணை எருத்தத்தில் ஏற்றிப் பலர் தன்னைச் சூழ்ந்து வரத் தான் அந்த யானையின் முதுகிலுள்ள அணையில் இருந்து கொண்டு தேரோடும் வீதிகள் தோறும் சென்று நகரத்தார் எல்லோரும் அறியும்படி, 'அரசன்வேல் வெற்றி பெற்று விளங்குது, பூமகள் புணர்க! மண்மகள் மலிக! நகரத்தீர், நான் கூறுவனவற்றைக் கேளுங்கள்.

'பிரச்சோதன சக்கரவர்த்தியின் குலமகளாகிய வாசவதத்தையை நம்முடைய அரசர்பிரான் மணம் செய்யும் நாள் இன்னதாகும்' என்று குறுந்தொடியால் அம்முரசை அறைந்து தெரிவித்தான். இதனைக் கேட்ட நகரத்தார்கள்

மகிழ்ந்து அதிக விருப்பத்துடன் தத்தம் வாயில்கள்தோறும் தோரணங்களை நாட்டி மிகவும் விசாலமான பந்தர்களைப் போடுவித்து அவற்றின் அகத்தும் புறத்தும் விசித்திரமாகிய அலங்காரங்களைச் செய்தனர். நகர் கடிமணச் செல்வத்தால் விளங்கியது. திருமணத்திற்கு வேண்டிய எல்லாம் அமைக்கப்பெற்றன. அப்போது சோதிடர் வந்து முகூர்த்த வேளையைத் தெரிவித்தனர். புரோகிதன் வந்து மணப்பந்தலில் உதயணனையும் வாசவதத்தையையும் ஆசனத்தில் இருக்கச் செய்து, எதிரில் அக்கினியை வளர்த்து உரிய பொருள்களைக் கொண்டு ஆகுதி பண்ணித் திசைகள்தோறும் உரிய தெய்வங்களைப் பாதிட்டை செய்து பூசித்து, நிவேதித்து, அம்மியேற்றுதல் முதலிய விசேடங்களை நிகழ்த்தி, 'நன்னிலை அலகின் ஆவல்' போலவும் பொன்னணி நெடுமலை போலவும் மன்னுக' இவர் என வாழ்த்தினான். பின்னர் வாசவதத்தையின் முன்கையைப் பற்றிக் கொண்டு உதயணன் தீயை வலம் வந்தான். அருந்ததி காட்டல் முதலாகிய மற்ற சடங்குகளும் விதிப்படி நிறைவேறிய பின் இருவரையும் கட்டிலேற்றினர். அவர்களும் அன்பு மிக்கவர்களாகி இன்புற்றனர் என,

*'இலங்கிழைநன் மாதரை*
*யினிமை வேள்வித் தன்மையால்*
*நலங்கொளப்பு ணர்ந்தனன்*
*நாகநற் புணர்ச்சிபோல்*
*புலங்களின்மி குத்தபோகம்*
*பொற்புடன் னுகர்ந் தனன்*
*அலங்கலணி வேலினா*
*னன்பு மிகக் கூறினான்' (பா.122)*

என்னும் பகுதி குறிப்பிட்டுள்ளதை அறியமுடிகிறது. ஆகையால் உதயணன் வாசவதத்தை வரைவும் மகிழ்வும் அறியத்தக்கன.

உதயணன் பதுமாபதி மணம்

உதயணனுக்கு இயல்பாகவே வெற்றிகள் பல கிட்டுகின்றன. அதனால் அவனை, மகதமன்னன் தருசகன்

எதிர்கொண்டு வரவேற்று மகிழ்ச்சியுடன் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று, பதுமாபதி என்னும் தன் தங்கையாகிய நங்கையைச் செல்வமிக்க நல்ல திருமண வேள்வி வாயிலாய் அச்செல்வச் சிறப்புடைய உதயணனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். அதாவது,

*'வருவவிசை யத்துடன்*
*வத்தவற் கிறைவனைத்*
*தருசகனெ திர்கொண்டு*
*தன்மனை புகுந்துபின்*
*மருவநற் பதுமையா*
*மங்கை தங்கை தன்னையே*
*திருநிறைநல் வேள்வியாற்*
*செல்வற்கே யளித்தனன்'* (பா.173)

என்பதாகும்.

இதில், உதயணன் பதுமாபதி திருமணம் நல்ல நாளில் முகூர்த்தம் வைக்கப்பெற்று, நகர் அலங்கரிப்புடன், விதிப்படி நடைபெற்றது. ஆதலால் அவர்கள் இருவரும் மகிழ்வெய்தினர் என அறியப்படுகிறது.

உதயணன் மானனீகை மணம்

உதயணன் மானனீகையின்பால் மிகுந்த காதல் கொண்டு மூன்றாவது மனைவியாக மணம் புரிந்து மகிழ்வடைந்தான் என்பதை,

*'மன்னன்மா னனீகை தன்னை*
*மணமிகச் செய்து கொண்டான்'* (பா. 239, அ.4)

என்றும்,

*'கோலத் தேவியர் மேவினர் கொடுப்ப*
*ஓவியருட்கு முருவியை யுதயணன்*
*நான்மறை யாளர் நன்மணங் காட்டத்*
*தீவலஞ் செய்து கூடிய பின்றை*
*முற்றிழை மகளிர் மூவரும் வழிபடக்'*[66]

என்றும் குறிப்பிட்டுள்ளன. இங்கே உதயணன், கோசல மன்னன் மகளாகிய மானனீகையை மிகச் சிறப்பாகப் பலரறிய மணஞ்செய்து கொண்டான் எனவும், அதுவும் முதல் மற்றும் இரண்டாம் மனைவிகளாகிய வாசவதத்தை, பதுமாபதி ஆகியோரின் விருப்பப்படியே மானனீகையை மணந்து மகிழ்ந்தான் எனவும் தெரிகின்றமை.

**உதயணன் விசிரிகை மணம்**

முன்னொரு காலத்தே காட்டில் ஒரு சோலையிலே மலர்மாலை புனைந்து சூட்டி அவளழகை உள்ளத்தால் நுகர்ந்து விடப்பட்ட பூங்கொத்துப் போன்ற பொலிவுடைய நல்லாளாகிய விரிசிகையையும் உதயணன் மணஞ்செய்து கொண்டான். அதை,

*'தேவியர் மூவர் கூடத்*
*தேர்மன்னன் சேர்ந்து சென்னாட்*
*காவின்முன் மாலைசூட்டிக்*
*காரிகை கலந்து விட்ட*
*பூவின்மஞ் சரியைப் போலும்*
*பொற்புநல் விரிசி கையைத்*
*தாவில்சீர் வேள்வி தன்னாற்*
*றரணீசன் மணந்தா னன்றே' **(பா.240)***

என்னும் பாடல் குறிப்பிட்டுள்ளது. மேலும்,

*'பூவிரி கூந்தற் பொங்கிள வனமுலைத்*
*தேவியர் மூவருந் தீமுன் னின்றவட்*
*குரிய வாற்றி மரபறிந் தோம்பி*
*அருவிலை நன்கல மமைவர வேற்றிக்*
*குரவர் போலக் கூட்டுபு கொடுப்பக்*
*கூட்டமை தீமுதற் குறையா நெறிமையின்*
*வேட்டவட் புணர்ந்து வியனுல கேத்த'*[67]

என்னும் பகுதியும் சுட்டுகிறது.

ஆதலால், தேவிமார் மூவரும் முழு விருப்பத்துடன் மணவேள்வியின் முன்னின்று மரபறிந்து செய்தற்குரிய சடங்குகளைப் பேணிச் செய்து அந்த விரிசிகைக்கு அரிய விலையினையுடைய நல்ல அணிகலன்களைப் பொருத்தம் உண்டாகப் பூட்டி அவளுடைய தாய்தந்தையர் போல, அவள் கையினைப் பற்றி உதயணன் கையிற்சேர்த்துக் கொடுப்ப, அவன் அவளை மணம் செய்து மகிழ்ந்தான்.

ஆகவே, உதயணன், வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, விரிசிகை ஆகிய நால்வரை மணந்து மகிழ்ந்துள்ளமை புலனாகின்றது.

ஊடலும் கூடலும்

தலைவன், தலைவியரிடையே நிகழும் சிறு பிணக்கு, பிறகு கூடி மகிழ்வதே ஊடல் கூடல் ஆகும். அதாவது, தலைவன் மீது தலைவிக்குச் 'சிறு பிணக்கு' என்று சொல்லப்படும் சிறுசினம் ஏற்படும். பிறகு தலைவன் அந்தச் சினத்தை அறிந்து, அதற்கான காரணங்களை விளக்கிக் கூறி, சினத்தைப் போக்கி, பிறகு கூடி மகிழ்வான் என்பதாகும். இவ்வாறெல்லாம் நிகழ்வது காதலுக்கு இன்பத்தைக் கொடுப்பதற்காகும். அதனால் வள்ளுவர்,

*'ஊடுதல் காமத்திற்கு இன்பம், அதற்கின்பம்*
*கூடி முயங்கப் பெறின்'*[68]

என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகு ஊடல் பெரும்பான்மையாகத் தலைவன் தலைவியை விட்டு, பரத்தையரிடம் இன்பம் துய்த்தற் பொருட்டுச் செல்வதாலேயே நிகழ்கிறது. இந்த மாதிரியான ஊடல் கூடல் நிகழ்வு உதயணனிடம் காணப்படுகின்றது.

உதயணனிடத்தில் வாசவதத்தையும், பதுமாபதியும் ஊடல் கொண்டு பிறகு மகிழ்கின்றனர்.

வாசவதத்தை ஊடல்

உதயணன் மீது அன்பு கொண்ட வாசவதத்தை உதயணனிடம் ஊடல் கொள்கிறாள். உதயணனின் சில மணிநேரப் பிரிவே அதற்குக் காரணம். அவனின் அந்தப் பிரிவை நீண்ட பிரிவாகக் கருதி அவள், பிரிவாற்றாமல் வருந்தி, தழைகளையும், கண்ணிகளையும் ஏந்திக் கொண்டு விரைந்து நடந்து கொண்டிருந்த போது, தன்முன் வரும் விரிசிகையையும் அவள் கூந்தலில் அணியப்பட்டிருக்கும் மாலைகளையும் கண்டு, அம்மாலைகள் உதயணனால் தொடுத்துச் சூட்டப்பட்டன என அறிந்து சினந்து கண்களினின்றும் வெய்ய நீர்த்துளிகளைச் சிந்தி, கையிலிருந்த கண்ணிகளையும் தழைகளையும் எறிந்துவிட்டு, 'கிடைத்த தாமரைப் பூவிலுள்ள தேனை உண்பதற்குச் செல்லும் வண்டைப் போல்வார் ஆடவர்' என்பதை இன்று கண்கூடாகக் கண்டேன்' என்று உடன் வரும் சாங்கியத் தாயையும் காஞ்சனையையும் நோக்கி, 'என் தந்தையின் அணிநகரத்திற்கு என்னை அனுப்பி விடுங்கள்' என்று சொல்லித் தன்னுடைய கோலங்களைச் சிதைத்துக் கொண்டே அச்சோலையின் ஒரு பக்கத்தே சென்றாள். அதை,

*'கண்ணார் கனங்குழை கதுமெனக் கண்ட*
*மண்ணார் மார்வன் மாதரைச் சூட்டிய*
*காமர்ப் பிணையற் கதுப்பணி கனற்றத்*
*தாமரை யன்னதன் தகைமுக மழுங்கா*
*ஓடரி சிதறிய ஒள்ளரி மழைக்கண்*
*ஊடெரி யுமிழு மொளியே போலச்*
*சிவப்புள் ளுறுத்த வேட்கை நாணி'*[69]

என்னும் பகுதி தெளிவுபடுத்தியுள்ளது. அவளின் ஊடலைத் தணிக்க அவன்,

*'நறவிளை தேறல் உறுபிணி போலப்*
*பிறிதின் தீராப் பெற்றி நோக்கிக்*
.....
*முடியணி திருத்தியு முலை முதல் வருடியும்*

*அடிமிசைக் கிண்கிணி அடைதுகள் அகற்றியும்*
*கதுப்பணி புனைந்துங் கதிர்வளை யேற்றியும்*
*மதுக்களி கொண்ட மதரரி நெடுங்கண்*
*கடைத்துளி துடைத்துங் கடிப்புப் பெயர்த் தணிந்தும்*
*புதுத்தளிர் கொடுத்தும் பூம்புற நீவியும்*
*செயிரிடை இட்டிது சிறக்குவ தாயின்*
*உயிரிடை யிட்ட உறுகண் தருமென'*[70]

என்று பணி செய்து மகிழ்வித்தான் என்பதாகும். ஊடலை நீக்க, அவளின் உச்சி முதல் பாதம் வரை கவனித்து, அணிகலன்களைச் சரிசெய்து இன்மொழிகளைக் கூறி, அவளோடு கூடி மகிழ்ந்தான் எனத் தெளிவாகிறது.

ஆகவே, வாசவதத்தையின் ஊடலுக்கு, விரிசிகையின் கூந்தலில் அணியப்பெற்றுள்ள பூக்கண்ணியே காரணம். அதுமாதிரிப் பூக்கண்ணி உதயணனால் மட்டுமேதான் தொடுக்க முடியும் என்று நன்கு அவள் தெரிந்துள்ளமை அறிய கிடக்கின்றது.

அடுத்தபடியாக, உதயணனிடம் பதுமாபதி, பிரிந்திருந்த வாசவதத்தை மீண்டும் வந்துள்ளமையால் தாங்கள் அவளிடம் செல்லுங்கள் அது தான் முறையாகும் என்று வேண்டிக் கொள்கிறாள். அதனால் அவன் வாசவதத்தையின் மாளிகைக்குச் சென்று இருந்தபோது அந்த வாசவதத்தை பெரிதும் வெகுண்டு, 'வேந்தே! நம்பாற் கன்றிய காமத்தொடர்பு இனிவேண்டா! பெருமான் விரும்பியவாறே யாண்டேனும் செல்க!' என்று ஊடினாள். அதை,

*'என்றவள் சொல்ல நன்றென்*
*றெழின்முடி மன்னன் போந்து*
*சென்றவன் மனைபு குந்து*
*செல்வனு மிகுந்த போழ்தின்*
*வென்றிவேற் கண்ணி னாளும்*
*வெகுண்டுரை செப்பு கின்றாள்*

*கன்றிய காமம் வேண்டா*
*காவல போக வென்றாள்' (பா. 201)*

என்னும் பாடல் குறிப்பிட்டுள்ளது. அதனால் அவன் அவளை நோக்கி,

*'பாடக மிரங்கும் பாதப் பதுமையி னோடு மன்னன்*
*கூடிய கூட்டந் தன்போற் குணந்தனை நாடி யென்ன*
*ஊடிய தேவி தன்னை யுணர்வினு மொளியி னாலும்*
*நாடினின் றனக்கன் னாடா ளந்திணை யல்ல*
*ளென்றான்' (பா. 202)*

என்று கூறுகிறான். 'நங்காய்! பாடகம் கிடந்து திகழும் அடிகளையுடைய அந்தப் பதுமாபதியோடு யான் கூடிய கூட்டத்திற்குக் காரணம் அம்மடந்தைபால் நின்னுடைய குணம் போன்ற நற்குணமிருக்கக் கண்டமையாலே தான்; இதற்கு நீ வெகுளாதேகொள்! என்று கூறவும், அது கேட்டுப் பின்னரும் ஊடுகின்ற அந்த வாசவதத்தையை நோக்கி, நங்காய்! நற்குணத்தாலே அவள் நின்னை ஒப்பாளாயினும், உணர்வுடைமையினும் ஒளியுடைமையினும் ஆராய்ந்து காணுமிடத்து அந்தப் பதுமாபதி ஆக்கமான ஒப்புமையுடையள் ஆகாள்! என்று எடுத்துரைத்து ஊடலைப் போக்கினான். வாசவதத்தையும் ஊடல் நீங்கி, உதயணன் மீது அன்பு செலுத்தினாள். அதனால்,

*'நங்கைதன் மணங்க லங்கா நலம்புகழ்ந் தூடனீக்கி*
*வெங்களி யானை மற்றப் பிடியொடு மகிழ்வ*
*தேபோற்*
*பொங்கிள முலையில் வாசப் பூசுசாந் தழியப் புல்லிச்*
*சிங்கவே றனைய காளை செல்வியைச் சேர்ந்தா*
*னன்றே' (பா.203)*

என்று, அவளோடு வெவ்விய களிப்பையுடைய களிற்றியானை தன் காதற்பிடி யானையோடு கூடி மகிழ்வதே போன்று பூரித்த அவ்வாசவதத்தையின் மார்பில் பூசப்பட்ட நறுமணச் சாந்தம்

அழியும்படி உறத் தழுவி அச்செல்வியைக்கூட மகிழ்ந்தான் எனத் தெளிவாகிறது.

பதுமாபதி ஊடல்

ஒருமுறை உதயணன், பதுமாபதியின் பள்ளியறையில் இருந்தபொழுது, பள்ளியறையில் உட்புறச் சுவரில் வரைந்துள்ள ஓவிய அழகைக் கண்டு வியந்தபடி இருந்தான். இதைக் கவனித்த பதுமாபதி, தன்னைக் கண்டு தன் அழகை இரசித்து வியக்காது ஓவியத்தைப் பார்த்து வியக்கிறானே! என்று சினந்து ஊடல் கொள்கிறாள் என்பதை,

*'கைவளர் மாதர் கனன்றுகனன் றெழுதரும்*
*காம வேகந் தான்மிகப் பெருகப்*
*புலவி நெஞ்சமொடு கலவியுட் கலங்கிப்*
*புல்லுகை நெகிழப் புணர்வுநனி வேண்டாள்*
*மல்லிகைக் கோதை மறித்தனள் இருந்து'*[71]

என்ற பாடல் கூறுகிறது. அதோடு, அவனோடு கூட கண் கலக்க மெய்தி அவனைத் தழுவுதலில் கைநெகிழ்ந்து புணர்ச்சியினை வேண்டாளாய் மல்லிகை மலர்மாலை சூடிய அந்நங்கை மற்றொரு புறத்தே தன்முகத்தைத் திருப்பிக்கொண்டு துன்புற்றாள். மேலும்,

*'சூட்டுமுகந் திருத்தி வேட்டுநறு நீரின்*
*மயிரு மிறகுஞ் செயிரறக் கழீஇக்*
*கோனெய் பூசித் தூய்மையு ணிறீஇப்*
*பாலும் சோறும் வாலிதி னூட்டினும்*
*குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்'*[72]

என்றும் கூறி வருந்தினாள். அதாவது, கோழியானது தன்னை வளர்ப்போர் பெரிதும் விரும்பி அதன் தலையிலுள்ள சூட்டினை அழகுறத்திருத்தி நன்னீரில் அதன் மயிரையும் இறகையும் அழுக்கு அகலக் கழுவித் தூரியக் கோலால் நறு நெய்யைத் தடவித்தூய இடத்தில் வைத்து நாள்தோறும் பாலும் சோறும் தூயனவாக ஊட்டி வளர்த்தாலும் தனக்கு இயல்பான குப்பை

சீக்கும் தொழிலை விடாது. அந்தக் கோழியை ஒப்பாகும் மாந்தருள் சிலர் உளர் என்று கண்டுணர்ந்தேன் என்று அவன் கேட்கும்படி கூறி ஊடல் கொண்டாள் என்பதாகும்.

உதயணன் அவளின் ஊடலைப் பொறாதவனாய், அதனைத் தீர்க்க எண்ணி,

*'பொன்புனை பாவை புறக்குடை நீவிச்*
*செங்கையிற் றிருத்திப் பைந்தோ டணிந்து*
*கலம்பல திருத்தி நலம்பா ராட்டிச்*
*சாந்த மெழுகிச் சாயனெகிழ் பறிந்து*
*பூம்புறங் கவவப் புனைதா ரோதி*
*பூண்ட பூணொடு பொறையொன் றாற்றேன்*
*தீண்டன்மின் பெருமவெனத் தீரிய வுரைத்து'*
*......*
*புல்லியும் தளைத்தும் புணர்ந்தும் பொருந்தியும்*
*அல்குலு மாகமு மாற்றநலம் புகழ்ந்தும்*
*அமர ராக்கிய வமிழ்தெனக் கிளையோள்'*[73]

என்றான். அதாவது, நங்காய்! சிறியோர் செய்த பிழையினை மிகவும் சான்றோர் பொறாமல் விடார். இம்முதுமொழியைக் கூறி அழகிய மலை போன்ற மார்பினையுடைய அம்மன்னன் பொன்னாலியன்ற பாவை போல்வளாகிய அப் பதுமாபதியின் முதுகைத் தடவி அவ்ளது பசிய தோட்டினைத் தன் சிவந்த கைகளாலே திருத்தி நன்கு அணிந்து விட்டுப் பிற அணிகலன்களையும் திருத்தியிட்டு அவள் அழகினைப் பெரிதும் பாராட்டிச் சந்தனம் பூசி மென்மையுடைய அவள் நெஞ்சம் நெகிழ்தலை உணர்ந்து அவளது முதுகினை அணைத்து ஊடல் தீர்த்து மகிழ்ந்தான் என்பதாகும். எனவே, பதுமாபதியின் ஊடல் நீக்கி, உதயணன் இன்புற்று மகிழ்ந்தான் என்று அறிய முடிகின்றது.

ஆகவே, உதயணன் வாழ்வில் அகப்பொருள் கூறுகளாகக் காட்சி, ஐயம், ஐயம் நீங்கல், கண்ணிசூடல், பூப்பெறல், புணர்ச்சி, பரத்தை ஒழுக்கம், வரைவும் மகிழ்வும் ஆகியவை காணக்கிடக்கின்றன என்பது கருதத்தக்கது.

## புறம்

புறம் என்பது பொதுவாக மனிதனின் புறச் (வீட்டிற்கு வெளியில்) செயல்களைக் குறிக்கும். குறிப்பாகப் போர் நிகழ்வுகளைச் சுட்டும். உதயணனின் புறவாழ்வாக அவனின் போர்வெற்றிச் சிறப்பை உதயணகுமார காவியம் எடுத்துரைக்கிறது.

உதயணனின் போரியல் முறை வீரர்கள் நிலை, ஒற்றாராய்தல், மாயயானையிடம் போர், கொள்ளையர்களிடம் போர், ஊரைக் கொளுத்துதல் என்று அமைந்திருந்தது.

### வீரர்கள் நிலை

உதயணனின் வீரர்கள், உடல் வலிமையும், வீரச்செறிவும் மிக்குற்றிருந்தனர். அத்தகையோரிடத்தில் பிரச்சோதனனின் மறவர் அம்புகளையும், விற்களையும் கையிலேந்தி எதிர்ப்போரைப் பொறாதவர்களாகித் தம் அரசனுடைய வெற்றியைப் பாராட்டிக்கொண்டு, 'எம் தலைவனுக்குப் பிழை செய்தோர் விண்ணுலகத்தை அடைவதன்றி, மண்ணுலகில் இருத்தற்கு உரியரல்லர்' என்று சொல்லிக் கொண்டே பிடியின் பின் செல்லும் தன்மையுடையராய்க் காணப்படுவர். அதாவது,

*'வெஞ்செலற் பகழியும் வில்லுந் தழீஇத்*
*தஞ்சினம் பெருகத் தாக்குநர்ப் பெறாஅர்*
*பொங்குபுகழ் வேந்தன் வென்றி யேத்தி*
*விண்ணக மேறி னல்லது விரிநீர்*
*மண்ணக வரைப்பினெம் மண்ணலைப் பிழைத்தோர்க்*
*கின்னுயிர்க் கேம மாகுத லரிதெனப்*
*பின்னிலை முனியார் பிடிவழிப் படரக்'*[74]

எனப்படும். அத்தகு பகை மறவர்களைக் கண்ட உதயணனின் வீரர்கள் போர் செய்வதற்கு வருபவர் யாரேனுமுளரோ? என்று இரையை விரும்பிக் கடலில் உலாவித் திரியும் சுறாக்களைப் போன்று, அங்கங்கே தேடித்திரிந்து சுழன்று கொண்டிருக்கும் திட்டிவிடம் என்னும் பாம்பைப் போலவே, நெருப்பை உமிழும் கண்களை உடையவர்களாகி, எதிர்ப்போரை வெட்டி வீழ்த்து

பவர்களாய்ப் பிடித்த வாளர், மடித்த வாயராய் நடுங்குவித்துத் திரியும் தன்மை யுடையவராவர். அதை,

*'கரைவேட் டுலாஅங் கருங்கட லழுவத்*
*திரைவேட் டுலாஅ மினச்சுற வினத்தின்*
*வத்தவ நாட்டு வித்தக வீரரும்*
*மலைக்கு மாந்தரைத் தலைக்கொண் டோடி*
*ஐந்தலை நாகத் தழலுறு கண்ணினர்*
*பைந்தலை துமித்துச் செங்குடர் சிதறிப்*
*பிடித்த வாளர் மடித்த வாயர்*
*திருவமர் மூதூர்த்தெருவுங் கோணமும்*
*ஒருவழி யொழியா துயிர்நடுக் குறிஇத்*
*திரிதர்வர் மாதோ திருநக ரகத்தென்'*[75]

என்னும் பாடல்பகுதி எடுத்தியம்புகிறது. ஆகவே, உதயணன் வீரர்கள் தம் போன்றே மோதக் கூடிய வீரர்களோடு போரிட்டு வெல்லும் தன்மையராய் விளங்குகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

ஒற்றாராய்தல்

ஒற்றாராய்தல் என்பது, பகைமன்னரின் நிலை, அவனின் மறவர் நிலை, நாட்டு நுழைவாயில், வெளியேசெல்லும் வழிகள், நாட்டுப்பொருள்களின் நிலை முதலியவற்றைக் கண்டு வெல்வதற்குரிய வழிமுறைகளை அறிந்து வருதல் ஆகும். அதை,

*'பற்றார் தம்முனைப் படுமணி ஆயத்து,*
*ஒற்றுஆ ராய்ந்த வகைஉரைத் தன்று'*[76]

என்கிறது புறப்பொருள் வெண்பாமாலை. இதில் பகைவர் அறியாதவாறு ஒற்றாராய்ந்து வந்து கூறுவது ஒற்றாராய்தல் எனக் கூறப்பட்டுள்ளது.

அத்தகு மரபுக்கேற்பவே, உதயணன், பாஞ்சாலராசனை வெல்லுதற்குரிய வழிமுறைகளை ஒற்றாராய்தல் நலம் என்று கருதி ஒற்றர்களை அவ்வரசனிடத்துள்ள நிலைகளை

ஒற்றாராய்ந்து வரும்படி அனுப்பினான். ஒற்றர்களும் ஆராய்ந்து வந்து கூறினர். ஒற்றர்கள் நால்வராக இருப்பர். அவர்களுள் முதல் மூவர் கூறும் செய்திகளை நாலாமவர் கூறும் செய்திகளோடு ஒப்பிட்டுத் தெளிவான் உதயணன். அதாவது,

*'அறிந்தவொற் றாளர் செறிந்தன ருரைப்ப*
*ஒற்று மாக்களை யொற்றறி னாயா*
*முற்றனக் குரைத்த மூவர் வாயவும்*
*ஒத்தது நோக்கி மெய்த்தகத் தேறி'*[77]

என்பதாகும். இதனால் பகைமன்னரை வீழ்த்த, ஒற்றாராய்ந்து போர்புரியும் நெறி இன்றியமையாதது என்பது விளங்கும்.

மாய யானையுடன் போர்

ஒருமுறை உதயணன் வேட்டையாடக் காட்டிற்குச் சென்று யாழ்வாசித்துக் கொண்டு திரிந்தான். அப்போது அவனின் யாழிசைக்குத் தெய்வயானை ஒன்று மயங்கி அவன் பின்னே சென்றது. அதனை அவன் பரிசாக எண்ணினான். அந்த யானை அவனிடம் மிகுந்த அன்பைச் செலுத்தி உதவி புரிந்து வந்தது. அந்நிலையில் அவனின் சில தவறுகளால் அந்த யானை அவனைவிட்டு மறைந்தது. அதனால் மிக வருந்தி யானையைத் தேடி, உதயணன் யாழ் இசைத்தபடியே திரியலானான்.

அந்தச்சமயத்தில் பக்கத்து நாட்டரசனான பிரச்சோதனன் என்பவன் தனக்குத் திரை செலுத்தாத மன்னன் உதயணன் என்பதை அறிந்தான். அவனை வெல்லுதல் அரிது என்பதையும் அறிந்து சூழ்ச்சியால் சிறைபிடிக்க எண்ணுகிறான். அதன் விளைவு அவன் தொலைத்த யானை வடிவில் யந்திரப் பொறி ஒன்று அமைத்து, அதனுள் நிறைந்த போர்வீரர்களை ஆயுதங்களுடன் நிறைத்து, காட்டில் திரியவிட்டான். அந்த யந்திரப் பொறி யானையைக் கண்ட உதயணன் மிகவும் மகிழ்ந்து தன் யானை மீண்டும் வந்தது என்று யாழிசைத்தபடியே அதனருகே சென்றான். அதுவும் யாழிசையைக் கேட்டவண்ணம் நெருங்கிவந்தது. உதயணன் மகிழ்ந்து யாழிசைத்தபடியே நெருங்கினான். அவ்வமயம்

திடீரென்று அந்த யானை வடிவிலான யந்திரப்பொறி திறந்தது. அதிலிருந்து நிறைய ஆயுதங்களுடனான வீரர்கள் தோன்றி அவனிடம் போரிட்டனர். கொடிய சொற்களைக் கூறியபடியே போர் செய்தனர். அப்பொழுது உதயணன் புன்முறுவலித்துக் கம்பீரமாக நின்றான். அப்போது ஐநூறு போர் வீரர்களோடு பின்னே நின்ற வயந்தகன் அத்தொண்ணூற்றறுவரையும் கொன்றான். அந்தநேரம் மறைந்து சேனையுடன் பின்னே ஒருபாலிருந்த சாலங்காயன் மிகுந்த கோபங் கொண்டு பல வீரர்களோடு வந்து எதிர்த்துப் போர் செய்து தோல்வியுற்றான் என்பதை,

*'கரந்திருந்த களிற்றினுட் சேனையும்*
*பரந்து முன்வந்த பாங்கில் வளைத்த பின்*
*விரிந்து வத்தவன் வெகுண்டு நூறினான்*
*முரிந்து சேனை முனையின் மடிந்ததே' (பா.51)*

என்னும் பாடல் விளம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆகவே உதயணனைச் சிறைபிடிக்க, பிரச்சோதனன் சூழ்ச்சியால் மாயயானை வழியை மேற்கொண்டபொழுது போரிட்டான் அவன் எனப் புலனாகின்றது.

## கொள்ளையர்களோடு போர்

பிரச்சோதன மன்னன் மகள் வாசவதத்தையை உதயணன் கைப்பற்றி, களிற்றில் ஏற்றித் தன்னாடு நோக்கி வந்து கொண்டிருந்தான். அப்பொழுது பாலை நிலத்தைக் கடக்கின்ற போது, வேடர்வகையினராகிய சவரரும் புளிஞரும் எதிரே தோன்றித் தாக்க முயன்றனர். அவர்கள் அம்புகளை மழைபோல மிகவும் பொழிய, அதுகண்ட உதயணனும் ஆக்கமுடைய தன்வில்லை வளைத்து அம்புகளை ஏவி, அவ்வேடர் அம்புகளை விலக்கினான். மேலும், நல்லதொரு பிறைவாய் அம்பினாலே வெவ்விய ஆற்றலுடைய, அவ்வேடர்களுடைய விற்களும் நாண்களும் அம்புகளும் நிலத்திலே அற்று வீழும்படி எய்தான்.

அதை,

*'வந்தவ ரம்பு மாரி*
*வள்ளன்மேற் றூவத் தானும்*
*தந்தனு மேவிச் சாராத்*
*தரத்தினால் விலக்கிப் பின்னும்*
*வெந்திறல் வேடர் வின்னாண்*
*வெந்நுனைப் பகழி வீழ*
*நந்திய சிலைவ ளைத்து*
*நன்பிறை யம்பி னெய்தான்' (பா.118)*

என்னும் இந்தப் பாடல் வழி அறியலாம். இதில் சில மறவர்கள் இறந்தனர். சில மறவர்கள் அங்கிருந்த இலவம் பொதும்பரைச் சூழ்ந்த இடங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். உதயணனின் அம்புகளால் வீழ்ந்த வேடர்களின் இரத்தத்தை உண்ட காக்கைக் கூட்டங்களும், கழுகின் கூட்டங்களும் அங்கங்கே மரங்களின் மீது அமர்ந்திருந்தன என்று உணரமுடிகின்றது.

ஆகவே உதயணன் கொள்ளையர்களைப் போரிட்டுத் தோற்கடித்தான் என்பதும், அதனால் அவர்களில் சிலர் ஆத்திரம் தாங்க முடியாமல் அங்கிருந்த இலவம் பொதும்பர் இடங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டுப் புகை மண்டலத்துள் மறைந்து ஓடி உயிர் பிழைத்தனர் என்பதும் தெளிவாகிறது.

போர்த்திறம்

உதயணனிடம், பகைவர் தம் படையோடு வந்து எதிர்த்து, பெரும்போர் நிகழ்த்தித் தோல்வியுறுவர். அதாவது, உதயணனின் போர்த்திறம், 'வெள்ளத்தால் உப்பணை கரைவது போலப் பகைவர்படை உடைந்து போயிற்று' எனும்படி அமைந்துள்ளது. அதை,

*'சிலைத்தன தூசி; மலைத்தன யானை;*
*ஆர்த்தனர் மறவர்; தூர்த்தனர் பல்கணை!*
*விலங்கின வொள்வாள்; இலங்கின குந்தம்;*
*விட்டன தோமரம்; பட்டன பாய்மா;*
*துணிந்தன தடக்கை; குனிந்தன குஞ்சரம்;*

*அற்றன பைந்தலை; இற்றன பல்கொடி;*
*சோர்ந்தன பல்குடர்; வளர்ந்தன குருதி;*
*குழிந்தது போர்க்களம்; எழுந்தது செந்துகள்;*
*அழிந்தன பூமி; விழுந்தனர் மேலோர்'*[78]

என்னும் பாடல் பகுதி சான்றளிக்கிறது.

மேலும், உதயணன், பகை மன்னன் ஆருணி அரசனுடன் போர் செய்தான் என்பதை,

*'விரிந்த வெண்குடை வீழவும்*
*வேந்தர் விண்ணுற வேறவும்*
*பரிந்து பேய்க்கண மாடவும்*
*பலவா நரிபறைந் துண்ணவும்*
*முரிந்த முண்டங்க ளாடவும்*
*முரிந்த மாக்களி றுருளவும்*
*வரிந்த வெண்சிலை மன்னவன்*
*வத்த வன்கண் சிவந்தவே' (பா. 181)*

என்னும் பாடல் பதிவு செய்கிறது. இதில், போர்க்களத்திலே ஆருணியரசன் படைநடுவே விரிந்த வெள்ளைக் குடைகள் விழும்படியும் மன்னர்கள் துறக்கம் புகும்படியும், பேய்கள் உணவு கிடைத்தது என்று மகிழ்ந்து ஆடவும், நரிகளின் ஊளையும் தலையழிந்த முண்டங்கள் ஆடவும், களிறுகள் உருண்டு உயிர் நீப்பவும் ஆகியவை நடந்தன என்று விளக்கப்பட்டுள்ளது.

ஆகவே, உதயணன் தன் போர்த்திறத்தால் பகை வீரர்களையும், படைகளையும் அழித்தான் என அறியத்தக்கது.

ஊரைக் கொளுத்துதல்

அரசனுடன் பகைமறவர் போரிட்டுத் தோல்வியுற்ற நிலையில், தோல்வியைப் பொறுக்காது, வெற்றியுற்ற அரசனுக்குத் துன்பம் தர எண்ணி, அவன் நாட்டின் ஊர்களில் உள்ள மரங்களைப் படையோடு சென்று வெட்டி வீழ்த்தியும், நெற்கதிர்களைக் கொளுத்தியும் பிற தீங்குகளைச் செய்தும் பெருந்துன்பத்தை விளைவிப்பர். இதையே,

*'விரைபரி கடவி வில்லுடை மறவர்*
*குரைஅழல் நடப்பக் குறும்புஎறிந் தன்று'*[79]

என்கிறது நூற்பா. இதில் மறவர், பகைவரின் மதிலைத் தீயிட்டு அழித்து ஊரில் உள்ளாரைக் கொல்லுவது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. இதை 'ஊர்கொலை'[80] என்றும் குறிப்பிடுவர்.

இத்தகைய நிகழ்வு உதயணனுக்கு ஒருமுறை நிகழ்ந்தது. உதயணன், தருசக அரசனுக்குத் துணை வலிமை தந்து வெற்றி தந்தான். தோற்றோடிய பகைமன்னனும் அவனுடைய வீரர்களும் சேர்ந்து தம்முள்ளே கூடி ஆராய்ந்து, தங்களுள் யாரிடத்தும் பிழைப்பில்லை என்று தெளிந்து, ஒன்று சேர்ந்து உதயணனுக்குப் பெருந்துன்பம் விளைவிக்க எண்ணி, சூளுறவு செய்து, பெரும்படைகளோடு வந்து மகத நாட்டின் ஊர்களிலுள்ள மரங்களை வெட்டி, வீழ்த்தியும், விளைந்த நெற்கதிர்களைக் கொளுத்தியும் பிற தீங்குகளைச் செய்தும் பெருந்துன்பத்தை விளைவித்தனர். அதை,

*'நன்னாடு நடுங்க நண்ணித் துன்னிய*
*ஈர நெஞ்சத் தார்வ லாளர்*
*பாரந் தாங்கும் பழமை போல*
*இலைக்கொடிச் செல்வமொடு தலைப்பரந் தோங்கிய*
*கணைக்கா லிகணையும் கமுகும் வாழையும்*
*சினைப்பெரு மாவும் பணைக்காற் பலாவும்*
*கொழுமுதற் றெங்கொடு முழுமுத றொலைச்சிக்*
*கழனி விளைநெற் கனையெரி கொளீஇப்*
*பழன நன்னாடு படியழித் துராஅய்ச்*
*செயிர்ப்பிற் சிறந்தவர் பெயர்ச்சி நோக்கிப்'*[81]

என்றிந்தச் செய்யுள் பகுதி கூறியுள்ளது. மேலும், இதில், நாட்டின்கண் வாழும் மாந்தர் அஞ்சி நடுங்கும்படி, செல்வமிக்க இகணை மரங்கள், கமுகு, வாழை, மா, பலா, தென்னை ஆகியவற்றை வெட்டி வீழ்த்தியும், கழனிகளில் விளைந்து கிடக்கும் நெற்கதிர்களில் மிக்க தீயினைக் கொளுத்தியும் வந்தனர் என விளங்குகிறது.

ஆகவே, தோற்றோடும் வீரர்கள் மீண்டும் வந்து அரசன் அறியா வண்ணம் ஊரிலுள்ள மரங்களை வெட்டியும், வயலில் விளைந்துள்ள நெற்கதிர்களைத் தீயிட்டுக் கொளுத்துவர் என்பதும் குறிப்பிடத்தக்கன.

ஆராயுமிடத்து உதயணனின் புறப்பொருள் கூறுகளாக, சிறந்த வீரர்களைக் கொண்டு பகை மன்னர்களோடு போரிடல், சவரர் புளிஞர் ஆகியோரோடு போரிடல், தோல்வியுற்ற வீரர்கள் சிலர் மீண்டும் வந்து மரங்களையும் நெற்கதிர்களையும் வெட்டுதல், தீயிட்டுக் கொளுத்துதல், ஊரைக் கொளுத்துதல் ஆகியவை அமைந்துள்ளன என விளங்குகின்றன.

### திருமுகவுத்தி

திருமுகம் – நிருபம்; நிருபம் – கடிதம்; ஓலை எனப்பொருள்படுகிறது. ஆதலால் கடிதம் எழுதிக் கருத்துப்பரிமாற்றம் செய்யும் முறை திருமுகம் உத்திமுறை ஆகிறது. இது உதயணன், யூகி, பிரச்சோதனன், கோசலநாட்டரசன் ஆகியோரிடை நிகழ்ந்துள்ளது.

### உதயணனின் திருமுகம்: சிறைப்பட்டமை

உதயணன், அவந்தியரசன் பிரச்சோதனனிடம் சிறைப்பட்டமையைத் தெரிவிக்கும்பொருட்டு, தன் நண்பன் யூகிக்கு ஒரு திருமுகம் ஒன்றை அனுப்புகிறான். அதாவது,

*'சிலந்தி நூலிற் செறித்தநற் சிங்கம்போல்*
*அலங்கல் வேலினா னன்புடை யூகிக்கே*
*இலங்க வோலை யெழுதி வயந்தகன்*
*நலங்கொள் கையி னவின்று கொடுத்தனன்'*

*(பா.60)*

என்பதாகும். இதில் சிலந்தியினது நூலாலே கட்டுண்டு நிற்கும் ஒரு நல்ல அரிமானேறு போன்ற மாலையணிந்த வேலையுடைய அவ்வுதயண மன்னன், தன்பாற் பேரன்புடைய யூகிக்கு மட்டுமே விளங்கும்படி குறிப்பு மொழிகளாலே ஒரு திருமந்திரவோலை வரைந்து அதனை யூகியினிடம் கொடுக்கும் படி குறிப்பால்

கூறி வயந்தகனுடைய கையிலே கொடுத்து விட்டனன் என்று விளக்கப்பட்டுள்ளது. ஆகவே உதயணன், தன் நண்பர் யூகிக்குத் தான் பிரச்சோதன மன்னனிடம் சிறைப்பட்டமையைத் திருமுகம் கொண்டு தெரிவித்தான் என்று புரிகிறது.

**காதல்**

உதயணன், வாசவதத்தை மீது காதல் கொண்டு ஒழுகுவதற்காக, மேல்நிகழ்த்த வேண்டியவற்றைச் செய்வித்தற்கு எண்ணி, யூகியின் அடையாளங்களைச் சுட்டி, தான் முன்னமே எழுதிவைத்திருந்த ஓலையை வயந்தகன் காணும்படி வீழ்த்தினான். அதை,

*'பவனத் தரச னுவனித் தெறித்த*
*குந்தக் கடைமணி யுறுதலின் முரித்த*
*வலப்பா லெயிற்றின் குற்றமு மலைத்துடன்*
*வலிந்துமேற் சென்ற கலிங்கத் தரசன்*
*குஞ்சர மருப்பிற் குறியிடப் பட்டுச்*
*செஞ்சாந்து மெழுகிய சேடுபடு செல்வத்து*
*மார்பினது வனப்புந் தோளினது திரட்சியும்*
*நிறத்தது நீர்மையு நெடுமைய தளவும்*
*சிறைத்துயர் நீக்கற்குச் செய்த வேடமும்*
*குறிக்கொளற் கமைந்தவை பிறவும் திறப்பட*
*வாஃகிய லமைச்சன் யூகிக் குள்ளவை*
*சாங்கிய முதுமகள் தான்தெரிந் துணர*
*அறிவின் முன்னே செறியச் செய்த*
*பொறியுடை யோலை பொருக்கென வீழ்த்து'*[83]

என்னும் செய்யுள்பகுதி குறிப்பிட்டுள்ளது. இதில், உதயணன் வயந்தகனுக்குத் தன் கண்ணால் பிறரறியாமல் குறிப்பித்தான். வயந்தகனும் அவ்வாறே சாங்கியத் தாயிடம் கொடுத்தான். அவளும் அதனைப் பெற்றுக் கொண்டாள். அத்திருமுகம் யூகிக்கு உரியதாகும். அதில் 'சாங்கியத்தாய் நமக்கு உதவும் பொருட்டே அவளைக் கைவிடுதற்கு அரியவள்' என்னும் கருத்தைத் தெரிவித்தல் நிலையில் எழுதப்பட்டுள்ளது.

அத்தகு, ஓலையைச் சாங்கியத் தாய் எடுத்துக் கொண்டு யூகி என்னும் அந்த அருமதியமைச்சன் இருக்குமிடத்தை ஆராய்ந்து அறிந்து அவனிடம் சென்று கொடுக்கின்றாள். அதாவது,

*'யூகி யுள்வழி யொற்றுந ளெய்தி*
*ஆகுபொரு ளோலையி ணிருவரு மறிவுற்றுக்*
*கண்கூ டெய்துங் காலங் கூறி'*[84]

என்பதாகும். இதில் ஒருவரை ஒருவர் நன்கு தெரிந்து கொண்டு, தாம் ஒருவரை ஒருவர் மீண்டும் காண்டற்குரிய காலத்தையும் குறிப்பிட்டுக் கூறிக் கொண்டனர் என விவரிக்கப்பட்டுள்ளது. ஆகவே, உதயணனின் திருமுகம் வழி, யூகியும், சாங்கியத்தாயும் உதயணன், வாசவதத்தை ஆகியோரின் காதலுக்குச் செய்ய வேண்டிய செயல்களை அறிந்து கொண்டனர் எனத் தெளிவாகிறது.

நாடுபெறல்

உதயணன், பிரச்சோதனனுக்கு ஓலை ஒன்றை விடுக்கிறான். அவ்வோலையில், பிரச்சோதன மன்னனுக்கு, 'எம்மால் முன்பு ஆளப்பட்டுப் பின்னர் எம்முடைய அழிவுக்காலத்தே யாம் எம் நாட்டின் எல்லையைக் கடந்து விரைந்து காட்டகத்தே சென்றபொழுது தாங்கள் நும்முடைய ஆணையை எம்முடைய நாட்டினும் செலுத்தி எம்மக்களை நலிந்து கைப்பற்றிக் கொண்ட காடுகள் பொருந்திய முல்லை நிலமும் கனவிய மலைகளையுடைய குறிஞ்சி நிலவட்டமும் நீர்பொருந்திய மருத நிலமும் மீண்டும் எம் ஆட்சியின்கீழ் வந்தாலன்றி, அப்பகுதிகளிலே நுங்கள் மக்கள் புகுதலை எங்கோல் பொறுக்கமாட்டாது' என்று குறிப்பிட்டுள்ளமையை,

*'வளங்கெழு திருநகர் வல்லே செல்கென*
*நாடுதலை மணந்து நாமுன் னாண்ட*
*காடுகெழு குறும்புங் கனமலை வட்டமும்*
*எல்லை யிறந்து வல்லை நீங்கி*
*அழிந்த காலை யாணை யோட்டி*

*நெருங்கிக் கொண்ட நீர்கெழு நிலனும்*
*இவையினி யெங்கோ லோட்டி னல்லதை*
*தமர் புகத் தரிய வென்றுதா னெழுதிய*
*வழிபாட் டோலையொடு வயபரை விடுத்து*'[85]

என்னும் பாடல் பகுதி எடுத்துக் காட்டியுள்ளது. ஓலையொடு மறவர்களையும் அனுப்பினான். ஆகவே, உதயணன், பிரச்சோதனனிடம் இழந்த நாட்டைப் பெறும்பொருட்டு ஓலை விடுத்தான் என அறியமுடிகின்றது.

நட்பு

பிரச்சோதனன், உதயணனிடம் நட்புப் பாராட்டி, நட்பை வேண்டுகிறான். அதவாது, பதுமாபதி உதயணனுக்குத் திருவோலை அளிக்கிறாள். அவ்வோலை அஞ்சுதற்குரிய கருட உருவினை உச்சியிலே சுமந்தும், சக்கர வட்டத்தோடு பற்பல சங்கு வடிவங்களும் பொறிக்கப்பட்டும், தொழில் திறம் அமைந்ததும், சுருட்டி மணப்பொருள் கூட்டிய அரக்கினை உருக்கி ஏடு எழுதும் தொழிலாளர் இடும் இடம் அறிந்து ஒற்றிய இலச்சினையோடு சுருளமைந்ததும் என வடிவங் கொண்டுள்ளதை,

*'உட்குறு முவண முச்சியிற் சுமந்த*
*சக்கர வட்டமொடு சங்குபல பொறித்த*
*தோட்டு வினை வட்டித்துக் கூட்டரக் குருக்கி*
*ஏட்டுவினைக் கணக்க ணீடறிந் தொற்றிய*
*முடக்கமை யோலை....'*[86]

என்னும் பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

இத்தகு ஒலையைத் தனது அழகிய கையின்கண் ஏற்றுக் கொண்டான். ஒலையைப் பிரித்துப் படித்தான். அதில், 'பிரச்சோதனன் என்னும் அரசன் வரைந்து விடுத்த திருவோலை. இதனைப் பல்வேறு புகழ்களும் சேர்ந்த வீரக் கழலணிந்த காலையுடைய உதயண மன்னன் காண்க! வேந்தே! நின்குலமும் என்குலமும் அல்லது இப்பேருலகத்தில்

மிக உயர்ந்த குலம் பிறிதொன்றில்லாமையால் நின்னுடைய குருகுலத்தின் உறவினைக் கொள்ளுதலை யான் பெரிதும் விரும்பி, அக்காலத்தே நம்முள் பகைமை இருந்தமையால் படையோடு சென்று, குருதியால் சிவந்து போர்க்களத்தின் கண் நின்னைச் சிறைப்படுத்தி, நின்படையோடு என் நகரத்திற்குக் கொணர்தலும் எனக்கு அருஞ்செயலாயிருந்தமையால், உன்னுடைய சோர்வினை ஒற்றரால் அறிந்து அதனை ஏதுவாகக் கொண்டு மாய யானையினுள்ளே மறவர்களை யுடைய படைக்கலங்களையும் மறைத்து வைத்து, இவ்வஞ்சனையாலே நின்னைப் பற்றி என்னிடம் கொணர்க! என்று என் மறவர்களை நின்னிடம் ஏவினேன். அக்காலத்திற்குப் பொருந்தியாக என்னால் கருதப்பட்ட அந்த நிலைமையை நீ இப்பொழுது, நினையாமல் இப்பொழுது நின்னை ஈன்ற தந்தையாகவே என்னைக் கொள்ளுதலைப் பெரிதும் விரும்பினேன்' என்று பகை பாராட்டாது நட்பு பாராட்டியமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதை,

*'பிரச்சோ தனனெனும் பெருமக னோலை*
*உரைச்சேர் கழற்கா லுதயணன் காண்க*
*இருகுல மல்ல திவணகத் தின்மையிற்*
*குருகுலக் கிளைமை கோடல் வேண்டிச்*
*சேனையொடு சென்று செங்களம் படுத்துத்*
*தானையொடு தருத றானெனக் கருமையிற்*
*பொச்சாப் போம்பிப் பொய்க்களிறு புதைஇ*
*இப்படித் தருகென வேவினே னெமர்களை*
*அன்றைக் காலத் தந்நிலை நினையா*
*தின்றைக் காலத் தெற்பயந் தெடுத்த*
*கோமா னெனவே கோடல் வேண்டினேன்'*[87]

என்னும் பகுதி சுட்டுகின்றது. ஆதலால் பிரச்சோதனன், உதயணனின் நட்பை வேண்டுகிறான் எனத் தெரிகிறது.

யவன மொழித் திருமுகம்

யவன மொழியினால் திருமுகம் எழுதுதல் யவன மொழித் திருமுகம் ஆகும். இத்தகு திருமுகம் அலங்காரம் ஆகிறது. அதாவது, வாசவதத்தைக்கு அலங்காரம் செய்வதற்குப் பணிப்பெண்ணாக மானனீகை என்பவள் விளங்குகிறாள். அவள் செய்து விடும் அலங்காரத்தை, வாசவதத்தையிடம் பார்த்து மகிழ்ந்து வந்தான் உதயணன். அவ்வேளையில் ஒரு நாள், அவன் வாசவதத்தையை நோக்கி, 'அவந்திகாய்! கேள்! நின் இயற்கை யழகிற்கேற்ப அலங்காரம் செய்தலை அம்மானனீகை அறியாள்' என்று பழித்துக் கூறி, 'அன்புடையோய்! நின் பேரழகிற்கேற்ப யான் உனக்கு அலங்காரம் செய்யும் வகையைப் பார்! என்று முன்னைய அலங்காரத்தை அழித்துப் புதியதாக அலங்காரம் புனையத் தொடங்கினான். அம்மானனீகை தான் கற்றற்கு அவாவிய யவன மொழியின் எழுத்துகளை நன்கு கற்றிருக்கின்றனள் என்று தன் தோழர் தனக்குக் கூறியதைக் கேட்டிருந்தான். ஆதலின், வாசவதத்தையின் நெற்றியின்மேல் பூந்துகளையும், சந்தனத்தையும் நன்கு பொருந்தக் குழைத்துக் கொண்டு, அந்த யவன எழுத்தாலே எழுதுகின்றான். அதாவது வாசவதத்தைக்கு அலங்காரம் செய்கிறான் என்பதாகும். அதை,

*'.... மேவிய வனப்பொடு*
*காவலற் காட்டக் கண்டன னாகி*
*அழித்தவங் கார மறியா ளிவளெனப்*
*பழித்தியான் புனைநெறி பாரெனப் புனைவோன்*
*பற்றிய யவன பாடையி லெழுத்தவள்*
*கற்றன ளென்றெடுத் துற்றவ ருரைப்ப*
*கேட்டன னாதலிற் கோற்றொடி நுதன்மிசைப்*
*பூந்தா தோடு சாந்துறக் கூட்டி'*[88]

என்னும் செய்யுளடிகள் எடுத்துரைக்கின்றன. அத்தகைய யவனமொழி அலங்காரம் என்னும் திருமுகவோலையில், உதயணன் எழுதியுள்ளதாவது: 'கெடாத சிறந்த

பெரும்புகழையுடைய உதயண மன்னன் வரைந்த ஓலை இது. இதனைப் பூங்கொடி போன்ற நுண்ணிடையையும் குயில் போன்ற இன்மொழியையும் சிவந்த வாயையும் உடைய மானனீகை என்னும் மடந்தை காண்க! பாவாய்! நீ மிக உயர்ந்த மேனிலை மாடத்தின் கண் மயில்கள் கூடி இருந்தாற்போன்று கூடி இருந்த ஆடல் மகளிரொடு சேர்ந்து ஒருங்கே நினக்கு முன்னர்ப் பந்தெறிந்த மகளிர் முறைமையிலே தவறாதபடி நீ ஆடிய அப்பந்து விளையாட்டின்கண் நின்னுடைய திருமுகத்தின்கண் உள்ள செவ்வரி சிதறிய நெடிய கண்ணாகிய வேல் என் நெஞ்சினைக் கிழித்தது என்பதை,

*'ஓடியா விழுச்சீ ருதயண னோலை*
*கொடியேர் மருங்குற் குயின் மொழிச் செவ்வாய்*
*மான னீகை காண்க சேணுயர்*
*மாட மீமிசை மயிலிறை கொண்டென*
*ஆடன் மகளிரொ டமர்ந்தொருங் கீண்டி*
*முந்துபந் தெறிந்தோர் முறைமையிற் பிழையாய்*
*பந்துவிளை யாட்டினுட் பாவைதன் முகத்துச்*
*சிந்தரி நெடுங்கணென் னெஞ்சகங் கிழிப்ப'*[89]

என்று குறிக்கும் பகுதியாகும். இப்பகுதி வழி உதயணனின் நெஞ்சு, மானனீகையின் கண்ணால் கிழிந்தது என்னும் கருத்துப்படுகிறது. மேலும், உதயணனுக்குக் காமத்தீ மிகுந்தது என்பதை,

*'கொந்தழல் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்*
*ஆற்றே னவ்வழ லவிக்குமா மருந்து*
*கோற்றேன் கிளவிதன் குவிமுலை யாகும்*
*பந்தடி தானுறப் பறையடி யுற்றவென்*
*சிந்தையு நிலையுஞ் செப்புதற் கரிதெனச்*
*சேம மில்லாச் சிறுநுண் மருங்குற்*
*காதார மாகி யதனொடு தளரா*
*அருந்தனந் தாங்கி யழியுமென் னெஞ்சிற்*
*பெருந்துயர் தீர்க்கு மருந்து தானே'*[90]

என்னும் பகுதி சுட்டியுள்ளது. ஆதலால் பல சுடராகிய கொத்துகளையுடைய நெருப்புப் போன்று துன்புறுத்தி நின்ற அந்தப் புண்ணோடு நொந்து உயிர் வாழ்தற்கு யான் இனி ஆற்றேன். அதற்கு மருந்தாக இருப்பது, கொம்புத்தேன் போன்று தித்திக்கும் மொழியினையுடைய நின் குவி மார்பகமே ஆகும். நீ பந்தடிக்கின்ற பொழுது அதைக் கண்டு என் மனம் பறையடிக்கலாயிற்று. என் நெஞ்சம் என்னை விட்டு நின்பால் வந்து பாதுகாவல் இல்லாத உன்னுடைய சிறிய நுண்ணிய இடை ஒடியும் என்று இரங்கி, அதற்கு ஆதாரம் ஆக இயைந்து அது தளருங்கால், தான் தளராது, நின்று அதனால் சுமத்தற்கரிய அவற்றைத் தானே தாங்கி அழியும். என் நெஞ்சின் துயரத்தைத் தீர்த்தற்குரிய மருந்து நீயே! பிறிதில்லை என்று உதயணன் இரந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகு, காம நோய் மிக்க உதயணன், மெலிந்து உயிர் போய்விடின் பின்பு, எனக்கு நீ செய்தற்குரிய உதவி ஏதுமில்லை. அன்றியும், யாம் எய்திய இவ்விளமைப் பருவம் போய்விடின் அதனை யாம் மீண்டும் வருவித்துக்கொள்ள அது நமக்குக் கிடைப்பதும் இல்லை. நங்காய்! யாதொன்றாயினும் இல்லென்று இரப்போர்க்கு ஈவது நல்லறமேயாகும். அதாவது,

*'.... தளர்ந்துயிர்*
*சென்றால் செயன்முறை யொன்றுமி லன்றியும்*
*அடுக்கிய விளமை தலைச்செலி னாந்தரக்*
*கிடைப்பதி லிரப்போர்க் களிப்பது நன்றெனʼ*[91]

என்பதாகும்.

அதோடு பாவாய்! யான் நினக்குக் கூற எண்ணிய மொழிகளை எல்லாம் வறுமையின்றி எழுதுதற்கு இவ்வேட்டின்கண் (நெற்றி) இடம் இன்மையால் அவற்றை எழுதாது விடுகின்றேன். மேலும் எனது இக்குறையைத் தீர்க்கும் படி நின்னை இரந்து கேட்கின்றேன். எனக்கு அருள் செய்வாயாக என்று எழுதப்பட்டிருந்ததை,

*'நினைத்த வாசக நிரப்பின் றெழுத*
*இடத்தள வின்மையிற்.... யிக்குறை*
*இரந்தனன் னெருளென விறைமக னெழுதி..'[92]*

என்னும் பாடலடிகளால் உணர முடிகின்றது. ஆகவே என்காதல் நோயைத் தீர்க்க வேண்டும் என யவன மொழி அலங்காரவழி மானனீகையிடம் உதயணன் இரந்து வேண்டுகிறான் எனக் கருதமுடிகிறது.

மானனீகை மறுமொழி விடுத்தல்

வாசவதத்தையின் முகத்தில் செய்துள்ள அலங்காரத்தைக் கண்ட மானனீகை, பெருமாட்டீ! நம் பெருமான் எழுதிய பேரலங்காரத் திருமுகம் மிக அழகுடைத்து' என்று கூறிப் பாராட்டுகிறாள். அதாவது,

*'பெருமக னெழுதிய பேரலங் காரத்*
*திருமுக மழகுடைத் தென'[93]*

என்கிறாள். முகவெழுத்தில் உள்ள மன்னனின் காமநோயை அறிந்த மானனீகை, மறுமொழி மன்னனுக்கு விடுக்க எண்ணி வாசவதத்தையின் முகத்தில் இந்திந்த அலங்காரம் மிக நன்று என்று பாராட்டித் தொட்டுக் கூறுபவள் போல், மறுமொழி எழுதி விடுக்கின்றாள். அது, 'திருமந்திரவோலையை ஓதியுணர்ந்தேன். என்மீது கொண்ட காதலை விட்டொழிக! இது அரச மகளிர்க் கேயன்றி, என்போன்ற பணிப்பெண்களுக்குச் சற்றும் பொருந்தாது ஆதலால், பெருமான் தகுதிக்கு மிகத்தாழ்ந்த என்பால் வைத்த திருவருளை எள்ளி மறந்து விடுதலே நன்று' என்று எழுதி விட்டுத் தேவியை அனுப்புகிறாள் என்பதை,

*'பொருந்திய பல்லுரை யுயர்ந்தோர்க் காகும்*
*சிறியோர்க் கருளிய வுயர்மொழி வாசகம்*
*.....*
*வைத்ததை யிகழ்ந்து மறப்பது பொருளென'[94]*

என்னும் செய்யுளடிகள் எடுத்துரைக்கின்றன. ஆகவே, மானனீகையின் மறுமொழியாக, 'சிறியோரிடத்தில் கொள்ளும்

காதல் மன்னருக்குத் தகுதியன்று' என்றுள்ளமை குறிப்பிடத் தக்கது.

### மன்னன் வற்புறுத்தலைத் தெரிவித்தல்

வாசவதத்தை, உதயண மன்னனிடம் வந்து தாங்கள் செய்துள்ள அலங்காரம் மிகநன்று என்றும், குறிப்பாக இன்னின்ன இடங்களில் மிகமிக நன்று என்றும் மானனீகை பாராட்டியதை எடுத்துரைத்தாள். மன்னனும் மகிழ்வது போல் விளங்கி, அதோடு மட்டுமா என் அரசிக்கு, இன்னும் சிறந்த அலங்காரம் செய்வேன்' எனக் கூறியபடியே அரசியிடம் நெருங்கி, மானனீகையின் மறுமொழியைப் படித்துணர்ந்து, முன்பு நெருப்புச்சுட்ட புண்ணின்மேல் வேல் நுழைந்தாற்போல் பெரிதும் மனம் கலங்கினான். மீண்டும் அலங்காரம் செய்பவனாய் மானனீகாய்! நின் மார்பு இற்றை நாள் கழியும் முன்பே என் மார்பில் பொருந்தாதாயின் என் உயிர் போயிற்று' என்கிறான். இதை,

*'தழலுறு புண்மேல் கருவி பாய்ந்தெனக்*
*கலங்கின னாகி...*
*சென்றது என்னுயிரெனத் தேவிமுகத் தெழுதி'*[95]

என்னும் பாடல் பகுதி சுட்டியுள்ளமையையும் அறிய முடிகிறது.

ஆகவே, என் நோயைத் தீர்க்கவில்லையெனில் நான் உயிர் நீங்குவது உறுதி என்று எழுதி, வாசவதத்தையிடம் இப்பொழுது உன் அலங்காரம் மிகவும் அழகுவாய்ந்தது என்பதைக் காட்டி வா என்று விடுக்கிறான்.

### மானனீகை உடன்படல்

மானனீகை, வாசவதத்தையின் முக அலங்காரம் மிகவும் அழகுடைத்து என்று பாராட்டிக் கொண்டே, உதயணன் மனக்குறையை அறிந்தாள். மனம் இசைந்து 'எம்பெருமான் மனக்குறையை யான் சென்று இன்று தீர்ப்பேன்' என்னும் கருத்துப்பட, இரவுக் குறியின் இடமாக, கூத்தப்பள்ளிக் குச்சரக்

குடிகையுள் ஒரு பகுதியின் அமைந்த மேடையைப் பாம்பு குறிக்கொண்டு உறையும் இடத்தைக் குறிப்பிட்டு எழுதியவாறு மேலும் சில அலங்காரங்களைச் செய்துள்ளேன். மன்னருக்குக் காட்டி மகிழ்வுப்படுத்துங்கள்' என்று அனுப்புகிறாள் தேவியை.

*'கூத்தப் பள்ளிக் குச்சரக் குடிகையுட்*

*............*

*அரவுக் குறியி னியல்பட எழுதி'*[96]

என்னும் பகுதி கூறியுள்ளது.

இதனால், மானனீகையின் மனம் உடன்பட்டதையும், இரவுக் குறியிட்டதையும் அறிந்த உதயணன் மிகவும் மகிழ்ந்தான்.

ஆகவே, திருமுக அலங்கார வோலை வழி அலங்காரப் பணிப்பெண் மானனீகையிடம் உதயணன் காதலுற்று மகிழ்ந்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மானனீகைக்குத் திருமணம்

உதயணனை விரும்பிய மானனீகையை வாசவதத்தை தண்டிக்க வேண்டி, அவளின் கூந்தலைக் குறைக்கும்படி ஆணையிட்டாள். இதனையறிந்த கோசல நாட்டரசன், வாசவதத்தைக்குத் திருமந்திரவோலை ஒன்றை எழுதி விடுக்கிறான். அதில், 'கோசல நாட்டரசன் எழுதி விடுத்த திருமந்திரவோலை'. இதனை நங்கையாகிய வாசவதத்தை கண்டருள்க. கோப்பெருந்தேவியே! களங்கமில்லாத திங்கள் மண்டிலம் போன்ற முகத்தினையுடைய வாசவதத்தை என்பவள் நின் அருமைத் தங்கையாவாள். பசுமை நிறைந்த தாழ்ந்த நிலத்தின் கண் தோட்டக் கூறுகளையுடைய பாஞ்சாலத்தின் மன்னனாகிய ஆருணி, 'யான் சோர்வுற்றிருந்த செவ்வி பார்த்துப் படையோடு வந்து புகுந்து எனது நகரத்தைத் தாக்கி அவ்வாசவதத்தையை அவள் தோழிமாரோடு, சிறை பிடித்துக் கொண்டு போன பின்பு, அந்த ஆருணி மன்னனை வத்தவநாட்டு மன்னனாகிய நின் கணவன் எதிர்த்து நின்று

அறநெறி பிறழாமல் போர்செய்து கொன்று அவன், உவளகத்திலிருந்து மகளிர் பலரோடு அவ்வாசவதத்தையும் கவர்ந்து கொண்டு தன் மாளிகைக்குச் சென்று அம்மகளிர்களை இருகூறாக வகுத்து, உனக்கு ஒரு கூறும் உன் தங்கையாகிய அழகுமிக்க பதுமாபதிக்கு ஒரு கூறுமாக வழங்க, அவ்விரு கூற்றில் அவ்வாசவதத்தை உன் கூற்றில் அகப்பட்டு நின்பால் வண்ணமகளாய் இருந்ததனையும் யான் கேள்வியுற்றேன்.

மேலும், அவள் நின் சிற்றன்னை இட்டபெயரைக் கூறுவதில்லை. நாங்கள் இட்ட வாசவதத்தை என்னும் பெயரையும் கூறுவதில்லை. ஆனால் அவள் வசுந்தரி மகள் என்று உலகம் கூறும். உம்மிடத்தில் 'மானனீகை' என்னும் பெயரோடு அவள் விளங்குகிறாள் என்று கேள்வியுற்றேன். அன்புமிக்க நங்காய்! நின் தங்கையாகிய அவ்வாசவதத்தையை (மானனீகை) நீ ஆராய்ந்து தெரிந்து கொண்டு அவள் எய்திய துன்பத்தையும் துடைத்து, அவளை அழைத்துப் போக யான் நின் அரண்மனைக்கு வரும் துணையும் அவள். மயக்கத்தை ஒழித்தருள்க! தையால்! இதுவே என் வேண்டுகோளாம்! என்று எழுதியிருந்தது. அதை,

*'கோசலத் தரச னோலை மங்கை*
*வாசவ தத்தை காண்கதன் றங்கை*
*மாசின் மதிமுகத்து வாசவ தத்தை*
*பாசவற் படப்பைப் பாஞ்சா லரசன்*
*சோர்விடம் பாரத்தென் னூரெறிந் தவளுடன்*
*ஆயமுங் கொண்டு போய பின் பவளை*
*நேர்நின் றனனாய் நெறிபடப் பொருதுகொல்*
*வத்தவர் பெருமான் மங்கையர் பலருடன்*
*பற்றினன் கொண்டு நற்பதிப் பெயர்ந்து*
*தனக்குந் தங்கை யியற்பது மாபதி*
*அவட்குங் கூறிட் டளிப்பத் தன்பால்*
*இருந்ததுங் கேட்டேன் வசுந்தரி மகளெனப்*
*பயந்த நாளொடு பட்டதை யுணர்த்தாள்*

*தன்பெயர் கரந்து மான னீகையென்*
*றங்கொரு பெயர்கொண் டிருந்ததுங் கேட்டேன்*
*அன்புடை மடந்தை தங்கையை நாடி*
*எய்திய துயர்நீர்த் தியான்வரு காறும்*
*மைய லொழிக்க தைய றான்மற்*
*றிதுவென் குறையென எழுதிய வாசகம்'*[97]

என்னும் பாடல் பகுதியும் குறிப்பிட்டுள்ளது. இத்தகு வாசகங்களைப் படித்த வாசவதத்தை மனம் வருந்தி, மானனீகைக்குத் தன் மன்னருடன் திருமணம் செய்துவைக்கிறாள். ஆகவே, கோசல நாட்டரசனின் ஓலை வழி மானனீகை தண்டனை இன்றி மன்னருடன் இனிதே வாழ்ந்து வருகின்றாள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆராயுமிடத்து, திருமுகவுத்தி, காப்பியத்தில் உதயணன் சிறைப்பட்ட தகவலை வெளிப்படுத்தவும், அவன் வாசவதத்தையிடம் கொண்டுள்ள காதலை வெளிப்படுத்தவும், இழந்த நாட்டைப் பெறவும், பிரச்சோதனன் உதயணனிடம் நட்பு வேண்டுதலைத் தெரிவிக்கவும், யவனமொழித் திருமுகம் வரைதலில் காதலை வெற்றிக் கொள்ளவும், மானனீகை அரசியாவதற்கும் அமைந்துள்ளமை போற்றத்தக்கது.

## நிமித்தங்களும் நிகழ்வுகளும்

மனிதன் தன் வாழ்வில் நம்பிக்கையை உருவாக்கினான். நம்பிக்கைக்குக் காரணம் அறிய இயலாத நிலையில், அதை மூடநம்பிக்கை எனப் பழிக்கலுற்றான். இருப்பினும், மனிதனுக்கு ஊறுகள் ஏற்பட்ட நிலையில் அவற்றிற்கும் காரணம் கற்பித்துக் கொள்கிறான். அதனடிப்படையில் அவனுக்கு நம்பிக்கை உண்டாகிறது. அத்தகைய நம்பிக்கையின் வழியே நிமித்தம் தோன்றியது. நிமித்தக் கூறுகளும் உருப்பெற்றன.

மக்களிடையே நிமித்தம் செல்வாக்குப் பெற்றது. அத்தகு நிமித்தத்தையும், அதனால் ஏற்படும் நிகழ்வுகளையும் ஆராய்வது இன்றியமையாத ஒன்றாகும். ஆதலால் அவற்றை நிமித்தம் – சொல்லும் பொருளும் நிமித்தக் கூறுகள், காற்றும் மேகமும்

கலத்தல், பிடிவீழ்தல், வயவன் ஒலி, வரைபட நிமித்தம், வெள்ளைப் பூ கையினின்றும் கீழ்நழுவுதல், இடக்கண் ஆடலும் இடத்தோள் அசைதலும், கனவு ஆகிய நிலைகளில் இங்கு ஆராயப்படுகின்றன.

நிமித்தம் – சொல்லும் பொருளும்

'நிமித்தம்' என்னும் சொல்லிற்கு வேர்ச்சொல் கண்டறியப்படவில்லை. திராவிடச் சொல்லகராதியும் நிமித்தம் என்ற சொல்லைச் சுட்டவில்லை. நிமித்தம் என்ற சொல்லைப் பகுத்துக் காணின் அது பொருள் தரவில்லை. எனவே, நிமித்தம் பிறமொழிச் சொல்லாக இருக்கவே வாய்ப்பு உள்ளது.

'நிமித்தம்' என்ற சொல் நிமித்தம் என்ற பொருளில் தொல்காப்பியத்தில் இடம்பெறுகின்றது. அதாவது,

*'அச்சமும் உவகையும் எச்சம் இன்றி*
*நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்*
*காலங் கண்ணிய வோம்படை யுளப்பட*
*ஞாலத்து வரூஉம் நடக்கையது'*[98]

என்பதாகும். இதில் நிமித்தம் என்ற சொல் 'குறிப்பு' அல்லது அறிவிப்பு என்ற பொருளில் ஆட்சி பெறுகிறது.

'நிமித்தம்' என்ற சொல் காரணம், கூட்டம் ஆகிய பொருட்களிலும் பயின்று வந்துள்ளது. 'புணர்தல், புணர்தல் நிமித்தம்' என்று சொல்லுமிடத்து, 'காரணம்' என்ற பொருளில் இடம்பெறுகிறது. மேலும்,

*'பாங்கர் நிமித்தம் பன்னிரண்டென்ப'*[99]

என்றவிடத்துக் 'கூட்டம்' என்ற பொருளில் பயின்று வந்துள்ளது. ஆகவே, நிமித்தம் என்பதற்குக் குறிப்பு, காரணம், கூட்டம் எனப் பொருள் பொதுவாக அமையப் பெற்றாலும், சிறப்பாகக் குறிப்பு என்னும் பொருளையே குறிக்கின்றது.

நிமித்தம் குறிக்கும் பிற சொற்களும் உள்ளன. அதாவது, காரணம், சகுனம், பொருட்டு, அடையாளம் என்பதாகும். இவற்றுள் சகுனம் வடமொழிச் சொல்லாகிறது. எனினும் இன்று

வழக்கில் ‘நிமித்தம்’ என்ற சொல் பயன்படுத்தப்படாது சகுனமே வழங்குகிறது.

## நிமித்தக் கூறுகள்

நிமித்தம் நன்மை, தீமை என இருவகையுடையது. ஆங்கிலக் கலைக்களஞ்சியம் நிமித்தம் ஐவகையுடையது என்கிறது. அவை,

1. இடி, மின்னல், விண்மீன்கள்
2. பறவை மூலம் திசை மற்றும் ஒலிகள்
3. பறவை தீனி கொள்ளும் தன்மை
4. மிருகங்கள் மற்றும் வாலுள்ள ஊர்வனவற்றின் ஓசைகள்
5. இயற்கைக்கு மாறுபட்ட செயல்கள் நிகழ்தல்

ஆகிய நிலைகளில் நிமித்தக் குறிகள் அமைகின்றன. இத்தகு நிமித்தக் கூறுகள், மக்கள் வாழும் சூழ்நிலைக்கேற்ப மாறுபடக்கூடியன என்பர்.

மேற்குறிப்பிட்ட நிமித்தக் கூறுகள் சிலவற்றை உதயணகுமார காப்பியத்தில் காணமுடிகின்றது. அவை காற்றும் மேகமும், வரைபடம், வெள்ளைப்பூ, யானை, வயவன், இடக்கண் ஆடலும் இடத்தோள் அசைதலும், கனவு ஆகியன.

## காற்றும் மேகமும்

உதயணகுமார காவியத்தில் ‘காற்றும் மேகமும் கலத்தல்’ என்னும் நிமித்தம் இடம் பெற்றுள்ளது. இந்த நிமித்தம் ஊருக்கு முதலில் துன்பத்தைத் தந்து, பின்பு அரசனுக்கு இன்பத்தைத் தரும் என்பது சோதிட மரபு. இது அவந்தி நாட்டரசனுக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்வு.

காற்று, மழை, தீ ஆகியவற்றால் அகநகரும் புறநகரும் அணுகுதற்கரியனவாயும் அங்கங்கே பலர் போர் செய்தற்குப் புறப்பட்டதும் அவற்றைக் கண்டு அஞ்சிய வாசவதத்தையைக் காக்க ஏற்ற அரணாக விளங்குபவனான உதயணன் தன்

குதிரையிலே அவளை ஏற்றித் தன் நகரம் செல்லலும், அதை அவந்தியரசனின் வீரர்கள் 1500 பேர் சென்று தடுத்தலும், உதயணனின் வீரர்கள் அவர்களை வெற்றி கொள்ளலும், வாசவதத்தையை அவந்தியரசன் என்னுடைய இடத்திற்குச் செல்கிறேன் என்று செல்லலும் ஆகிய செயல்கள் எல்லாம் மாயம் போலும் நடந்துள்ளன. அதை,

*'கார்முகத் தெழுந்தது கடுவளி வளியென'*
*'புகைக்கொடி சுமந்து பொங்கெரி தோன்றப்*
*புறமதிற் சேரியும் குறுகுதற் கரிதாக்*
*காற்று மெரியுங் கலந்துடன் தோன்ற'*

*'....... உதயண குமரனோ*
*குடம்பிடி யேற்ற லுற்றஎன மாகித்*
*தடம்பெருங் கண்ணியைத் தலைவயிற் பணிந்திரந்*
*தேற்றின் மேற்றலும் காற்றெனக் கடாஅய்'*

*'தன்னகர்க் கெடுத்த தருக்கின னாதலின்*
*ஆயிரத் தைவர் காவற் காளையர்*
*மாயிரு ஞாலத்து மன்னுயிர் உண்ணும்*
*கூற்றெனத் தொடர வேற்றுமுன் விலங்கி'*

*'வென்றி யெய்திக் கொன்றுபலர் திரிதரப்'*

*'.... காதல் அணங்கைத் தந்தவன்*
*விடுக்கப் போந்தனென் மீண்டிது கூறெனத்'*

*'மாயம் போலும் காவல...'*[100]

என்னும் செய்யுள் பகுதிகள் எடுத்துரைத்துள்ளன. இதில் காற்று, மழை, தீ ஆகிய இயற்கை நிகழ்வுகளாகவும், அங்கங்கே பலர் போர் செய்யப் புறப்படல் நிகழ்ச்சி மக்களுடையதாகவும், வாசவதத்தையை உதயணன் தன் நகருக்கு அழைத்துச் செல்லலும் ஆகிய நிகழ்வுகள் சுட்டப்பட்டுள்ளன.

மேலும், நடைபெற்ற மேற்குறித்த நிகழ்வுகளால் அவந்தி மன்னன் முதலில் சினந்து பிறகு சினம் ஆறியமை நலம்.

வாசவதத்தையை உதயணனுக்கு மணம் செய்து வைப்பதற்குத் தன் தேவியோடு உடன்படல். வாசவதத்தையின் பிரிவிற்கு வருந்திப் பிறகு தெளிதல் ஆகியவையும் நிகழ்ந்தன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதாக,

*'செருச்செய் நெடுங்கண் டீயெனச் சிவப்பப்*
*பிரச்சோ தனனெனும் பெரும்பெயர் விளக்கம்'*
*'பொற்றார் மார்பன் பொங்குபு வெகுண்டு....'*
*'புனற்படு நெருப்பிற் பொம்மென வுரறி*
*ஆறிய வண்ண மணிமுக நோக்கித்*
*தெளிதகு கிளவி செவ்விதிற் கேட்ப'*
*'உரிமைத் தேவியர்க் கொருமீக் கூரிய'*
*'தானே யுணர்த்துந் தன்மைய னாகி'*[101]

என்னும் இப்பகுதி அமைந்துள்ளது. ஆகவே மனித வாழ்வில் நிகழவிருக்கும் மாற்றத்தை உணர்த்திற்று எனக் கருத முடிகிறது. காற்று – உதயணன் குதிரையில் விரைந்து வந்தமையை உணர்த்திற்று; தீ– வாசவதத்தையைத் தன்னோடு குதிரையில் ஏற்றிச் செல்வதைக் கண்டு போர் வீரர்கள் போர் நிகழ்த்தியமையை உணர்த்திற்று; மேகமும் மழையும் – நிகழ்வை எண்ணிச் சினந்து பிறகு ஆறி, வாசவதத்தையைத் திருமணம் செய்து உதயணனுக்குக் கொடுத்தமையை உணர்த்தின எனப் புலப்படுகின்றன.

வரைபடம்

வரைபட நிமித்தமாவது, வரைபடத்தில் உள்ள ஒரு முழுஉருவம், தன் உறுப்புகளுள் ஒன்றை மழுக்கிய நிலையில் பெற்றிருப்பது. அதாவது அங்கம் குறைந்து காணப்படுவதாகும். அங்கம் குறைந்து இருப்பது தன் கிளைஞர்களுள் (நட்பு) ஒருவரை இழத்தல் என்னும் பொருளதாகும் என்பதான நம்பிக்கை. இத்தகைய நம்பிக்கை உதயணனிடத்தில் காணப்பட்டது.

உதயணனின் நண்பன் யூகி, ஒரு வரைபடம் ஒன்றை வரைந்து சாங்கியத்தாய் வழியாக உதயணனுக்குக் கொடுக்கின்றான். அந்த வரைபடம், உதயணன் உருவம் போன்று அமைந்த படம். அப்படத்தில் நான்கு கண்களைப் பொறித்து அவற்றுள் மேலேயுள்ள கண்ணை மழுக்கியதாக அமைக்கப் பெற்றுள்ளது. இதனைக் கண்ட உதயணன் வியந்து, மனிதருடைய உறுப்புகளுள் அடிகள்– ஆட்கள்; தோள் – மனைவி; பல் – மக்கள்; கண்– தோழர்; தலை – இருமுதுகுரவர் என்னும் நூற்கருத்தை அறிந்தவனாதலின் கண்கள் நான்கனுள் மேலாய கண் மழுங்கியிருத்தலை அறிந்து, நம்முடைய தோழர்கள் நால்வருள் மேம்பட்டவனான யூகிக்கு ஏதோ துன்பம் உள்ளது' என்று கவலையுற்று நோக்கிய பொழுது சாங்கியத்தாய் எதிர்ப்பட்டாள். சாங்கியத்தாய் உதயணனை வணங்கி, 'உச்சைனி நகரத்திலிருந்து வந்து கொண்டிருந்த போது, பசியின் மிகுதியால் யூகி, வழியில் அமர்ந்து அவலை உண்டான். அப்பொழுது அவல் விக்கி இறந்து போனான்' என்று கூறினாள். அதனைக் கேட்ட உதயணன் கண் சோர்ந்து கீழே வீழ்ந்து தன்னை மறந்து கிடந்தான் என்பதாக,

*'வத்தவன் வடிவினோர் வண்ணப் பாவை*
*வித்தகஞ் சிறப்ப வேறுபட எழுதி*
*நாற்க ணாக அமைத்துமற் றவற்றுள்*
*மேற்கண் மழுகிய வினையிற் றாகக்*
*கைத்தொழில் அமைத்தபின் உய்த்தவட் குணர்த்தி'*

*'கருத்துமெய் தெரிதல் காவலன் கடனெனத்*
*தேவியோ டிருந்த செவ்விக் கோட்டியுள்*
*ஓவியப் பாவை உய்த்தவள் காட்ட*
*நுண்ணுணர் மன்னன் தன்னொப் பாகிய*
*கண்ணுளர் நுட்பத்துக் கருத்துநோக்கி'*

*'தாளே பெருங்கிளை தோளே துணைவி*
*பல்லே மக்கள் கண்ணே தோழர்*

*முடிய குரவர் அடியே ஆளாம்*
*ஆக்கையி னாடி அங்ஙனங் காணின்*
*மேற்கட் குற்றது விதுப்பியல் வழாது*
*நூற்கண் நுனித்த நுண்ணிணர் வெண்ணத்தின்*
*யூகி தன்வயின் உறுகண் வெந்தொழில்*
*ஆகிய துண்டெனா ஐயந் தேறி*
*உதயணன் மாழாந் துயிர்வாழ் வொழிகெனச்*
*சிதர்பொறி எந்திரம் போலச் சிதர்ந்து*
*தாரும் பூணு மார்பிடைத் துயில்வரச்*
*சோருங் கண்ணினன் துளங்கிமெய்ம் மறப்ப"*[102]

என்னும் பகுதி அமைந்துள்ளது. இதில் 'கண்' எனும் உறுப்பு மழுங்கிய வரைபடம் என்றிருப்பதால் 'கண்' நண்பனை உணர்த்தி, யூகி இறந்தான் என்ற நிகழ்வை உதயணனுக்குத் தெளிவுபடுத்தியமையால் மெய் சோர்ந்து மயங்கினான் என்று விளங்குகிறது. ஆகவே இது தீ நிமித்தம் பாற்பட்டது என அறியமுடிகிறது.

வெள்ளைப்பூ

வெள்ளை நிறப்பூ என்னும் நிமித்தம் போகத்திற்கு இடையூறு விளைவிக்கும் என்பதாகும். சூழலின் செயலுக்கேற்ப இந்த நிமித்தத்தின் பயன் வெளிப்படும். இந்நிமித்தம் உதயணன்பால் நிகழ்ந்தது.

உதயணன் தன் நண்பன் யூகியை எண்ணியவாறே ஒரு பசு மரத்தின் அடியைச் சார்ந்து கவலையில் ஆழ்ந்திருந்தபோது, தன்கையில் கொண்டிருந்த வெள்ளைநிறப்பூ, அக்கையினின்று நழுவித் தனது துடையின்மேல் வீழ்ந்தது. அதை,

*'கவற்சி மனத்தொடு காண்டக இருந்ததன்*
*தாண்முதல் சார்ந்து தோண்முதற் றோழனை*
*உள்ளி உள்ளழிந் தொழுகுவரைத் தடக்கையின்*
*வெள்ளிதழ் நறுமலர் வீழ...'*

*'பசுமரஞ் சார்ந்தனை ஆதலின் மற்றுநின்*
*பசுமரஞ் சார்ந்தனை ஆதலின் மற்றுநின்*
*உசிர்ப்பெருந்தோழன் உண்மையுங் கூட்டமும்*
*கண்ணகன் றுறைந்த கடிநாள் அமையத்துத்*
*திண்ணி தாகுந் தெளிந்தனை யாகுமதி*
*விரும்பிநீ பிடித்த வெண்மலர் வீழ்ச்சி*
*பொருந்தி நீ அளக்கும் பொருவில் போகத்*
*திடையூ றுண்மை முடியத் தோன்றும்*
*வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது*
*தாழ்ந்த கச்சைநின் தாள்முதல் தங்கலிற்'*[103]

என்னும் பகுதி எடுத்துரைக்கின்றது.

இத்தகு நிமித்தம், அரசன் பசுமரத்தைச் சார்ந்திருந்தமையால் அது அவனின் உயிர்த் தோழன் உயிரோடு இருத்தலையும், பின்பு வந்து அவனை அவன் அடைதலையும் நன்கு புலப்படுத்துவதாகும். பிடித்திருந்த வெண்பூவின் வீழ்ச்சி இப்போது அரசன் அனுபவிக்கும் போகத்திற்கு இடையூறு உண்டு என்பதை அறிவிக்கிறது. அந்தப்பூ வேறிடம் செல்லாமல் அவன் காலின் கீழிடத்தை அடைந்தமையால் அந்தப் போகத்தை மீண்டும் அவன் அடைவான் என்பதையும் அவன் பூமியின் மேல் இருந்தமையால் அவன் தலைநகரத்தையும் நாட்டையும் பெற்று அரச உரிமையையும் அடைவான் என்பதையும் எடுத்துரைக்கிறது. அதை,

*'பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை*
*நிலத்துமிசை இருந்தனை ஆதலின் மற்றுநின்*
*தலைப்பெரு நகரமொடு நன்னாடு தழீஇக்*
*கொற்றங் கோடலு முற்றிய தாகி*
*முன்னிய நின்றவை முடியத் தோன்றும்'*[104]

என்ற பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. ஆகையால் இந்தப் பூவின் நிமித்தம் உதயணனுக்கு அனுபவித்துக் கொண்டிருக் கின்ற இன்பங்களுக்கு இடையூறு நேர்ந்து, பிறகு நீங்கி, அவ் வின்பங்களைப் பெற்று மகிழ்வான் என்பதைத் தெளியமுடிகிறது.

பிடி வீழ்தல் (யானை)

'பிடி வீழ்தல்' என்னும் நிமித்தமானது, பிடியானை ஒன்று தன்மீது இருவர் அமர்ந்த நிலையில் விரைந்து வேகமாக நடந்து செல்லும். அப்போது மெய்வருந்த நோயால் மெலிவுற்று வீழ்ந்து விடும். இந்த நிகழ்வே பிடிவீழ்தல் நிமித்தம் ஆகும். இது தீச்செயல் நிகழவிருப்பதை உணர்த்தக் கூடியது.

இந்த நிமித்தம் உதயணனுக்கு ஒரு முறை நடந்தது. உதயணன், வாசவதத்தையோடு யானை மீது ஏறிப் பயணம் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது யானை நோயால் மெலிவுற்றது. அதனையறிந்த உதயணன் வாசவதத்தையைக் கீழே இறக்கினான். உதயணனும் கீழே இறங்கினான். அப்பொழுது அந்தப் பிடி உதயணனிடம் காலைப் பரப்பிக் கொண்டு, 'நான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள்க' என்று வணங்குவது போலத் தன் தலை அவன் காலில் படும்படி வீழ்ந்தது. அதனைக் கண்ட உதயணன், அது வீழ்ந்த இயல்பையும் அது நோக்கிய திசையையும் நிமித்த நூல் வழி ஆராய்ந்து பார்த்து, முதலில் தனக்குத் துன்பம் உண்டாகும் என்றும், பிறகு அத்துன்பம் நீங்கப் பெற்றுத் தன்னிடத்தைத் தான் அடைதல் கூடும் என்றும் தெரிந்துகொண்டான்.

அதனை,

*'பாவடி நிலனுறப் பரப்பி யுதயணன்*
*சேவடி தலையுறச் செய்தது பொறுவென*
*வணக்கம் செய்வது போல மற்றுத் தன்'*

*'வீழ்ந்த வாறுமது நோக்கிய திசையும்*
*தேர்ந்த நூல்வழித் திண்ணி தாகலின்*
*அந்நிலை யெய்து மிடுக்கணும் பின்னிலைத்*
*தன்னிலந் தழூஉதலுந் தான்வலிப் பெய்தி'*[105]

என்னும் பகுதி குறிப்பிடுகின்றது. இதில் யானை திடீரெனச் சாய்ந்து வீழாது, காலைப் பரப்பி வணங்குவது போல் உதயணன் காலில் படியும்படி சாய்ந்ததால் அவனுக்குத் துன்பம் ஏற்பட்டுப் பின் அத்துன்பம் அகலும் என்பதை உணரச் செய்துள்ளமை

வியக்கத்தக்கது. இந்த நிமித்தத்தின் செயலாகப் பாலை நிலம் கடக்கையில் கள்வர்கள்வழி மறித்துத் துன்புறுத்தித் தாக்குகின்றனர். அப்பொழுது உதயணன், வாசவதத்தையோடு இருந்து கொண்டு கள்வர்களுடன் போரிட்டு வென்றான். இந்த நிகழ்வு நிமித்தம் உணர்த்தியது போன்றே உதயணனுக்கு நிகழ்ந்தது எனத்தெளிய முடிகின்றது.

வயவன் ஒலி

'வயவன்' என்னும் பறவை குடுமி நெற்றியையும் கூர்ஞுளியன்ன வல்வாயை உடையது. அப்பறவையின் ஒலி, போர்வரும் என்னும் செய்தியை அறிவிக்கும் ஒரு நிமித்தம் ஆகிறது. இந்நிமித்தம், உதயணன், வாசவதத்தையோடு காட்டில் தங்கியிருந்தபோது ஏற்பட்டது. இலவமரத்தின் உச்சியில் வயவன் அமர்ந்து கொண்டு பல முறை ஒலித்தது. அதனைக் கேட்ட உதயணன், அச்சம் கொண்டு, இனி விரைவில் பகைப்படைவரும் என்பதை இது தெரிவிக்கின்றது என்பதை உணர்ந்து அம்பைத் திருத்தி, வில்லை இடக்கையில் தாங்கிக் கொண்டு நின்றான். அவன் எதிர்பார்த்தபடியே சவரரும் புளிஞரும் கூடிநின்று உதயணனைக் கண்டனர். நாற்புறமும் சூழ்ந்து தாக்கினர். உதயணன் அவர்களோடு போரிட்டு அவர்களை வென்றான் என்பதை,

*'குடுமி நெற்றிக் கூருளி யன்ன*
*வல்வாய் வயவன் வறண்மரத் துச்சிப்*
*பல்காற் குரைத்தது பகற்படை தருமெனப்*
*பாட்டிற் கூறக் கேட்டன னாகி'*

*'அன்றவட் பாடிய வணிவரி வயவன்*
*இன்றிவ னின்னே யிகற்படை தருதல்*
*பொய்த்த லின்றி மெய்த்த தாமென*
*அங்குபடு புட்குர லாண்டகை யஞ்சி*
*வெங்கணை திருத்தி வில்லிடந் தழீஇ*
*இரும்பிடை யிட்ட பெரும்புடைக் கச்சையன்'*

*'வேட்டன செய்யும் வேட்டுவினைக் கடுந்தொழிற்*
*கவர்கணை வாழ்க்கைச் சவரர் புளிஞர்'*

*'செல்வோர் கதுமெனச் செம்மலைக் கண்டே*
*கல்லெனத் துவன்றிக் கார்கிளர்ந் ததுபோல்*
*அரவச் செய்கையர் வெருவரத் தாக்கப்'*

*'பைவரி நாகத் தைவாய்ப் பிறந்த*
*ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல*
*ஒழிந்தோர் ஒழியக் கழிந்தோர் காணா'*

*'பன்மாண் படைஞர் பரந்தனர் சூழ*
*மலிந்தது ணேறி வந்தவர் பெருமன்*
*கவிந்த துன்பங் கையிகந் தகலப்*
*பொலிந்தன னென்ப பொருபடை யிடையென்'*[106]

என்ற பகுதி தெரிவிக்கின்றது. ஆதலால் உதயணனுக்குப் பறவையொலி நிமித்தம் துன்பத்தை உண்டு பண்ணி, பிறகு அத்துன்பம் நீங்கப் பெற்றது என்பது தெளிவாகிறது.

## இடக்கண் ஆடலும் இடத்தோள் அசைதலும்

சமுதாயத்தில் மனித உறுப்புகளின் செயலாலும் நிமித்தம் அமைவதுண்டு. கண் ஆடலும், தோள் அசைதலும் நிமித்தத்திற்குரியனவாகின்றன.

உதயணன், வாசவதத்தை விரும்பியபடியே தழையும் தாரும் கண்ணியும் பிணையலும் கைக்கொண்டு குதிரையை ஊர்ந்து, அவளைக் காணச் சோலைவனத்திற்கு விரைந்து வருகையில், அவனின் இடக்கண் ஆடியது. இடத்தோள் அசைந்தது. அந்த நிமித்தப்பயன் அறிந்தவனாதலால், உயிர்க்கிழத்தி நீங்கினாள். இங்கே இவள். அவளைக் காணாத வருத்தத்தால் தோழர்களோடு தான் சில காலம் புறத்தே இயங்குதல் கூடும் என எண்ணியபடியே அவன் மிகக் கவலையுற்று வருகிறபொழுது, எதிரே பெரும் புகையின் எழுச்சியைக் கண்டு மிகவும் விரைந்து வந்தான். வாசவதத்தை இருந்த இடத்திலும், நெருப்பு பரவித் தோன்றக் கண்டான். ஊக்கம் குன்றியவனாகிச் செல்லும்பொழுது தனக்கு ஒரு சோர்வும் நேராதபடி உருமண்ணுவாவும், வயந்தகனும் மாய மள்ளரைக் கூட்டத்தோடு துரத்தி அடிப்பவர்களாகித் தன் வரவு

பார்த்துக் கொண்டு எதிரே நிற்பதைக் கண்டான். அப்போது காஞ்சன மாலை,

*'நாவலந் தண்பொழில் நண்ணா ரோட்டிய*
*காவலன் மகளே! கனங்குழை மடலோய்!*
*மண்விளக் காகி வரத்தின் வந்தோய்!*
*பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்*
*பொன்னே! திருவே! அன்னே! அரிவாய்!*
*நங்காய்! நல்லாய்! கொங்கார் கோதாய்!*
*வீணைக் கிழத்தீ! வித்தக வுருவீ!*
*தேனேர் கிளவீ! சிறுமுதுக் குறைவீ!*
*உதயண குமர னுயிர்த்துணைத் தேவி*
*புதையழ லகவயிற் புக்கனையோ!'*[107]

என்று காட்டுத்தீயின் இடையே அகப்பட்டு வருந்தும் மயிலைப் போல இடைவிடாமற் புலம்பி அலமந்து வீழ்ந்து புரண்டு அழுதலை அவன் பார்த்தான். வாசவதத்தைக்கு ஏதோ ஒரு துன்பம் வந்துவிட்டது என்று மயங்கித் திடீரென்று நிலத்தில் வீழ்ந்தான் என்பதற்கு அவனுக்கு ஏற்பட்ட இடக்கண் ஆடலும் இடத்தோள் அசைதலும் என்னும் நிகழ்வே காரணமாகியுள்ளது எனக் கருதற்கு இடமுண்டு.

மேலும், இந்த நிமித்தத்தின் உட்பொருளாக, தனக்கு ஏற்பட்ட துன்பம் நீங்கி, இழந்த மனைவி திரும்பப் பெறப்படுவாள் என்று உள்ளமையால், வாசவதத்தை மீண்டும் உதயணனுக்குக் கிடைக்கப் பெற்றமையும், நாட்டைத் திறம்பட ஆட்சிபுரிய வேண்டும் என்பதாலேயே யூகியின் திறத்தாலே நான் இவ்வளவு காலம் பிரிந்திருக்க நேர்ந்தது என்பதையும் வாசவதத்தை கூறியதால் இந்த நிமித்தத்தின் பயன் விளங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கனவு**

கனவு என்ற சொல்லின் வேர்ச்சொல் 'கனா' என்பதாகும். கனா – காணுதல் என்னும் பொருளையுடைய தாதலால் கனா தொழிற்பெயராயிற்று. 'கனா' என்பது திராவிடச்

சொல். தமிழ்ச்சொல் கனவு. அது ஒரு காட்சி. கற்பனைக் காட்சி அல்லது மீட்டுக் கொணர்ந்து பார்த்தல்[108] என்னும் பொருளதாகிறது. கனவின் வெளிப்பாடு கனற்றுதலைச் செய்கிறது.

கனற்றுதல், உள்ளத்து உணர்வுகளைத் தோண்டி வெளிப்படுத்துதல் எனச் சுட்டுகிறது தமிழ் அகராதி[109] ஆகவே உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துதல் காரணமாக இந்தப் பெயர் தமிழரால் இடப்பட்டிருக்கலாம் என வெளிப்படுகிறது.

இந்தக் கனவு, உரையாடல், முடிக்கலன், வெள்ளானை, சிங்கக்குட்டி ஆகிய பொருண்மைகளில் அமைந்துள்ளது.

உரையாடல்

வாசவதத்தை இறந்துவிட்டாள் என்று நண்பர்கள் வாயிலாக உணர்ந்த உதயணன் மிகவும் வருந்தினான். அதனால் அவனுடைய நண்பர்கள் அவனை வேற்றிடத்திற்கு அழைத்துச் சென்றனர். அந்த இடத்தில் உதயணன், பதுமாபதியைச் சந்திக்கின்றான். அவளை மணக்க விரும்பிய நிலையில் அவளுடைய கண்ணியையும் பெற்று அன்று மகிழ்வுடன் உறங்குகின்றான். அவ்வமயம் கனவு, வாசவதத்தை மாசுபடிந்த கூந்தல், அழுக்கேறிய உடை, பொலிவிழந்த முகத்துடன் தோன்றி உரையாடிப் பழிப்பதாக அமைகிறது. அதை,

*'நீருடை வரைப்பி னெடுமொழி நிறீஇய*
*பிரியாப் பெருக்கத்துப் பிரச்சோ தனன்மகள்*
*அரியார் தடங்க ணதிநா கரிகி*
*மணியிருங் கூந்தன் மாசுகண் புதைப்பப்*
*பிணியொடு பின்னி யணிபெறத் தாழ்ந்து*
*புல்லெனக் கிடந்த புறத்தள் பொள்ளென*
*நனவிற் போலக் காதலன் முகத்தே*
*கனவிற் தோன்றக் காளையும் விரும்பி*
*மாசில் கற்பின் வாசவ தத்தாய்*
*வன்க ணாளனேன் புன்கண் டீர*
*வந்தனை யோவென வாய்திறந் தரற்றப்'*[110]

என்னும் பகுதி சுட்டுவதால், கனவில் உதயணனும் வாசவதத்தையும் உரையாடுவதாக அமைந்துள்ளமை கருதத்தக்கது.

முடிக்கலன்

உதயணனோடு வாசவதத்தை உறங்குகையில் இடையாமத்தில் கனவு ஒன்று கண்டான் உதயணன். அந்தக் கனவு, ஒரு தெய்வமங்கை உதயணனிடம், எம் இறைவனாகிய குபேரன் உம்மை அழைக்கிறான் வருக என்றாள். அதற்கு உதயணன், வாசவதத்தையையும் உடன் அழைத்துவர என்மனம் விரும்புகின்றது. அதனை நீ அங்கீகரிக்க வேண்டும் என்றான். உடனே அத்தெய்வமங்கையும் சம்மதித்து இருவரையும் கையில் தாங்கிக் கொண்டு பறந்துசென்று குபேரனை அடைய, குபேரன் சிங்காசனம் ஒன்றைக் காட்டி, அதில் அமரும்படி சொல்ல, உதயணன் தேவியோடு அதில் அமர்ந்தான். அப்போது, குபேரன் கட்டளைப்படி ஒரு மணிமுடியை அத்தெய்வமங்கை கொணர்ந்து உதயணனுக்குக் கொடுக்க, அதை அவன் பெற்று வாசவதத்தையுடன் நகர் வந்து, அதை அவளுக்கு அளிக்க, அதை அவள் தன் மார்பினிற் சேர்த்தினாள். அது சூரியன் போல் தோன்றி அவள் வயிற்றில் புகுந்தது. அவ்வமயம் அவள் அஞ்சித் திடீரென்று எழுந்தாள் என்பதாக அமைந்தது. அதாவது,

*'துயிலிடை யாமத்துத் துளங்குபு தோன்றி'*

*'ஆனாக் கனவிடை மாநிதிக் கிழவன்'*

*'வெள்ளேறு கிடந்த வெண்டாமரைப்பூக்'*

*'கீயக் கொண்டுதன் னிடைமுலைச் சேர்த்தலும்*
*காய்கதிர்க் கனலியிற் கதுமெனப் போழ்ந்து*
*புக்கது வீழ்தலும் பொருக்கென வெரீஇ'*[111]

என்னும் பகுதி, அதைச் சுட்டியுள்ளது.

இதில் உதயணனுக்கு ஒருமகன் பிறப்பான் என்றும், அவன் வெள்ளிமலையை ஆளுவான் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. ஆகவே, இந்தக் கனவின் நிமித்தம் உதயணனுக்கு ஓர் இளவரசன் பிறப்பான் என்பதைத் தெளிவுப்படுத்தி யுள்ளது.

## வெள்ளானை

வாசவதத்தை சூலுற்றிருந்த காலத்தில், ஒரு நாள் உறக்கத்தில் விடியற்காலைப் பொழுதில் கனவு ஒன்று கண்டாள். அதில், ஆகாயத்தில் செல்லும் வெள்ளானை ஒன்று வந்து துதிக்கையைச் சுருட்டிக் கொண்டு தன் வயிற்றில் புகுந்தது. அப்பொழுது ஆகாயத்தில் துந்துபி முழங்கப் பலர் துதித்ததாகவும், பின்பு அதனை உமிழ்ந்து விடவே அஃது இறகுகளைப் பெற்றுப் பறந்து சென்று ஒரு வெள்ளி மலையின் மேல் ஏறி அதில் விளங்கிய ஒரு சூரியனை விழுங்கியதாகவும் அமைந்துள்ளது. அதை,

*பெருமதர் மழைக்க ணின்றுயில் பேணிய*
*இன்ப யாம மியைந்த வைகறை*
*நன்பெருங் கனவி னடுங்குவன ளேற்று*
*வெள்ளத் தானை வியலக வேந்தன்*
*பள்ளி யேற்றபின் பதனறிந்து வணங்கி*
*என்னைகொ லடிக ளின்றியான் கண்டது*
*விண்ணக மருங்கில் வெண்முகில் புரைவதோர்*
*அண்ணல் யானையென் கண்ணுற வந்துதன்*
*ஆய்வலித் தடக்கை சுருட்டுபு முறுக்கியென்*
*வாய்புக் கடங்கிய பொழுதிற் சேய்நின்*
*றந்தர மருங்கிற் றுந்துபி கறங்கப்*
*புகழ்ந்துபல ரேத்தப் பொருக்கெனப் பெயர்த்தே*
*உமிழந்தனெ னுமிழப் பரந்திறகு தோற்றிப்*
*பல்லோர் மருளப் பறந்துசென் றுயர்ந்தோர்*
*விண்மிசை ஞாயிறு விழுங்கக் கண்டனென்*[112]

என்றும்,

*பொள்ளென வெகுண்டு நோக்கிப்*
*பொருமனத் துருகி மன்னன்*
*ஒள்ளிதழ்த் தத்தை தன்னை*
*யுள்ளியே துயிலல் செய்ய*
*வெள்ளையே றிருந்த வெண்டா*
*மரையினைக் கொண்டு வந்து*
*கள்ளவிழ் மாலைத் தெய்வங்*
*கனவிடைக் கொடுப்ப கண்டான்*(பா. 191)

என்றும் பாடற் பகுதிகள் குறிப்பிட்டுள்ளன. ஆதலால், வெள்ளானை நிமித்தம், வாசவதத்தை, வித்தியாதர உலகில் சென்று பெரும்பகைவன் ஒருவனை வென்று அங்கே சக்கரம் செலுத்தும் ஒரு புதல்வனைப் பெறுவாள் என்பதை அறியலாகிறது.

சிங்கக்குட்டி

கந்தர்வபுரத்தின் அரசனாகிய நீலவேகனுக்கு நாகதத்தை என்பவள்பால் தோன்றிய அநங்க விலாசினி என்பவள் ஒரு நாள் துயிலும்பொழுது ஒரு கனவு ஒன்றைக் கண்டாள். அந்தக் கனவில், ஒரு சிங்கக்குட்டி பூமியிலிருந்து வந்து தனக்கு மாலை சூட்டியது என்று தன் தந்தையிடம் அவள் கூறினாள். அவனும் கனவின் பயனைச் சுமித்திரர் என்னும் முனிவரிடம் கேட்டறிந்தான். அதாவது, பூமியிலிருந்து தீரனான ஓர் இளைஞன் வந்து உன் மகளுக்கு மாலை சூட்டுவான். பிறகு இங்கே சக்கரவர்த்தியுமாகி எல்லா அரசர்களையும் அடக்கி ஆட்சி புரிந்து விளங்குவான் என்பதாகும். அதை,

*கரும்பார் மாலை யமளித் துயிலிடைக்*
*கரும்பார் நன்மொழி காதற் கனவிடை*
*விரும்பு சிங்கமீன் வீரியயச் சாபந்தான்*
*பரம்பு மண்ணின்று பாங்கி னெழுந்ததே*

(பா. 279)

*வரைமி 'சைவந்து மன்னிய தன்முலை*
*அரிய முத்தணி யாரத்தைக் கவ்வியே*

*விரைசெய் மாலையை வீறுடன் சூட்டவும்*
*அரிவை கண்டுத னனையர்க்கு ரைத்தனள்*
(பா. 280)

*அறிந்த ருள்செய் தனனம் முனிவனும்*
*செறிந்த பூமிவாழ் திருமரு கன்வரும்*
*அறைந்த நின்மகட் காகு மணவரன்*
*நிறைந்த நேமியிந் நிலமு மாளுவன்* (பா. 282)

என்னும் பாடல்பகுதிகள் எடுத்துரைக்கின்றன. ஆகவே, சிங்கக் குட்டி மாலை சூட்டுவது போன்றதொரு கனவானது, அநங்க விலாசனையை வலிமை வாய்ந்த இளம்பருவத்தையுடையவன் வந்து மணந்து வாழ்வான் என்பது விளங்குகிறது.

ஆராயுமிடத்து, கனவு நிமித்தம், மனைவி தன் கணவனின் கள்ளக்காதலைக் கண்டு பழிப்பதைப் போலவும், சூலுற்ற தாய்க்கு உலகையாளும் மகன் பிறப்பான் என்பது போலவும், இளம்பெண்ணொருத்திக்குப் பூமியாளும் வாலிபன் வந்து மணப்பான் என்பது போலவும் அமைகிறது எனக் கருத முடிகிறது.

**மீவியற்கை**

மீவியற்கை என்பது, இயற்கைக்கு அப்பாற்பட்ட தோற்றம் அல்லது செயலைக் குறிக்கும் என்பர்.[113] அதாவது இயற்கையிறந்த நிகழ்ச்சியைக் கொள்வர். இத்தகு மீவியல்பு உதயண குமார காவியத்தில் உதயணனுக்கு அமைந்துள்ளது.

வாசதத்தை கருவுற்றிருக்கும்போது அவளுக்கு வான்வழிப் பயணம் மேற்கொள்ள விருப்பம், அவ்விருப்பம் நிறைவேற உதயணன் வான்வழிச் செல்லும் இயந்திரம் ஒன்றை அமைத்தான். அவ்வியந்திரம் மீவியல்பாற்றல் அளிக்கும் மந்திரம் ஒன்றால் நண்பன் நஞ்சுகன் உதவியால் அமைக்கப் பெற்றது. அதனால் வாசவதத்தையின் விருப்பம் நிறைவேற்றப் பட்டது.

அதாவது,

*உமையொடு புணர்ந்த விமையா நாட்டத்துக்*
*கண்ணணங் கவிரொளிக் கடவுளைப் போலத்*
*தடவரை மார்பன்...*
*தானுந் தேவியுந் தகைபெற வேறி*
*வானோர் கிழவனின் வரம்பின்று பொலியத்*
*தேனார் கோதையொடு திறவதி னிருப்பர்*

*விண்ணவு மலையவு மேவன பிறவும்*
*ஒண்ணுதன் மாத ருவப்பக் காட்டி*
*உரிமைத் தேவி யுறுநோய் நீக்கிப்*
*பொன்னகர் புக்கனன் புகழ்வெய் யோனென*[114]

என்பதாகும்.

இதில், மந்திரம் ஓதி, நஞ்சுகன் மூலம் வானில் பறக்கும்படியான பொறியொன்று அமைத்து அதில் ஏறி உதயணனும் வாசவதத்தையும் மற்றும் உதவிக்குச் சில நண்பர்களும் ஆக வானில் பறந்தபடியே வானுலகைக் கண்டு மகிழ்ந்து, வாசவதத்தையின் மன விருப்பத்தை நிறைவேற்றினர் என விளக்கப்பட்டுள்ளது.

ஆகவே, வாசவதத்தையின் மனவிருப்பம் நிறைவேற மீவியல்பாற்றல் மந்திரம் ஒன்றால் நஞ்சுகன் உதவியோடு மந்திர யந்திரம் பொறி அமைக்கப்பட்டது என்பதும், அப்பொறிவழி வான்வழிப் பயணம் செய்து உதயணன் வாசவதத்தை முதலானோர் மகிழ்ந்தனர் எனக் கருதமுடிகிறது.

துறவு

துறவு என்பது பற்று அறுத்தல் என்னும் பொருள் உடையது. மனிதன் நிலவுலக வாழ்வினின்று பற்றற விளங்குவதற்குத் துறவே அடிப்படை. அத்துறவே பிறவிப் பிணி நீங்கும் நிலை. ஆதலாலே அறிவுடையோர் மனிதப் பிறவியில் அன்புடனும் அறத்துடனும் வாழ்ந்து துறவை மேற்கொள்வர்.

துறவை எய்துவரே வீடுபேறடைவர் என்பது சமயமரபு. சமயநெறி மனித வாழ்வில் ஐம்பது விழுக்காடு எனலாம். ஆகவேதான் உலகியல் வாழ்வை நன்கு உணர்ந்த அறிவுடையோர் துறவு நெறியில் ஈடுபட்டுப் பிறவியைத் துறக்கின்றனர்.

இத்தகு துறவு நெறியைப் பின்பற்றியே உதயணகுமார காவியத்தில் உள்ள சதானிகன், விக்ரன், உதயணன், அவனின் தேவியர் நால்வர் மற்றும் அவனின் நண்பர்கள் முதலானோர் ஒழுகினராவர்.

சதானிகன் துறவெய்தல்

உதயணனின் தந்தை சதானிகன் துறவை மேற்கொண்டான். அதற்கு உலகியல் வாழ்வான அரச வாழ்வில் இயற்கையினின்று தப்பமுடியவில்லை என்பதே அடிப்படைக் காரணமாகிறது.

ஆகவேதான்,

*உதயண குமரன் றன்னை*
*யுற்றுட னழைத்துப் பூமிப்*
*பதமுனக் காக வென்று*
*பார்த்திபன் பொடுத்துப் போகிக்*
*கதமுறு கவலை நீங்கும்*
*காட்சிநற் றவத்த னாகி*
*இதமுறு யோகந் தன்னி*
*லெழில் பெறநின்றா னன்றே* (பா. 27)

என்ற பாடல், சதானிகன் சேதி நாட்டிலிருந்த உதயணன்பால் சென்று அவனை வத்தவ நாட்டிற்கு அழைத்து வந்து மைந்தனே! நீ ஆள்கின்ற அச்சேதி நாடே அல்லாமல் இந்த வத்தவநாட்டு அரசு உரிமையும் உன்னுடையதே யாகுக! என்று கூறி அந்த நாட்டினையும் உதயணனுக்கே வழங்கி, காட்டகத்தே சென்று சினம் முதலிய தீக்குணங்களும் துன்பங்களும் ஒரு சேர நீங்குதற்குக் காரணமான நற்காட்சியை உடையவனாய்த் தவ ஒழுக்கம் தாங்கி இன்புறுதற்கிடனான யோக

நிலையின்கண் அழகுற நிலைத்திருந்தான் எனச் சதானிகனின் துறவு நிலையை விளக்கியுள்ளது. ஆகவே உதயணனின் தந்தை சதானிகன் உலகியல் வாழ்வின் அரச வாழ்வை எய்திய பிறகு துறவை மேற்கொண்டான் என்பது அறியக்கிடக்கின்றது.

### விக்கிரமன் துறவெய்தல்

உதயணனின் தாய்மாமன் விக்கிரமன் ஆவான். இவன் வைசாலி, நகர அரசை ஆண்டவன். தனக்கு மகப்பேறு இன்மையால் தன் தங்கை மகன் உதயணனிடம் அரசை வழங்கி துறவெய்தியதை,

*முனியொடு தங்கை தன்னை*
*முயன்றிரந் தெய்தி நாகம்*
*தனையன வெங்க யத்திற்*
*றனையனை யேற்றிப் போய்த்தன்*
*மன்னிறை நாட்டை யந்த*
*மருகனுக் கீந்து போந்து*
*முனிவனம் புகுந்து மாமன்*
*முனிவனாய் நின்றா னன்றே* (பா. 23)

என்னும் பாடல், உதயணனையும், தன் தங்கை மிருகாபதியையும் அழைத்துச் சென்று, தனக்கு அதுகாறும் நிறைவைத் தந்த அரசை உதயணனுக்கு வழங்கி மகிழ்ந்தான். பிறகு துறவை மேற்கொண்டான் எனக் குறிப்பிட்டுள்ளது. ஆதலால் விக்கிரமன் அரச வாழ்வைத் துறந்து, துறவை மேற்கொண்டான் என்பது விளங்குகிறது.

### உதயணன் துறவெய்தல்

உதயணன் தன் அரசை, தன் புதல்வன் நரவாணனிடம் ஒப்படைத்து மகிழ்ந்து தவமேற்கொள்ள விரும்பி, தன் தேவியர் நால்வரை அழைத்து, யான் அழகிய இம்மனை வாழ்க்கையைத் துறந்து தவமேற்கொண்டு செல்வேன். ஆகலின் நீவிர் வேண்டுவது யாது? கூறுமின்? என்று கேட்க, மின்போன்ற நுண்ணிடையையுடைய அத்தேவிமார் தாமும், புரவலனே!

எமக்கும் தவத்தின்மேற்செல்வதே பொருளாகும். ஆகவே நும்முடனே வந்து யாமும் எமக்காகும் குற்றமற்ற சிறந்த தவத்தையே மேற்கொள்வேம் என்று கூறினர்.

அதை,

*தேவியீர்நீர் வேண்டியதென்*
*திருமனை துறந்துபின்*
*மேவுவனற் றவமென்ன*
*மின்னிடைய மாதரும்*
*போவதுபொ ருளெமக்கும்*
*புரவலனே நின்னுடன்*
*தாவில்சீர் விழுத்த வமுந்*
*தாங்குதுமென் றிட்டனர்* (பா. 357)

என்னும் பாடல் குறிப்பிட்டுள்ளது. இதில் தேவியர் நால்வரும், அமைச்சர் நால்வரும் (யூகி, உருமண்ணுவா, இடபகன், வயந்தகன்) ஆகிய எண்மரும் உதயணனுடன் சென்று தரும வீரர் என்னும் முனிவர் உறையும் வளமிக்க நல்ல மலர்ப் பொழிலை வலமாக வந்து மிக்க அருளைப் பொழிகின்ற அம்முனிவர் திருவடிகளிலே வீழ்ந்து அன்புடன் வணங்கித் தவந்தர வேண்டினர்.

அம்முனிவர் பெருமானும் இவர்க்குத் துறவறம் உணர்த்தற்குரிய காலமும் இஃதேயாம் என்று துணிந்து, உலகத்தைப் பற்றி உண்டாகும் நன்ஞானமும் நற்காட்சியையும் நல்லொழுக்கம் முதலிய ஒழுக்கத்தையும் சிறப்புறவே நன்கு அவர்களுக்கு உணர்த்தினார். பிறகு அம்மன்னர் முதலியோர் தவக்கோலம் தாங்கினர் என்பதை,

*காலமிது காட்சிதலை*
*கண்டுணர்த்தல் கைக்கொண்டு*
*ஞாலநிகழ் ஞானமு*
*நன்கு மிகவே யுணர்த்திச்*

*சீலமாதி யாயொழுக்கஞ்*
*சீருட னளித்தபின்*
*கோலமான குஞ்சிமுதல்*
*வாங்கித் தவங் கொண்டனர்* (பா. 360)

என்ற பாடல் குறிப்பிட்டுள்ளமை தெளிவாகிறது.

ஆராய்ந்தால் உதயணன் தந்தை போன்றே தவநெறிப் பூண்டான் என்பதும், அவனுக்கு உண்மையாக இருந்து தொண்டு புரிந்த துணைவியர், அமைச்சர் ஆகியோரும் தவநெறியைப் பின்பற்றினர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# முடிவுகள்

தமிழன்னையின் அணிகலன்களாகத் தமிழ்க் காப்பியங்கள் விளங்குகின்றன. ஐஞ்சிறுகாப்பியங்களுள் உதயணகுமார காவியம் பெருங்கதையின் நிறைகதையாகும்.

உதயணகுமார காவியத் தலைவன் உதயணன் அரசோச்சுபவன். அவனின் வாழ்வியல் உண்மைகளாகப் பன்முகத் திறமுடைமை, அகம்–புறம், திருமுகநெறி, நிமித்தம் நிகழ்வு, மீவியற்பு, துறவு ஆகியவை உள்ளன.

உதயணின் கல்வித்திறம், கட்டடக்கலை அறிவு, புதையலறிதல், நீரூற்றறிதல், நீரின் தன்மையறிதல், வில்வித்தையில் சிறப்பெய்தல், யாழிசைக்கலை, ஓவியக்கலை, ஒப்பனை செய்யுந்திறன் என்று அமைந்துள்ளமை போற்றற்குரியது.

காதல் நிலையில் மிகத் தோய்ந்த நிலை எய்துகிறான் உதயணன். அகப்பொருள் மரபு நிலை பின்பற்றியே அகவாழ்வை மேற்கொள்கிறான்.

சமணக் காப்பியத் தலைவர்கள் நிலைப்படியே உதயணனும் பல தாரம் மணம் புரிபவனாக உள்ளான். இவனின் களவொழுக்கத்தில் புணர்ச்சிகள், கண்ணிதரு புணர்ச்சி, குரங்குதரு புணர்ச்சி, கோட்டான் தரு புணர்ச்சி என்றமையப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

உதயணன் பெண்ணின்ப நுகர்ச்சியுடையவன். அழகும் இளமையும் உடைய பரத்தையின்பால் காமம் மிக்கவன் என்னும் கருத்தைப் பரப்பும் செயலுடையவனாக விளங்கியிருப்பது காதலில் தன்னை மறந்த நிலையுடையவன் என உணர முடிகின்றது.

அதேபோன்று போர் மரபைப் போற்றும் வகையிலும் உதயணன் பல போர்களைச் செய்து வெற்றிச் சிறப்பைச் எய்தியுள்ளான் என்பதற்குச் சான்றாகச் சவரர் புளிஞர் ஆகியவர் களுடனான போர், மாய யானையுடனான போர், பிரச்சோதனனின் வீரர்களுடனான போர் முதலானவை அமைந்துள்ளன. இவனின் போர்நெறி மரபு, பண்டைய மரபைப் பின்பற்றியே அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அதில் மாயயானையுடனான போர் மட்டும் சற்று வேறுபட்ட நிலை.

பல்திறன் பெற்ற உதயணன், அரசேற்கையில் அவனின் திறமைகளுக்குச் சோதிப்பின்றியும் போரின்றியும் அரசேற்கிறான் என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக அரசனுக்கு நண்பன் அமைச்சராவதில்லை. அமைச்சர், அரசனை வீழ்த்தி, தான் அரசனாக வேண்டும் என்று எண்ணுவதே பெரும்பான்மை. ஆனால் உதயணனின் நண்பன் யூகி சிறுபிராயத்திலிருந்தே நண்பனாகவும், அவனைப் போன்று கலைவல்லானாகவும் விளங்கியுள்ளமையாலும், அவன் காதல் வயப்பட்ட நிலையில் அவன் நாட்டையும் புகழையும் இழக்க நேரிடும் என்று, தன்னுடைய அறிவுத் திறத்தால் சூழ்ச்சியொன்றால் அவனின் ஆபத்துக் காலத்தில் அவனைக் காப்பாற்றி மீட்டுக் கொணரும் திறம் பெற்றுள்ளமையால் அந்த யூகி, நண்பனாயிருந்து, அமைச்சனாகி, பிறகு அரசனாகிறான் என்பதும் போற்றுவதற்குரியன.

ஓர் அரசன் திருமுகம் வரைவதென்பது செங்கோலோச்சுவதற்கும், மக்களைக் காப்பதற்கும் அண்டை அயல்நாட்டரசர்களோடு சுமூக உறவு வைத்துக் கொள்வதற்குமாகும். ஆனால் அத்தகு திருமுக வரைவை, உதயணன் தன் காதலிக்கு, தன் மனைவி முகத்தில் ஒப்பனை அலங்காரமாகச் செய்துவிடுத்து, காதலியிடம் இன்புற்று விளங்குகிறான் என்பது கலைநயத்தை உணர்த்துகிறது.

பணிப்பெண்ணைத் திருமணம்செய்து அரசியாக்கிக் கொண்ட அரசன், உதயணன் என்பது சிந்திக்கத்தக்கது.

இவனுக்கு ஏற்பட்ட நிமித்தங்களும் நிகழ்வுகளும் இவனின் இன்ப வாழ்வுக்குச் சற்றுத் தடைகளைத் தந்து பின்பு அவ்வாழ்வைத் தொடரச் செய்துள்ளன.

உதயணன் குபேரனின் உதவி கிடைக்கப் பெற்றான். இது அரச வாழ்வு மரபுக்குப் பொருந்தும்.

குபேரன் உதவியால் உதயணனுக்கு மீவியல்பாற்றல் கிடைத்தது. இந்த மீவியல்பாற்றல் அரசர் வாழ்வுக்கே உரியது.

அரச வாழ்வில் பல்புகழ் கொண்டு விளங்கினாலும் அரசன் நிலைத்த புகழை அடையவேண்டிப் பிற்பகுதி வாழ்வில் துறவு நெறி மேற்கொள்வது மரபு. அதன்படியே உதயணன் துறவு கொண்டான். கூடவே அவனுடனிருந்து உண்மையாகத் தொண்டாற்றி வந்த நண்பர்கள், அமைச்சர்கள், செவிலித்தாய், தேவியர் ஆகியோரும் துறவெய்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## குறிப்புகள்

1. கா.கோ. வேங்கடராமன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 135.
2. மது.சா. விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 121.
3. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 217–218.
4. கு. மகுடீஸ்வரன், சமணக்காப்பியத் தலைவர்கள், பக்.62–64.
5. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், ப. 55.
6. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 235–236.
7. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், ப. 65.
8. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 228–229.
9. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், பக்.75–76.
10. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 233–234.
11. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், ப. 83.
12. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, ப. 237.
13. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், ப. 92.
14. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 233–234.
15. சு. சண்முகசுந்தரம், பெருங்கதைப் பாத்திரங்கள், பக். 120.
16. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 230–231.
17. மேலது, பக். 223–224.

18. முன்றுறை அரையனார், பழமொழி நானூறு, பா. 21.
19. கொங்குவேளிர், பெருங்கதை, 3:12:13–17.
20. மேலது, 1:32:1,2.
21. கு. மகுடீஸ்வரன், சமணக் காப்பியத் தலைவர்கள், ப. 177.
22. புறம்.,பா.183, அ.7.
23. கொங்குவேளிர், பெருங்கதை, 1:32:12–16.
24. மேலது, 3:15:12–14.
25. மேலது, 3:15:48–50.
26. மேலது, 3:15:13, 34.
27. மேலது, 4:2:79.
28. திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி, பா. 729.
29. கொங்குவேளிர், பெருங்கதை, 3:9:15–20.
30. திருத்தக்கதேவர், சீவகசிந்தாமணி, பா. 1003.
31. கொங்குவேளிர், பெருங்கதை, 3:12:19.
32. தொல்.களவு, நூ. 2:3.
33. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், களவு. நூ., 3:2,3.
34. குறள். 1082.
35. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, ப.66.
36. குறுந். 40.
37. கம்பராமாயணம், மிதிலைக் காட்சிப்படலம், பா, 37.
38. குறள் 1100.
39. கொங்குவேளிர், பெருங்கதை, 1:1:25–27.
40. மேலது, 2:15:95–98.
41. மேலது, 2:15:116–119.

42. தொல்.பொருள்.களவு. நூ.3.
43. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், களவு. நூ.4.
44. குறள் 1081.
45. கொங்குவேளிர், பெருங்கதை, 2:15:114–116.
46. தொல். பொருள். களவு, நூ. 4.
47. கொங்குவேளிர், பெருங்கதை, 2:15:114–119.
48. மேலது, 4:13:57–62.
49. கு. மகுடீஸ்வரன், சமணக் காப்பியத் தலைவர்கள், ப. 37.
50. இளங்கோவடிகள், சிலம்பு. 9:9.
51. கொங்குவேளிர், பெருங்கதை, 2:15:136–148.
52. மேலது, 3:9:86–93.
53. மேலது, 3:9:131–138.
54. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், களவு, ச. திருஞான சம்பந்தம் உரை, ப. 60.
55. கொங்குவேளிர், பெருங்கதை, 3:6:54–60.
56. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், வரைவியல். நூ. 7:3.
57. கொங்குவேளிர், பெருங்கதை, 3:9:143.
58. மேலது, 2:16:109–119.
59. மேலது, 3:14:151–160.
60. உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள், நான்காம் தொகுதி, பக். 73–75.
61. கொங்குவேளிர், பெருங்கதை, 1:35:52, 53.
62. மேலது, 1:35:241–251.
63. தொல். பொருள். கற்பு, நூ. 1.
64. நாற்கவிராச நம்பி, அகப்பொருள் விளக்கம், கற்பு. நூ.1.
65. மேலது, வரைவியல், நூ.1.

66. கொங்குவேளிர், பெருங்கதை, 4:14:178–182.

67. மேலது, 4:17:108–114.

68. குறள் 1330.

69. கொங்குவேளிர், பெருங்கதை, 2:16:12–18.

70. மேலது, 2:16:63–78.

71. மேலது, 3:14:103–107.

72. மேலது, 3:14:108–112.

73. மேலது, 3:14:144–162.

74. மேலது, 1:45:81–87.

75. மேலது, 1:45:88–97.

76. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, நூ. 6.

77. கொங்குவேளிர், பெருங்கதை, 3:25:47–50.

78. மேலது, 3:27:107–116.

79. ஐயனாரிதனார், புறப்பொருள் வெண்பாமாலை, நூ. 8.

80. மேலது, ச. திருஞானசம்பந்தம் உரை, ப.21.

81. கொங்குவேளிர், பெருங்கதை, 3:19:34–43.

82. கழகத் தமிழ்க்கையகராதி, ப.239

83. கொங்குவேளிர், பெருங்கதை, 1:45:17–30.

84. மேலது, 1: 46: 329–331.

85. மேலது, 4:11:2–10.

85. மேலது, 4:11: 2–10.

86. மேலது, 4:10:92–96.

87. மேலது, 4:10:111–121.

88. மேலது, 4:13:55–62.

89. மேலது, 4:13:63–70.

90. மேலது, 4:13:71–79.

91. மேலது, 4:13:84–87.

92. மேலது, 4:13:88–91.

93. மேலது, 4:13:98–99.

94. மேலது, 4:13:115–123.

95. மேலது, 4:13:130–136.

96. மேலது, 4:13:147–150.

97. மேலது, 4:14:117–135.

98. தொல். பொருள். புறத். நூ. 30:16–19.

99. மேலது, களவு, நூ. 13.

100. கொங்குவேளிர், பெருங்கதை, 1:47:69, 71–73, 81–84. 86–89, 92, 94, 95, 98.

101. மேலது, 1:47:100–101, 105, 129–131, 151, 154.

102. மேலது, 2:10:87–91, 93–97, 100–111.

103. மேலது, 2:13:42–45, 50–58.

104. மேலது, 2:13:59–63.

105. மேலது, 1:53:22–24, 29–32.

106. மேலது, 1:55:20–23, 34–39, 67, 68. 112, 113, 116, 1:56:273–275, 280–283.

107. மேலது, 2:18:76–85.

108. சீ. சந்தா, காப்பியங்களில் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 141.

109. தமிழ் அகராதி, ப. 123.

110. கொங்குவேளிர், பெருங்கதை, 3:19:150–160.

111, மேலது, 5:1:76, 88, 93, 107–109.

112. மேலது, 5:1:140–155.

113. சீ.வசந்தா, காப்பியங்களில் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப. 159.

114. கொங்குவேளிர், பெருங்கதை, 5:4:51–56, 153, 154, 159, 160.

# துணைநின்ற நூல்கள்


01. அனவரதவிநாயகம்பிள்ளை, திரு. எஸ்., ப.ஆ., — கழகத் தமிழ்க் கையகராதி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், 154, டி.டி.கே. சாலை சென்னை – 600 018. 35–ஆவது பதிப்பு, 2003.

02. சண்முகசுந்தரம், முனைவர் சு., — பெருங்கதைப் பாத்திரங்கள் காவ்யா வெளியீடு, 16,இரண்டாம் குறுக்குத்தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 600 024, 2005.

03. சோமசுந்தரனார், திரு.பொ.வே., (உ.ஆ) — கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை, முதலாவது உஞ்சைக் காண்டம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை – 1, 1970.

04. " — கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை, இரண்டாவது இலாவாண காண்டம், திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை – 1, 1971.

05. " கொங்குவேளிர் இயற்றிய
பெருங்கதை,
மூன்றாவது மகத காண்டம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை – 1,
1962.

06. " கொங்குவேளிர் இயற்றிய
பெருங்கதை,
நான்காவது வத்தவ காண்டம்,
ஐந்தாவது நரவாண காண்டம்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை – 1,
1965.

07. சோமசுந்தரனார், திரு.பொ.வே., (உ.ஆ) உதயணகுமார காவியம்,
செய்யுளும் உரையும்,
திருநெல்வேலி தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகம் லிமிடெட்,
சென்னை – 1,
1964.

08. திருஞானசம்பந்தம், முனைவர் ச., (உ.ஆ) நாற்கவிராச நம்பி இயற்றிய
அகப்பொருள் விளக்கம்,
கதிர் பதிப்பகம், தெற்குவீதி
திருவையாறு – 613 204,
2ம் பதிப்பு, சூலை–2006.

09. " ஐயனாரிதனார் இயற்றிய
புறப்பொருள் வெண்பாமாலை,
கதிர் பதிப்பகம், தெற்குவீதி
திருவையாறு – 613 204,
முதற்பதிப்பு, டிசம்பர்–2006.

10. பசுபதி, ம.வே., (ப.ஆ.), டாக்டர் உ.வே.சா. அவர்களின் உரைநடை நூல்கள் (4ஆம் தொகுதி), டாக்டர் உ.வே.சா. நூல் நிலையம், 2, அருண்டேல் கடற்கரைச் சாலை, பெசன்ட் நகர், சென்னை–90, 2005.

11. புலியூர்கேசிகன் (உ.ஆ), தொல்காப்பியம், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை–600 108, பத்தாம் பதிப்பு, 1998.

12. " சிலப்பதிகாரம், பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை–600 108, பதினான்காம் பதிப்பு, 1991.

13. மகுடீஸ்வரன், முனைவர் கு., சமணக்காப்பியத் தலைவர்கள் தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், இரண்டாவது தளம், இராயப்பேட்டை நெடுஞ்சாலை இராயப்பேட்டை, சென்னை–600 001, டிசம்பர் – 2004.

14. வசந்தா, சீ., காப்பியங்களில் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ஸ்ரீவித்யா பதிப்பகம், டி–39, 21–ஆவது தெரு, பெரியார்நகர், சென்னை – 600 082, முதற்பதிப்பு, டிசம்பர்–2001.

15. விமலானந்தம், மது. ச., தமிழ் இலக்கிய வரலாறு, அபிராமி பதிப்பகம், 7–பி, கொடிமரத்தெரு, இராயபுரம், சென்னை–600 013, மறுபதிப்பு – 2011.

# பின்னிணைப்பு

## உவமைகள்

உதயண அரசனின் வாழ்வு நெறிகளை வெளிப்படுத்துவதற்கு உவமைகள் பெருந்துணை புரிகின்றன. ஆதலால் அவற்றைத் தொகுத்து, வகைதொகை செய்து குறிப்பிடுவது சிறப்பாகும்.

புலவர் தாம் கூறவிழையும் பொருளை உள்ளதை உள்ளவாறு கூறாமல் சிலவற்றைச் சேர்த்து அழகுபடக் கற்பனையாகப் பாடிச் சுவையை உண்டாக்குவர். இது பண்டைப் புலவர் இயல்பு. அவ்வாறே காப்பியப் புலவர்களும் உவமை நலங்கொண்டு பாடல் இயற்றி, காப்பியம் தந்துள்ளமை போற்றற்குரியது.

உவமை இலக்கணம், அஃறிணை உவமை, உயர்திணை உவமை ஆகிய நிலைகளில் இங்கு ஆராயப்பட்டுள்ளது.

## உவமை இலக்கணம்

கவிஞர் ஒரு பொருளைக் கூறும்போது அதனோடு ஒப்புடைய பொருளை உவமை கூறும் இயல்பை உலகில் காணலாம். பொருளை நயம்படக் கூறுவது நலம் பயக்கும். உவமை கூறல் அன்று முதல் இன்று வரை இன்றியமையாததாய் உள்ளது.

தொல்காப்பியம் உவமை பற்றிக் குறிப்பிடும்போது, 'உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்' (தொல். உவ. 8) என்றும், உவமை தொழில், பயன், வடிவம், நிறம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைவதை,

*வினை, பயன் மெய்யுரு என்ற நான்கே*
*வகைபெற வந்த உவமைத்தோற்றம்*

என்று உவமை, உவமை வகை ஆகியவைகளைக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் உவமையின் சிறப்பை உணர்த்த 'உவமவியல்' என்ற ஓர் இயல் வகுத்துள்ளார். அவ்வியல் உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் பொதுவாய் அமைந்துள்ளது.

அணை வெள்ளத்தின்போது கரைந்துபோதல் என்னும் உவமை கையாளப்பட்டுள்ளது. உதயணனிடம் போர்வீரர்கள் மிகுதி. அதாவது வெள்ளம் போன்று வெள்ளம் மிகுதியானால் கரைபுரளுகையில் அணை தாங்காது. அதுவும் உப்பால் கட்டப்பட்ட அணை சிறிது நேரங்கூட தாங்காது. அதனால் உதயண அரசனின் வீரர்கள் வீரம் செறிந்து போர் ஆரவாரிக்கின்றபொழுது எளிதில் கரையும் தன்மை கொண்ட உப்பணை போல் விளங்கும் சங்க மன்னரின் வீரர்கள் விரைந்து அழிந்தோடினர் என்று குறிப்பிடத் தக்கது. எனவே, இங்கு கரையும் தொழிலை, போரில் எதிர்த்து நிற்க தாளமாட்டாது விரைந்து வீரர்கள் ஓடும் நிலைக்கு உவமைப்படுத்தப்பட்டுத் தொழிலுவமைக்கு உரியதாகியுள்ளமை கருதத்தக்கது.

**தேம்பால் (பயனுவமை)**

உதயணன் வாசவதத்தைபால் காட்சியெய்திக் காமுற்று விளங்குகின்றான். வாசவதத்தையும் உதயணன்பால் காமுற்று விளங்குகிறாள். இருவரும் காதலுற்ற நிலையில் தங்கள் அன்பை உள்ளத்துள் உள்ளெய்தி இன்புறும் நிலைக்குத் தேனும் பாலும் கலந்து தீஞ்சுவைப் பெற்றாற்போல் என்று தேம்பால் உவமைப்படுத்தப்பட்டுள்ளது. அதை,

*தேனினும் பாலினும் தீஞ்சுவைத் தாகிக்...*
*அமைப்பரும் காதலும் இமைப்பினு ளடக்கி*
*ஒருவயிற்போல வுள்ளழி நோக்க*

(பெருங். 1:32:44.47.48)

என்று கூறப்பட்டிருப்பதால், உதயணன், வாசவதத்தை ஆகியோர் தம் காதல், தேனும் பாலும் கலந்து தீஞ்சுவை பெற்றதைப் போல் எண்ணி மகிழத்தக்கது என்று விளங்குகிறது. ஆகவே இது பயனுவமைக்குச் சான்றாகியுள்ளது.

வாசவதத்தையைக் கண்டதும் உதயணன் அவள்பால் காதல் மிகுந்து தோய்ந்து விடுகிறான். அதனாலே அவன் அகமுகம் உள்ளவனாகிறான். ஆதலால் அரசோச்சுவதில் கவனக்குறைவு ஏற்பட்டுவிடும் எனக் கருதிய நண்பன் யூகியானவன் இடனறி சூழ்ச்சிக்கு திறமுடையவனாதலால் வாசவதத்தையை உதயணனிடமிருந்து பிரித்து பிறகு ஒன்று சேர்க்கிறான். அந்நிலையில் பிரிந்து துயரற்ற உதயணன் வாசவதத்தையைக் கண்டதும் மிக அகமகிழ்கிறான். அவ்வமயம்,

*தீந்தேன் கலந்த தேம்பால் போல* (பெருங். 4:7:192)

என்று இன்புற்றார்கள் என்பதைத் தெளிவுப்படுத்தப்பட்டுள்ளமையும் பயனுவமையுமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**இரண்டு திருமகள் (வடிவவுவமை)**

உதயணனின் தேவியராகிய வாசவதத்தை பதுமாபதி ஆகியோர் யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட கால்களையுடைய கட்டிலின் மேல் உள்ள மெல்லணை ஒன்றில் ஏறி அமர்ந்திருந்தனர். அத்தோற்றம்,

*திருவிரண் டொருமலர் சேர்ந்தவ ணுறையும்*
*பொருவரு முருவம் பொற்பத் தோன்றி*
(பெருங். 4:8:28,29)

என்றமைந்துள்ளமையைக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஒரு தாமரை மலரில் சேர்ந்து தங்கிய இரண்டு திருமகளிர் போல் விளங்கினர் என்று தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. இது வடிவ உவமைக்குக் காட்டாக விளங்குகிறது. இது உயர்திணை உவமையாக அமைந்துள்ளது.

**வெம்மைச்செல்வன் (நிறவுவமை)**

சிவந்த நிறத்தோடு விளங்கும் ஞாயிறு, உதயணனின், நிறத்திற்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளது. உதயணன் யானைமீது ஏறி ஊர்ந்து வருகிறான். இதற்கு நிற உவமை கூறுவதற்காக, யானை நிறம் நிழல் ஒத்தது. உதயணனின் நிறம் செம்மையொத்தது. ஆதலால் நிழலொத்த நிறத்திற்கு மேகத்தையும், செம்மையொத்த நிறத்திற்கு ஞாயிறையும் உவமப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது மேகத்தினிடையே தோன்றிய ஞாயிறு போன்று யானை மீது ஊர்ந்தான் உதயணன் என்பதை,

*நீல மால்வரை நிமிர்ந்துநடந் தன்ன*
*கோலக் குஞ்சரங் கொள்ளப் பண்ணிப்*
*பாகர் தருதலிற் பணையெருத் தேறிக்*
*கருமுகின் மருங்கி னிருளறுத் தேர்தரும்*
*வெம்மைச் செல்வன் மேனிலை பெற்ற*
*தண்மைத் திங்களிற் றகைக்குடை நிழற்ற*
*உதையண குமர னொளிபெறத் தோன்றப்*
(பெருங். 1:58:17–23)

என்னும் பகுதி சுட்டியுள்ளது. இது நிறவுவமைக்குச் சான்றாக வந்துள்ளமை தெளிவாகியுள்ளது. இப்படியாக, அஃறிணை உவமை உயர்திணை உவமையாக தொழில், பயன், வடிவம், நிறம் ஆகியவற்றின் அடிப்படையில் சான்றுகளுடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இதுகாறும் உவமைப்பொருள்களை ஆராயுமிடத்து மனித உருவத்திற்கும் உறுப்புகளுக்கும் உவமையாக நிலவு, சூரியன், வில், அம்பு, மலர், அரும்பு முதலியவற்றைக் குறிப்பிடுவது பொதுவான இயல்பு. அவ்வியல்புப்படியே இக்காப்பியத்திலும் ஆடவர், பெண்டிர் ஆகியோர்க்கு உவமப்பொருள்களாக மேற்குறித்த பொருள்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. மேலும் அகவாழ்வுக்கும் புறவாழ்வுக்கும் ஆக உதயண அரசன் வாழ்விற்குரிய பொருள்களுக்கும் உவமப்பொருள்களை உதயணகுமாரகாவியம் பயன்படுத்தியுள்ளது என்பது தெளிவாகிறது.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரிகம் | 55.00 |
| படைப்பு நெறிமுறைகள் | 150.00 |
| Comparative Studies in Literary Cultures | 100.00 |
| Sangam Classics : New Perspectives | 105.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள் | 100.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |
| தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம் | 170.00 |
| கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை | 45.00 |
| தமிழ் நாடக வகையும் வரலாறும் | 110.00 |
| வா.செ.கு.என்ற ஆளுமையாளர் | 50.00 |
| உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன் | 45.00 |
| மருதத்தில் மக்கள் வாழ்வியல் | 40.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1 | 85.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2 | 75.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1 | 125.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2 | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல் | 160.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல் | 95.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல் | 190.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1 | 140.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல் | 90.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல் | 55.00 |
| நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல் | 120.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.) | 65.00 |
| வல்லம் புராணம் | 200.00 |
| இதழியல் உலகம் | 120.00 |
| தமிழும் தமிழ்க் கற்பித்தலும் | 60.00 |
| படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு | 100.00 |
| பழந்தமிழும் கிளைமொழிகளும் | 65.00 |
| உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும் | 85.00 |
| அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும் | 115.00 |
| பெயரியல் | 55.00 |
| தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை | 45.00 |
| தலித் அறம் | 45.00 |
| பொதுவுடைமை இயக்க இதழ்கள் | 115.00 |
| தமிழில் இதழியல் | 270.00 |

---

உதயணகுமார காவியம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்